இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்

# 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

## எமது தூரநோக்கு

தேசிய அபிவிருத்திக் கொள்கைகளுக்கு இணையாக உயிரியல்-நேய நிலைபெறுதகு சுற்றாடலை உருவாக்கி முகாமைசெய்தல்

## எமது செயற்பணி

மிகவும் தகுதியான ஊக்கமுடைய ஊழியர்படையின் ஊடாக மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கு மழைநீர் வடிகாலமைப்பு, சதுப்புநில முகாமைத்துவ உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் பொறியியல் சேவைகளை வழங்குதல்

# *உள்ளடக்கம்*


| | *பக்க இலக்கம்* |
|---|---|
| தலைவரின் செய்தி | 01 |
| பொது முகாமையாளரின் செய்தி | 03 |
| கூட்டுத்தாபனம் பற்றிய தகவல்கள் | 06 |
| பணிப்பாளர்கள் சபை | 07 |
| சிரேஷ்ட முகாமைத்துவ குழு | 08 |
| இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு | 09-78 |
| கணக்காய்வு முகாமைத்துவ குழு அறிக்கை | 79 |
| நிதிசார் மீளாய்வு | 80 |
| பணிப்பாளர்களின் அறிக்கை | 81-82 |
| கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 83-101 |
| முழுமையான வருமான கூற்று | 102 |
| நிதி நிலைக் கூற்று | 103 |
| ஒப்புரவு மாற்றங்கள் கூற்று | 104 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 105 |
| முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் | 106-114 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 115-127 |
| பெறுமதி சேர்வு பற்றிய கூற்று | 128 |
| கூட்டுத் தாபனத்தின் நிதி சார்ந்த முக்கிய குறிப்புக்கள் | 129 |

## தலைவரின் செய்தி

2023 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த நிதியாண்டிற்கான இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் (இகாஅகூ) வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வு செய்த நிதிக் கணக்குகளையும் முன்வைப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக நான் கடமைகளைப் பொறுப்பேற்றதிலிருந்து, இது எனது தொழில் வாழ்க்கையில் மிகவும் சுவாரசியமான சவாலான காலகட்டம் என்பதை நான் இங்கு குறிப்பிடுவதற்கு விரும்புகின்றேன்.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும், இகாஅகூ நிலையான அபிவிருத்தியை ஊக்குவிக்கும் பல வணிகங்களை மேற்பார்வையிடும் பொருட்டு திறமையான முன்முயற்சிகளை செயற்படுத்தி அதன் மூலம் 2023 ஆம் ஆண்டிற்கு ஒரு வெற்றிகரமான முடிவை பெற்றுத் தந்துள்ளது என்பதை தெரிவிப்பதில் நான் மிகுந்த திருப்தி அடைகின்றேன். கருத்திட்டம் சார்ந்த செலவினங்கள் கணிசமானளவுக்கு குறைய நேரடியாக வழிவகுத்த பல்வேறு செலவுகளை குறைப்பதற்கான உத்திகளை செயற்படுத்திய போது சாத்தியமான முதலீட்டு வாய்ப்புகளைக் கண்டறியும் முயற்சிகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டன.

இந்தக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்கு சொந்தமான பெரிய ஒரு பொறியியல் நிறுவனமாக விளங்குவதால், நிதி செயல்திறன் அடங்கலாக சுற்றாடல், சமூகம் மற்றும் நிர்வாகம் ஆகிய விடயக் காரணிகளுக்கு சமளவில் முக்கியத்துவத்தை அளிக்கும் நிலையான வணிக மாதிரிகளை ஏற்றுக்கொள்வதை நாம் எமது பொறுப்பாக கருதுகின்றோம். ஆகையால், தனது சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் வகையில், கொழும்பு பிராந்தியத்தில் வெள்ள அபாயத்தை குறைக்கும் முகமாக திறைசேரியின் வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு அப்பால் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை எமது கூட்டுத்தாபனம் தொடர்ந்து மேற்கொண்டு நிறைவேற்றியது. நிகழ்நேர வானிலைத் தரவு உள்ளீடுகளை நீரியல்-வலு மாதிரியாக்கத்துடன் இணைக்கும் ஒரு நிகழ்நேர வெள்ள கண்காணிப்பு எச்சரிக்கை முறையான ஒருங்கிணைந்த வெள்ள கட்டுப்பாட்டு முறைமையை (IFMS) வெற்றிகரமாக செயற்படுத்தியதால், கொழும்பு பிராந்தியத்தில் நிகழும் வெள்ளப்பெருக்குகளை குறைக்க முடிந்தது.

நிர்மாண கைத்தொழிலுக்கு கடல் மணல் தடையின்றி வழங்கப்படுவதை உறுதிசெய்யும் முகமாக பொது-தனியார் கூட்டாண்மை மாதிரிகள் போன்ற முதலீட்டு மாற்று வழிகள் பற்றி நாம் ஆராய்ந்தோம்.

வணிக செயற்பாடுகளின் செயல்திறனை அதிகரிக்கும் முகமாக கொள்வனவு, கணக்கியல், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் ஏனைய வழமையான வணிக செயற்பாடுகள் என்பவற்றை நிர்வகிப்பதற்கான ERP (நிறுவன வள திட்டமிடல்) மென்பாகத்தின் பிரயோகத்தை இகாஅகூ விரிவுபடுத்தியது.

கௌரவ ஜனாதிபதி, கௌரவ பிரதமர், கௌரவ நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அந்த அமைச்சரவை அந்தஸ்துடைய அமைச்சின் செயலாளர் ஆகியோர் வழங்கிய பொன்னான வழிகாட்டலுக்கும் தலைமைத்துவத்திற்கும் எனது மனமார்ந்த நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த காலகட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ய அவர்களின் ஆதரவும் வழிகாட்டலும் இன்றியமையாதனவாக இருந்தன. இந்த விதிவிலக்கான சவாலான ஆண்டு முழுவதிலும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டிற்கு மறைமுகமாக பங்களித்த இகாஅகூ தாபனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ பதவியணியின் அர்ப்பணிப்புக்கும் நல்கிய ஒத்துழைப்புக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த இக்கட்டான காலகட்டத்தில் எமது ஊழியர்கள் நல்கிய பங்களிப்புக்கும் அவர்களின் அர்ப்பணிப்புக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இகாஅகூ தாபனத்திற்கு இந்த ஆண்டு முழுவதிலும்

ஆதரவை நல்கிய எமது பங்குதாரர்கள் அனைவருக்கும் பணிப்பாளர்கள் சபையின் சார்பாக எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களின் ஆதரவு இல்லாதிருந்திருந்தால், தற்போதைய செயல்திறனை எம்மால் அடைய முடியாது போயிருக்கும். பொது மக்கள் அடங்கலாக எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் எதிர்வரும் நிதியாண்டில் அவர்களின் தேவைகளை மிகவும் வினைத்திறனாக நிறைவேற்ற நாம் ஆவலுடன் உள்ளோம். மேலும், இந்த ஆண்டு முழுவதும் சபையின் உறுப்பினர்கள் வழங்கிய மதிப்புமிக்க ஆதரவிற்கும் அவர்கள் வழங்கிய வழிகாட்டலுக்கும் எனது சக சபை உறுப்பினர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கையில் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக எமது கூட்டுத்தாபனம் பொறுப்பான ஒரு கூட்டாண்மை நிறுவனமாக விளங்கி வருவதால் எமது சகல வணிக செயற்பாடுகளிலும் முகாமைத்துவ நடைமுறைகளிலும் சமூகத்திற்கு பொறுப்புக்கூறல், சுற்றாடல் பொறுப்புணர்வு மற்றும் பொருளாதார நம்பகத்தன்மை முதலிய அடிப்படை விழுமியங்களை நிலைநிறுத்துவதில் நாம் எம்மை அர்ப்பணிப்போம் என்பதற்கு உறுதியளிக்கின்றேன். சிறந்த கூட்டாண்மையுடைய நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு பங்களித்து, நிலையான அபிவிருத்தியை ஊக்குவித்து அதன் மூலம் எமது பொருளாதாரத்தின் மறுமலர்ச்சிக்கு சாதகமான பங்களிப்பை வழங்கவும் நாம் தயாராகவுள்ளோம்.

**பொறியியலாளர் ஹிரான் எஸ். பாலசூரிய**
**கட்டளை அதிகாரி**
**தலைவர்**
2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி

## பொது முகாமையாளரின் செய்தி

நாட்டில் சவால்கள் நிறைந்த பொருளாதார சூழ்நிலையிலும் ஒரு சாதகமான பயனுள்ள பதிவு சாதனையை உள்ளடக்கிய 2023 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வு செய்த நிதி கூற்றுக்களையும் முன்வைப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த கூட்டுத்தாபனம் 5,431 மில்லியன் ரூபா வருமானத்தையும் வரிக்குப் பின்னர் 938 மில்லியன் ரூபா இலாபத்தையும் பதிவுசெய்தது. வாடிக்கையாளர் கருத்திட்டங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் சொந்த கருத்திட்டங்கள் அதாவது கால்வாய்களையும் ஏரிகளையும் அகழ்ந்து துரப்புரவாக்குதல், காணி சீராக்கல் மற்றும் நிர்மாணம் ஆகிய கருத்திட்டங்கள், உள்ளூர் கைத்தொழிலுக்கான கடல் மணல் விற்பனை கருத்திட்டம் மற்றும் கெரவலப்பிட்டிய பூங்கா திண்மக்கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்கள் முதலிய கருத்திட்டங்களின் மூலம் ஈட்டப்படுகின்ற வருமானமும் இதில் அடங்குகின்றது.

700,000 எண்ணிக்கைக்கும் அதிகமான மக்கள் கடந்த 20 ஆண்டுகள் காலமாக பாதிக்கப்பட்டுள்ள கொஹுவல, பெப்லியான, இரத்தினபிட்டிய, தெல்கந்த, பெல்லன்வில, பொரலஸ்கமுவ, வேரஹெர, போகுந்தர மற்றும் கரதியான ஆகிய பகுதிகளில் ஏற்படும் வெள்ளப்பெருக்குப் பிரச்சினைகளுக்கு வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் தீர்வு காணப்பட்டுள்ளது. இது இஅ நிதியில் எமது உள்ளக பொறியியல் நிபுணர்களால் செயற்படுத்தப்பட்டு கூட்டுத்தாபனத்தின் வரலாற்றில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள மிக முக்கியமான ஒரு கருத்திட்டமாகும். இந்த கருத்திட்டத்தின் கீழ் 10 ஏரிகள் நடைபாதைகளுடனும் பொழுதுபோக்கு பகுதிகளுடனும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கொழும்பு-தெற்கு புறநகர் பகுதிகளில் நிர்மாண கட்டமைப்புகளுடன் சுமார் 50 கிலோமீற்றர் நீளமான வடிகாலமைப்பு வலையமைப்புத்தொகுதியின் பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கொலன்னாவ மழை நீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம் குறிப்பாக களனி ஆற்றின் வெள்ளப்பெருக்கு சமவெளியின் கொலன்னாவைப் பகுதியிலும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் வடிகாலமைப்பு கட்டுமானங்களை மேம்படுத்தி வடிகாலமைப்பு முறைமையிலுள்ள தடைகளை அகற்றுவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் ஒட்டுமொத்த பெறுமானம் 836.76 மில்லியன் ரூபாவாகும். 2023 ஆம் ஆண்டில், கால்வாய் பராமரிப்புப் பணிகள், கால்வாய்களினதும் மற்றும் தஹம்வெல, பசன்ன மற்றும் சலலிஹினி மாவத்தை ஆகியவற்றில் அமைந்துள்ள துணைக்கால்வாய்களின் நீரியல் நிர்மாணங்கள் தொடர்பான விரிவான பொறியியல் வடிவமைப்புத்திட்டங்களை தயாரித்தல் மற்றும் துப்பாவெல ஏரியை உருவாக்குதல், மஜிதிவத்தையில் பெட்டி வடிவ மதகுகளை நிர்மாணித்தல், போபட்டாவில் பெட்டி வடிவ மதகுகளை நிர்மாணித்தல், வென்னவத்தையில் பெட்டி வடிவ மதகுகளை நிர்மாணித்தல் மற்றும் அந்தப் பணிகளுடன் சம்பந்தப்படும் காணி சுவீகரித்தல் முதலிய பணிகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளன.

கொழும்பு பெரும்பாக நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ், மழை நீரை இறைத்து வடிகாலமைத்தனுப்பும் புனித செபஸ்தியன் வடபூட்டு, புனித செபஸ்தியன் தென்பூட்டு மற்றும் அம்பத்தலே ஆகிய மூன்று நீரிறைப்பு நிலையங்களும் புதிய முத்துவல் மழை நீர் வடிகாலமைப்பு சுரங்கப்பாதையும் மற்றும் ஆறு வெள்ளப்பெருக்கு தடுப்பு கதவு நிர்மாணங்களும் நிர்மாணிக்கப்பட்டு, கொழும்பு வடிகாலமைப்பு முறைமையின் நீர்வெளிச்செல் கொள்ளளவும், நீர்காவிச்செல்லும் கொள்ளளவும் அதிகரிக்கப்பட்டு கொழும்பு நகரின் வெள்ளப்பெருக்குப் பாதுகாப்பு நிலை மேம்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறியவை தவிர, நிகழ்நேரத் தரவு எதிர்வுகூறல் வசதியுடன் கூடிய ஒருங்கிணைந்த ஒரு வெள்ளப்பெருக்கு கட்டுப்பாட்டு முறைமை (IFMS) இலங்கையில் நவீன நீர் முகாமைத்துவ

நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளது. வெள்ளத்தைத் தணிக்கும் வகையில் மேற்குறித்த வெள்ளக் கட்டுப்பாட்டு வசதிகளை இயக்குவதற்கு தேவையான வழிகாட்டல்களை IFMS வழங்குகின்றது. மேற்கூறிய அபிவிருத்தி முறையின் மூலம் சரியான நேரத்தில் வெள்ளத் தணிப்பு நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டதன் பயனாக இகாஅகூ தாபனத்தால் கொழும்பு நகரில் வெள்ள சேதத்தை பெருமளவில் குறைக்க முடிந்தது.

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் வத்தளை மற்றும் களனி ஆகிய பிரதேசங்களில் வெள்ளப்பெருக்குகளைத் தணிக்கும் நோக்கில் ஒலியமுல்ல மழை நீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. எதிர்கால உட்கட்டமைப்பு வசதிகளின் நிமித்தம் காணிகளை அபிவிருத்தி செய்து வழங்குவதும் களனி மற்றும் வத்தளை ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும் இந்த கருத்திட்டத்தின் ஏனைய நோக்கங்களாகும்.

முன்மொழியப்பட்டுள்ள இந்த II ஆம் கட்டக் கருத்திட்டத்தில் பிரதானமாக இந்த கருத்திட்டப் பிரதேசத்தில் 02 எண்ணிக்கையான 15மீ$^3$/செக்கன் மற்றும் 20 மீ$^3$/செக்கன் கொள்ளளவுடைய நீரிறைத்தனுப்பும் நிலையங்களை நிர்மாணித்தல், பேலியகொட - புத்தளம் பிரதான வீதியிலுள்ள பாலத்தை புனரமைத்தல், அணைகளை அமைத்தல், ஏரிகளை அகழ்ந்து துப்புரவாக்குதல், கால்வாய்களை புனரமைத்தல் மற்றும் இனம் கண்டறிந்த குடும்பங்களை பொழுதுபோக்கு வசதிகளுடன் மீள்குடியேற்றுதல் முதலிய செயற்பாடுகள் உள்ளடங்குகின்றன. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை, இந்த கருத்திட்டத்திற்கு நிதி ரீதியில் 2,348.16 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டது. II ஆம் கட்ட நீரிறைத்தனுப்பும் நிலையத்தின் நிர்மானத்திலிருந்து 97% வீத முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார சூழ்நிலையில், போட்டி கேள்வி விலை மூலம் வெளிவாரி நிர்மாண ஒப்பந்தங்களைப் பெறுவதற்கு கூட்டுத்தாபனம் துல்லியமான நடவடிக்கைகளை எடுத்தது. உலக வங்கியின் நிதி உதவியில், காலநிலை நேர்த்தி நீர்ப்பாசன விவசாய கருத்திட்டத்தின் (CSIAP) கீழ் வடமேல், வடமத்திய, கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் 450 மில்லியன் ரூபா பெறுமதியான சிறிய நீர்ப்பாசன கருத்திட்டங்களை மறுசீரமைப்பதற்காக திட்டமிட்டபடி கட்டுமானப் பணிகளை செயற்படுத்தி, எதிர்காலத்தில் இதுபோன்ற ஒப்பந்தங்களைப் பெற கேள்வி மனு செயல்முறை வலுப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்து முக்கிய செயற்பாடுகளிலும், கூட்டுத்தாபனம் அதன் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனையும், செயல்திறனையும் மற்றும் இலாபத்தையும் மேம்படுத்தியுள்ளது. இதன் மூலம் மீளாய்வு ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் அடையப்பட்டுள்ளன.

எமது கூட்டுத்தாபனம், தனது சுற்றாடல்நேய செயற்பாட்டிற்குள் பொறியியல் சிறப்பையும் வளங்களையும் பயன்படுத்தி நிலையான, சூழலுக்கு உகந்த உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் மூலோபாய பங்காளியாக நாட்டின் பொருளாதாரத்திற்கு கணிசமான பங்களிப்பை நல்கியுள்ளது.

இறுதியாக, 2023 ஆம் ஆண்டிற்கு நாம் திட்டமிட்டிருந்த பணிகளை துரிதப்படுத்த வழங்கிய வழிகாட்டலுக்கும் தலைமைத்துவத்திற்கும் கௌரவ நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளருக்கும் மற்றும் எமது கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் 2024 ஆம் ஆண்டிற்கு தயாராகி வரும் இந்நிலையில், பணிப்பாளர்கள் சபையின் பெறுமதியான ஆலோசனைக்கும் அதன் தொடர்ச்சியான ஆதரவிற்கும் நான் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இந்த சவாலான ஆண்டில் பெறுபேறுகளை அடைவதற்கு ஒத்துழைப்பை நல்கிய சிரேஷ்ட முகாமைத்துவ பதவியணிக்கும், கூட்டுத்தாபனத்தின் அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். மீளாய்வு

ஆண்டை வெற்றிகரமாக எதிர்கொள்ள பல வழிகளில் எமக்கு உதவிய அமைச்சினதும் மற்றும் இராஜாங்க அமைச்சுக்களினதும் கீழ் இயங்குகின்ற ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகள், எமது வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பொறியியலாளர் ஸ்ரீமதி சேனாதீர**
**பொது முகாமையாளர்**
2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ஆம் திகதி

## கூட்டுத்தாபனம் பற்றிய தகவல்கள்

### சட்ட அந்தஸ்து

இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் இதற்கு முன்னர் கொழும்பு மாவட்ட (தாழ் நிலப் பிரதேசங்கள்) காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி சபை என அழைக்கப்பட்டது. அதன் பின்னர் 1968 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பாராளுமன்ற சட்டத்தின் கீழ் ஒரு கூட்டுத்தாபனமாக கூட்டிணைக்கப்பட்டு தாபிக்கப்பட்டது. இந்தக் கூட்டுத் தாபனத்தின் குறிக்கோள்கள் 1976 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தின் மூலமாக விஸ்தரிக்கப்பட்டன. 1982 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தின் பிரகாரம் இந்த சபையின் பெயர் இலங்கைக் காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் என மாறியுள்ளது. இதன் அதிகாரப் பிரிவு, குறித்த சட்டத்தினால் முழு நாடும் உள்ளடங்கும் வகையில் வியாபிக்கப்பட்டது. இந்த சட்டம் மீண்டும் 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டது. பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் சட்டத்திற்கு முரணாக காணிகளை மண்ணிரப்பியெடுக்கும் மற்றும் நீர் நிலைகளை மாசுபடுத்தும் செயற்பாடுகளுக்கு எதிராக சட்டமுறையான நடவடிக்கையை எடுக்கக் கூடியவாறு 2021 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டம் இந்தக் கூட்டுத் தாபனத்திற்கு அதிகாரத் தத்துவங்களை உரித்தளிக்கின்றது. இந்தக் கூட்டுத் தாபனம் 2019 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தின் மூலம் மேலும் இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் என மீண்டும் பெயர் மாற்றப்பட்டது.

**தலைமை அலுவலகம்**

இலக்கம் 3, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை
வெலிகட, ராஜகிரிய.
தொ.பே. இலக்கம்: 2867369
மின்னஞ்சல்: mail@sllrdc.lk
இணையத்தள முகவரி: www.landdevelopment.lk

**பிராந்திய அலுவலகங்கள்**

- <u>கொழும்பு - வடக்கு</u>
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  அவிஸ்ஸாவெல வீதி
  ஒறுகொடவத்தை
  வெல்லம்பிட்டிய

தொ.பே. இலக்கம்: 2532600

- <u>கொழும்பு - கிழக்கு</u>
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  இலக்கம் 28/10A கிரிமண்டல மாவத்தை
  நாவல
  ராஜகிரிய
  தொ.பே. இலக்கம்: 2863205

- <u>கொழும்பு - தெற்கு</u>
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  இலக்கம்: 19 ஸ்டாபோர்ட் வீதி
  கொழும்பு 06

தொ.பே. இலக்கம்: 2589862

- <u>முத்துராஜவெல</u>
  பிராந்திய பொறியியலாளர் அலுவலகம்
  இலக்கம் 123, கெரவலப்பிட்டிய
  ஹந்தல, வத்தளை

தொ.பே. இலக்கம்: 3193130

**துணை நிறுவனங்கள்**

- வ/ப காணிகள் மீட்டல் மற்றும் அபிவிருத்தி கம்பனி (REDECO)
  இலக்கம் 28/10A, கிரிமண்டல மாவத்தை, நாவல, ராஜகிரிய
  தொ.பே. இலக்கம்: 2876608
  மின்னஞ்சல்: lrdcltd1@gmail.com

- L.R.D.C சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்
  இலக்கம் 28/10, கிரிமண்டல மாவத்தை, நாவல, ராஜகிரிய
  தொ.பே. இலக்கம்: 2861948

மின்னஞ்சல்: info@lrdcservices.com

**கணக்காய்வாளர்கள்**

கணக்காய்வாளர் அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
இலக்கம் 306/72, பொல்துவ வீதி
பத்தரமுல்ல

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி
மக்கள் வங்கி

**சட்ட ஆலோசகர்**

சட்டமா அதிபர்
சட்டமா அதிபரின் திணைக்களம்
புதுக்கடை, கொழும்பு 12

## பணிப்பாளர்கள் சபை

| பெயர் | பதவி | காலம் |
|---|---|---|
| கட்டளை அதிகாரி ஹிரான் சச்சீந்திர பாளசூரிய | தலைவர்<br>இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் | 2022.03.14 ஆம் திகதி முதல் இன்று வரை |
| பொறியியலாளர் அஜித் குணசேக்கர | முன்னாள் அதிகாரி<br>பணிப்பாளர் நாயகம்<br>நீர்ப்பாசனத் திணைக்களம் | 2023.07.04 ஆம் திகதி முதல் இன்று வரை |
| திரு டீ.ஏ.எச். பியதிலக்க | முன்னாள் அதிகாரி<br>மேலதிக செயலாளர் | 2022.04.04 ஆம் திகதி முதல் இன்று வரை |
| திரு காமினி ஹேவகே | முன்னாள் அதிகாரி<br>பணிப்பாளர் நாயகம்<br>தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் | 2022.04.04 ஆம் திகதி முதல் இன்று வரை |
| திரு ஆனந்த ஹரிஸ்சந்திர | பணிப்பாளர் | 2022.08.09 ஆம் திகதி முதல் இன்று வரை |
| திரு திஸ்ஸ குணவர்த்தன | பணிப்பாளர்<br>சட்டத்தரனி | 2022.08.09 ஆம் திகதி முதல் இன்று வரை |
| திரு டீ.எஸ். திஸாநாயக்க | பணிப்பாளர்<br>எந்திர பொறியியலாளர் | 2022.08.09 ஆம் திகதி முதல் இன்று வரை |
| திரு எஸ். தர்ஷன் | பணிப்பாளர்<br>அரச கணக்குகள் திணைக்களம்<br>நிதி அமைச்சு | 20233.10.10 ஆம் திகதி முதல் இன்று வரை |

**2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பதவி விலகியவர்கள் பற்றிய விபரம்**

| | | |
|---|---|---|
| பொறியியலாளர் (திருமதி) தீபிக்கா த்ரிமஹவிதான | பணிப்பாளர் நாயகம்<br>நீர்ப்பாசன திணைக்களம் | 2023.01.02 - 2023.07.04 |
| திருமதி எஸ்.ஏ.சி. குலதிலக்க | திறைசேரியின் பிரதிநிதி<br>முகாமைத்துவ பணிப்பாளர் நாயகம் | 2022.03.03 - 2023.09.26 |

## சிரேஷ்ட முகாமைத்துவ குழு

| | | | |
|---|---|---|---|
| 01 | தலைவர் | - | கட்டளை அதிகாரி பொறியியலாளர் ஹிரான் பாளசூரிய |
| 02 | பொது முகாமையாளர் | - | பொறியியலாளர் (திருமதி) எம்.ஏ.எஸ்.எம்.கே. சேனாதீர |
| 03 | மேலதிக பொது முகாமையாளர் (அமுலாக்கல்) | - | பொறியியலாளர் (திரு) சி.பீ. அமரசிங்க |
| 04 | மேலதிக பொது முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) | - | பொறியியலாளர் (திரு) டப்ளியூ.ஆர்.சி. பெர்னாந்து |
| 05 | பிரதி பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு மற்றும் காணி சீராக்கல்) | - | பொறியியலாளர் (திரு) எஸ்.பி. முத்துமால |
| 06 | பிரதி பொது முகாமையாளர் (நகர நீர் முகாமைத்துவம்) | - | பொறியியலாளர் (திருமதி) ஏ.எச். துஷாரி |
| 07 | பிரதி பொது முகாமையாளர் (நிர்மாணம்) | - | பொறியியலாளர் (திரு) வை.பி.சி. த சில்வா |
| 08 | பிரதி பொது முகாமையாளர் (சதுப்பு நில முகாமைத்துவம்) | - | கலாநிதி எஸ்.கே.என்.எஸ். விஜயரத்ன |
| 09 | பிரதி பொது முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு) | - | பொறியியலாளர் (திரு) டப்ளியூ.எச். கீர்த்திரத்ன |
| 10 | பிரதி பொது முகாமையாளர் (விஷேட கருத்திட்டங்கள்) | - | பொறியியலாளர் (திரு) ஆர்.எம்.என்.டீ. ரத்நாயக்க |
| 11 | பிரதி பொது முகாமையாளர் (திட்டமிடல்) | - | பொறியியலாளர் (திரு) ஓ.வி.டப்ளியூ.ஆர். குணதிலக்க |
| 12 | பிரதி பொது முகாமையாளர் (பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்) | - | பொறியியலாளர் (திரு) எஸ்.ஆர்.எம். பிரசாத் |
| 13 | பிரதி பொது முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி) | - | மேஜர் ஜெனரால் இ.என்.கே.ஜே. விஜேசூரிய (ஓய்வுபெற்ற) |
| 14 | பிரதி பொது முகாமையாளர் (நிதி) | - | திரு ஜே.ஏ.பி.கே. ஜயசிங்க |
| 15 | பிரதி பொது முகாமையாளர் (காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல்) | - | திரு ஏ.ஏ.எச். கமலசிறி |
| 16 | பிரதி பொது முகாமையாளர் (வழங்கல்கள்) | - | திரு எஸ்.டீ. தர்மரத்ன |
| 17 | பிரதி பொது முகாமையாளர் (உள்ளக கணக்காய்வாளர்) | - | திரு ஏ.எல்.ஏ.எஸ்.கே. அம்பேகொட |
| 18 | பிரதான சட்ட உத்தியோகத்தர் | - | திருமதி எச்.கே.கே.டப்ளியூ. ஏக்கநாயக்க |
| 19 | உதவி பொது முகாமையாளர் (சுற்றாடல்) | - | பொறியியலாளர் (திருமதி) பி.எம்.பி. விஜேரத்ன |
| 20 | உதவி பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு மற்றும் நிர்மாண வடிவமைப்பு) | - | பொறியியலாளர் (திருமதி) எஸ்.என். கமகே |
| 21 | உதவி பொது முகாமையாளர் (நிர்மாணம்) | - | பொறியியலாளர் (திரு) கே.எம்.என்.கே. ரணசிங்க |
| 22 | உதவி பொது முகாமையாளர் (கருத்திட்டங்கள் மற்றும் பெறுகை) | - | பொறியியலாளர் (திரு) எம்.எம்.எம். மௌபர் |
| 23 | உதவி பொது முகாமையாளர் (திட்டமிடல்) | - | பொறியியலாளர் (திருமதி) என்.பி.எஸ். த சில்வா |
| 24 | உதவி பொது முகாமையாளர் (வடிகாலமைப்பு) | - | பொறியியலாளர் (திரு) எஸ்.எம்.பி.டீ. சிறிவர்த்தன |
| 25 | உதவி பொது முகாமையாளர் (சதுப்புநில முகாமைத்துவம்) | - | பொறியியலாளர் (திருமதி) என்.ஏ.ஏ.எஸ்.வி. நிஸ்ஸங்க |
| 26 | உதவி பொது முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு) | - | பொறியியலாளர் (திருமதி) பி.பி. வினிதா |
| 27 | உதவி பொது முகாமையாளர் (கட்டடக்கலை) | - | திரு கே.எம்.எஸ்.பீ. அத்தபத்து |
| 28 | உதவி பொது முகாமையாளர் (மனித வள அபிவிருத்தி) | - | திரு எல். த்ரிமாவிதான |
| 29 | உதவி பொது முகாமையாளர் (காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல்) | - | திரு என்.ஏ. விக்ரமநாயக்க |
| 30 | உதவி பொது முகாமையாளர் (நிதி) | - | திருமதி எஸ்.எம்.ஏ.ஜி.கே. சம்மந்தபெரும |

## இயக்கச்செயற்பாட்டு மீளாய்வு

**வடிகாலமைப்பு மற்றும் காணி சீராக்கல் பிரிவு**

### 1. திறைசேரி நிதியின் கீழுள்ள கருத்திட்டங்கள்

### 1.1 கால்வாய்கள், ஏரிகள் மற்றும் நடைபாதைகளின் என்பவற்றின் பராமரிப்பு

கொழும்பிலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படும் பிரதான கால்வாய் வலையமைப்பைப் பராமரிப்பது இலங்கைக் காணி சீராக்கல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத் தாபனத்தின் தொழிற்பாடுகளில் ஒன்றாகும். இந்த நோக்கத்தின் நிமித்தம் திறைசேரியினால் நிதிகள் வழங்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டிருந்த திறைசேரி நிதியைப் பயன்படுத்தி, வடிகாலமைப்பு மற்றும் காணி சீராக்கல் பிரிவினால் 223.19 மில்லியன் ரூபா தொகை கொழும்புப் பெரும் பாகத்திலும் மற்றும் புறநகரப் பகுதிகளிலும் அமைந்துள்ள கால்வாய்கள், ஏரிகள், நடைபாதை மற்றும் பொழுதுபோக்குப் பகுதிகள் என்பவற்றின் பராமரிப்புக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**காய்வாய்களின் பராமரிப்பு:**

பின்வரும் கால்வாய்களைப் பராமரிப்பதில் இகாஅகூ சம்பந்தப்படுகின்றது:

- 44 கி.மீ. நீளமான பிரதான கால்வாய்கள்
- 52 கி.மீ. நீளமான துணைக் கால்வாய்கள்

கொழும்பு மாநகரப் பிராந்தியத்திலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் மாசு நீங்கிய சுத்தமான கவர்ச்சியான ஒரு சூழலை உறுதிப்படுத்துதல்.

**ஏரிகளின் / நீர்நிலைகளின் பராமரிப்பு:**

- தியவன்னா (தியத உயன) ஏரி
- அங்கொட மல்புற ஏரி
- ருக்மல்கம கிராமிய குளம்
- பாராளுமன்ற ஏரி
- பெல்லன்வில ஏரி
- தலவத்துகொட ஏரி
- ரம்பலாவத்த நீர் தேங்கிநிற்கும் நீர் குட்டை
- கிம்புலாவெல ஏரி

**நடைபாதைகளின் பராமரிப்பு**

- தியத உயன
- ஜப்பான் நட்புறவு வீதி
- கிம்புலாவெல
- சந்திரிக்கா குமாரதுங்க மாவத்தை, மாலபே
- பெல்லன்வில
- நுகோகொட சதுப்புநில பூங்கா



## i. கால்வாய்களினதும், ஏரிகளினதும், நடைபாதைகளினதும் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு

### i.i கொழும்பு நகரினதும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளினதும் பெரிய கால்வாய்கள், சிறு கால்வாய்கள், துணைக் கால்வாய்கள் என்பவற்றின் பராமரிப்பு

கொழும்பிலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படும் கால்வாய் வலையமைப்பைப் பராமரிப்பதும் மற்றும் உள்ளூர் வெள்ளப் பெருக்குகளை தடுப்பதும் இதன் முக்கிய நோக்கமாகும். உள்ளூர் வெள்ளப் பெருக்குகளைத் தடுக்கும் முகமாக கொழும்பு மாநகர சபை மற்றும் பிற சம்பந்தப்படும் அக்கறையுடைய தரப்பு நிறுவனங்களின் ஈடுபாட்டுடன் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கால்வாய்கள் பராமரிப்புப் பணியில் பின்வருவன சம்பந்தப்படுகின்றன.

- தரைமேற்பரப்புகளை சுத்தம் செய்தல்
- கால்வாய் பராமரிப்பு மற்றும் காடுகள் துப்புரவாக்கல்
- கால்வாய் அகழ்ந்து துப்புரவாக்கும் பணி மற்றும் அகழ்ந்து துப்புரவாக்கிய பொருட்களை எடுத்துச்சென்று அகற்றுதல்

- கேபியன் பெட்டிகளை பயன்படுத்தி கால்வாய் கரைகளைப் பாதுகாத்தல்
- கழிவுக் குழிகளை சுத்தம் செய்தல் மற்றும் பக்க வடிகாலமைப்புகளை சுத்தம் செய்தல் முதலியன
- கால்வாய் ஒதுக்க வீதிகளின் பராமரிப்பு

மேலும், கூட்டுத் தாபனம் கைமு சுத்தம் செய்வதை கைமுறையாக மேற்கொள்வதோடு, கால்வாய் கரைகளையும் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளையும் அகழ்ந்து துப்புரவு செய்வதற்கு அகழும் டிரட்ஜர்கள், உயர்த்தும் இயந்திரங்கள், பின்-ஹோ லோடர்கள், ட்ரக்வண்டிகள் போன்ற கனரக இயந்திர உபகரணங்களை பயன்படுத்துகின்றது.

செயற்பாட்டு நோக்கங்களுக்காக, இகாஅகூ ஒறுகொடவத்தை (கொழும்பு வடக்கு), நாவல கிரிமண்டல மாவத்தை (கொழும்பு கிழக்கு) மற்றும் கிருலப்பனை (கொழும்பு தெற்கு) ஆகிய இடங்களில் அமைந்துள்ள 03 பிராந்திய அலுவலகங்களை நிருவகித்து வருகின்றது.




### i.i.a கொழும்பு வட பிராந்திய கால்வாய்களின் பராமரிப்பு



புனித செபஸ்தியன் தென் கால்வாய்




தெமட்டகொட கால்வாய்

- **முக்கிய பிரச்சினைகள்**

  கால்வாய்களுக்கு அருகில் வசிப்பவர்கள் பெரும்பாலும் ஏனைய பிராந்தியங்களை விடவும் கொழும்பு வடக்குப் பிராந்தியங்களில் அதிகமாக உள்ளனர். கால்வாய்களுக்கு அருகில் வசிக்கும் மக்கள் கல்வி அறிவு இல்லாதவர்களாகவும், கால்வாயின் அழகியல் பற்றிய விழிப்புணர்வு குறைந்தவர்களாகவும் உள்ளனர். திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு பொறுப்புடைய உள்ளாட்சி மன்றங்கள் சரியான முறையில் இங்கிருந்து குப்பைகளை முறையாக சேகரிப்பதற்கு நடவடிக்கையை எடுக்கவில்லை. இவைதான் இங்குள்ள முக்கிய பிரச்சினைகளாகும்.

ஆகையால், இங்குள்ள மக்கள் அவர்களின் வசதி கருதி திண்மக் கழிகளை குவிக்க கால்வாய்களையும் கழிவு மார்க்கங்களையும் பயன்படுத்துகின்றனர். கால்வாய்களில் குவிக்கப்படும் திண்மக் கழிவுகளை சேகரித்து அகற்றுவது இந்தக் கூட்டுத்தாபனத்தின் பராமரிப்பின் கீழ் வருகின்ற ஒரு முக்கிய செயற்பாடாக இருந்தது. நீரில் குப்பைகூழங்கள் சிக்குண்டு காணப்படுவதால் அவற்றை சேகரிப்பது கடினமாகும். இதனால், செலவு விரயமாகுகின்றது. அத்துடன் நீர்நிலைகளுக்கும் அவற்றின் பல்லுயிரினங்களுக்கும் சேதமும் ஏற்படுகின்றது.



திண்மக் கழிவுகளை கால்வாய்ப் பகுதிகளில் அயலவர்கள் குவித்தல்




திண்மக் கழிவுகளை கால்வாய்க் கரைகளில் குவித்தல்

### 1.1.1.b கொழும்பு கிழக்கு பிராந்திய கால்வாய்கள் பராமரிப்பு



ஹீன் எல கால்வாய்



கோட்டே கால்வாய்

### 1.1.1.c கொழும்பு தென் பிராந்திய கால்வாய்கள் பராமரிப்பு



வெல்லவத்தை கால்வாய்



தெஹிவளை கால்வாய்

- **முக்கிய பிரச்சினைகள்**

கால்வாய்க்கு அருகில் வசிப்பவர்கள் குப்பைகளை / திண்மக் கழிவுகளை கால்வாய்களில் கொட்டுவது வழக்கம். இறுதியாக இந்த மிதக்கும் திண்மக் கழிவுகள் தெஹிவளை நீர் வெளிச்செல்வழியின் ஊடாக கடலுக்குள் செல்கின்றன. இது, கடலோரத்தை அண்மித்த பகுதியிலுள்ள பல உயிரினங்களின் சீரழிவுக்கு காரணமாக அமைகின்றது. தணிப்பு நடவடிக்கையாக, மிதக்கும் திண்மக் கழிவுகள் குவிக்கப்படுவதை கண்காணிப்பதற்கு குப்பைத் தடைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அது ஓரளவுக்கு தீர்வாக இருக்கலாம். எனவே, இகாஅகூ தினமும் ஈடுபடும் ஒரு முக்கிய செயலாக மேற்பரப்பு சுத்தம் செய்யும் பணி காணப்படுகின்றது. நீரில் சிக்குண்டுள்ள குப்பைகளை சேகரிப்பது

கடினமாகும். அதுமட்டுமன்றி பணமும் விரயமாகுகின்றது.





2023 ஆம் ஆண்டில் இகாஅகூ கொழும்பு கால்வாய் வலையமைப்பின் பராமரிப்புப் பணிகளை கவனித்தது. மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்தப் பெறுமானம் 223.19 மில்லியன் ரூபாவாகும்.

### i.ii. ஹமில்டென் கால்வாய் பராமரிப்பு

2023 ஆம் ஆண்டில், நாம் தேவையான போது, ஹமில்டென் கால்வாயிலிருந்து களனி கங்கை முனை வரையும், அங்கிருந்து நீர்கொழும்பு களப்பு (14.3 கிமீ நீளம்) வரையும், அங்கிருந்து மஹா ஓயா முனை (7.7 கிமீ நீளம்) வரையும் வழக்கமான கால்வாய்கள் மற்றும் கால்வாய் கரைகள் பராமரிப்புப் பணிகளை கவனித்தோம். செயற்பாட்டு நோக்கத்திற்கு, இகாஅகூ கெரவலப்பிட்டியவில் அமைந்துள்ள முத்துராஜவெல பிராந்திய அலுவலகத்தை நிருவகித்து வருகின்றது.

கால்வாய்கள் பராமரிப்பு பணிகளில் பின்வருவன சம்பந்தப்படுகின்றன.

- தரை மேற்பரப்புகளை சுத்தம் செய்தல்
- கால்வாய் கரைகளை பராமரித்தல்
- கால்வாய் அகழ்ந்து துப்புரவாக்கும் பணி மற்றும் அகழ்ந்து துப்புரவாக்கிய பொருட்களை எடுத்துச்சென்று அகற்றுதல்
- கேபியன் பெட்டிகளை பயன்படுத்தி கால்வாய் கரைகளை பாதுகாத்தல்





எனவே, 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பராமரிப்புப் பணிகளின் மொத்தப் பெறுமானம் 19.94 மில்லியன் ரூபாவாகும்.

### i.iii. கொழும்புப் பகுதியை சூழவுள்ள ஏரிகளின் / நீர்க்குட்டைகளின் பராமரிப்பு

2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11 ஆம் திகதி பாராளுமன்ற வளாகம் கூட வெள்ளத்தில் மூழ்கியது. முன்னெப்போதும் இல்லாத முன்னெச்சரிக்கை வெள்ளப் பெருக்குகளுக்கு தீர்வாக, இகாஅகூ பல வடிகாலமைப்புக் கருத் திட்டங்களை செயற்படுத்தியது. திறைசேரி நிதியின் கீழ் அந்த வடிகாலமைப்பு முறைமைகள் வெள்ளப் பெருக்கின் போது பாராளுமன்றம் மற்றும் வோர்ட்டர்ஸ் எட்ஜ் வளாகம், கிம்புலாவெல ஆகியன போன்ற சுற்றுப்புறப் பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்குவதை தடுக்கும் முகமாக தொடர்ந்தும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பெல்லன்வில பிரதேசம் கொழும்பு நகரின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள துரிதமாக அபிவிருத்தி அடைந்து வருகின்ற இயற்கை சதுப்பு நிலங்களை கொண்டுள்ள மிக முக்கியமான ஒரு பிரதேசமாகும். இது மழை பெய்கின்ற காலத்தில் அடிக்கடி வெள்ளத்தில் மூழ்கும். வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மேம்பாட்டுக் கருத் திட்டத்தின் கீழ் இந்தப் பகுதிக்கு நீண்ட கால வெள்ளத் தணிப்புத்

திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. ஏரிகளையும் மற்றும் கால்வாய் முறைமைகளையும் உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் முதலிய பணிகள் இதில் உள்ளடங்குகின்றன. மேலும், இந்தப் பகுதியின் சமூக மற்றும் கலாச்சார பின்னணியை மேம்படுத்த உதவும் விவசாய நிலங்களும் காணப்படுகின்றன.

கால்வாய்களின் / ஏரிகளின் பராமரிப்புப் பணிகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

- நீர்வழங்கு கால்வாய் முறைமையின் பராமரிப்பு
- நீர் நிலைகளின் மேற்பரப்புகளை சுத்தம் செய்தல்
- கால்வாய் கரை, ஒதுக்கப் பகுதிகள், எல்லை குறிக்கப்பட்டுள்ள நடைபாதை மற்றும் பொழுதுபோக்குப் பகுதிகள் என்பவற்றின் பராமரிப்பு
- ஏரியை / நீர்க்குட்டையை அகழ்ந்து துப்புரவாக்கி வெள்ளப் பெருக்கு நீரை தேக்கிவைக்கக் கூடிய கொள்ளளவை அதிகரித்தல்
- ஏரிகளை / நீர்க்குட்டைகளை அத்துமீறி ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துதல்

**A. தியவன்னாவ ஏரிப் பகுதிகளில் காணப்படும் கால்வாய்கள் / ஏரிகள்**



**B. கிம்புலாவலயில் காணப்படும் கால்வாய்கள் / ஏரிகள்**





**C. பெல்லன்வில, பொரலஸ்கமுவ ஆகிய பகுதிகளில் காணப்படும் கால்வாய்கள் / ஏரிகள்**





இந்தக் கருத் திட்டத்திலிருந்து பின்வரும் பலன்கள் அடையப்பட்டுள்ளன.

- ஏற்கனவே உள்ள நடைபாதைகள் சட்டவிரோதமாக அத்துமீறி ஆக்கிரமிக்கப்படுவது தடுக்கப்பட்டமை
- திண்மக் கழிவு முகாமைத்துவம்
- நீர் நிலைகளில் உள்ள நீரின் தரம் மேம்படுத்தப்பட்டமை

பாராளுமன்ற மேல்நீரேந்து பரப்புகளிலும் மற்றும் சுற்றுப் புறங்களிலும் வசிப்பவர்கள் குறிப்பாகப் பயனடைந்துள்ளனர். மேலும் ஒட்டுமொத்த கொழும்புப் பகுதியும் வெள்ளப் பெருக்குப் பாதுகாப்பினால் பயனடைந்துள்ளது.

கொழும்புப் பகுதியை சூழவுள்ள பிரதேசங்களில் காணப்படும் ஏரிகளின் / நீர்க்குட்டைகளின் பராமரிப்பு பணிகளின் நிமித்தம் 2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மொத்தம் 90.56 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது.

**i.iv. கொழும்புப் பகுதியில் சூரிய சக்தி மின்னொளி முறைமை அடங்கலாக நடைபாதைகளினதும் மற்றும் வாகன நிறுத்துமிடங்களினதும் பராமரிப்பு**

வணிகத் தலைநகரையும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளையும் பசுமையான, தூய்மையான மற்றும் மக்கள்நேயமான ஒரு மாதிரி நகரத்தை நோக்கி அபிவிருத்தி செய்யும் முகமாக கொழும்புப் பெரும்பாக நகர அபிவிருத்திக் கருத் திட்டத்தின் கீழ் பல கருத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. தியத்த உயன பூங்கா, ஏரி, நாவல சதுப்பு நிலப் பூங்கா, ஜப்பான் இலங்கை நட்புறவு வீதி அபிவிருத்தி, ரம்பலாவத்த ஏரி, கிம்புலாவலப் பகுதி என்பன இவற்றில் நிறைவு செய்யப்பட்டுள்ள அத்தகைய சில கருத் திட்டங்களாகும்.

இந்தக் கருத் திட்டங்களின் கீழ், அண்மித்த பிரதான வீதியையும் ஏனைய முக்கியமான இடங்களையும் அலை உருவாக்கத்தினால் ஏற்படும் மண்ணரிப்பிலிருந்து பாதுகாக்கும் முகமாக ஜப்பான் நட்புறவு வீதி, வோட்டர்ஸ் எட்ஜ், கிம்புலாவெல மற்றும் சந்திரிகா குமாரதுங்க மாவத்தை போன்ற நீர் தேங்கி நிற்கக் கூடிய பகுதிகளுக்கு சுற்றாடல்நேய தூர்வார்ந்த நீர் தேங்கி நிற்கக் கூடிய வகையில் நிர்மாணித்த துணைக் கரை வடிவமைப்பு நிர்மாணங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஏற்கனவே உள்ள சட்டவிரோத நில ஆக்கிரமிப்புகளை தடுக்கும் வகையில் நடைபாதைகளும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த பூங்காக்களின் பராமரிப்பு இகாஅகூ தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- நீர்நிலைகளை சுத்தம் செய்து பராமரித்தல்
- சுற்றுப் புறங்களிலிருந்து பசுமையான ஒரு சூழல் காட்சியைத் தருகின்ற புள்வெளிப் பகுதியைப் பராமரித்தல்
- அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள இயற்கை நிலக்காட்சிப் பகுதி (கரைப் பகுதியில் மரம் நடுதல்) மற்றும் வாகனம் நிறுத்தும் பகுதி ஆகியவற்றை பராமரித்தல்
- சமூக செயற்பாடுகளுக்கு என உருவாக்கிய இடங்களை பராமரித்தல்
- சுற்றுலா சார்ந்த முயற்சிகளினால் புதிய வேலை வாய்ப்புகளும் இயற்கை அழகுகளும் உருவாகியுள்ளன.

**A. வோட்டெர்ஸ் எஜ்-பகுதி நடைபாதையின் பராமரிப்பு**





தியத்த உயன நடைபாதை

**B. கிம்புலாவெல நடைபாதையின் பராமரிப்பு**





ஜப்பான் நட்புறவு நடைபாதை





கிம்புலாவெல நடைபாதை

**C. கொழும்பு கிழக்குப் பிராந்திய நடைபாதையின் பராமரிப்பு**





பாகொட சதுப்புநிலப் பூங்கா

**D. பெல்லன்விலப் பகுதி நடைபாதையின் பராமரிப்பு**





பெல்லன்வில, பொரலஸ்கமுவ நடைபாதைகள்

இந்தக் கருத் திட்டத்திலிருந்து பின்வரும் பலன்கள் அடையப்பட்டுள்ளன.

- சட்டவிரோதமாக அத்துமீறி ஆக்கிரமிக்கப்படுவது தடுக்கப்பட்டமை
- நீர்நிலைகளும், வாகனம் நிறுத்தும் இடங்களும், அந்தப் பகுதியை சூழ உடற்பயிற்சிக்கு மக்களை உந்தச்செய்கின்ற நபைாதைகளும் சுத்தம் செய்யப்பட்டு மக்களின் சுகாதாரம் மேம்படுத்தப்பட்டமை
- நீர்நிலைகளில் உள்ள நீரின் தரம் மேம்படுத்தப்பட்டமை
- சூரிய மின்னொளி முறைமை பயன்படுத்தப்பட்டு செலவு குறைக்கப்பட்டமை

2023 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்தப் பெறுமானம் 67.42 மில்லியன் ரூபாவாகும்.

**Ii. மழைபெய்யும் காலத்தில் / வெள்ளப் பெருக்குகள் ஏற்படும் காலத்தில் கால்வாய்கள், ஏரிகள் மற்றும் வடிகாலமைப்பு முறைமைகள் என்பவற்றை சுத்தம் செய்தல் (இகாஅகூ இன் செயல்நோக்கில் வராத கால்வாய்கள், ஏரிகள் மற்றும் வடிகாலமைப்பு கட்டமைப்புகள்)**

எந்தவொரு நிறுவனத்தினதும் செயல்நோக்கில் வராத பெரும்பாலான துணைக் கால்வாய்கள் எந்த நிறுவனத்தாலும் பராமரிக்கப்படுவதில்லை. எல்லா நிறுவனங்களும் அவற்றுக்கு பொறுப்புகள் இல்லாததால் இந்தப் பணியில் இருந்து பின்வாங்கின. இதன் விளைவாக கால்வாய்ப் பகுதிகள் குறுகி, கால்வாய் இணைப்புகளில் ஏற்பட்டிருந்த அடைப்புகளின் காரணமாக பல சிறிய வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டன. இந்த வெள்ளப் பெருக்குப் பிரச்சினைகளைத் தணிப்பதற்கு, இந்தத் துணைக் கால்வாய்களையும் மற்றும் இணைப்புக் கால்வாய்களையும் மேம்படுத்துவது அவசியமாகும். எனவே இந்தத் துணைக் கால்வாய்களும் இகாஅகூ ஆல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள துணைக் கால்வாய்களின் மேம்பாடுகளால் வெள்ளப் பெருக்கற்ற ஒரு சூழல் உருவாகியுள்ளது.

இந்தக் கருத் திட்டத்தின் பிரதான செயற்பாடுகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

- கால்வாய் பகுதிகளிலும் மற்றும் ஒதுக்கப் பகுதிகளிலும் ஆக்கிரமிப்புகளைத் தடுத்தல்
- பராமரிப்புப் பணிகளுக்கு தேவையான ஒரு அணுகு வீதியை அமைத்தல்
- திண்மக் கழிவுகள் அகற்றுதல், கழிவுநீர் வெளியேற்றம் ஆகியவற்றை கட்டுப்படுத்துதல்

இந்தக் கருத் திட்டத்தின் குறிக்கோள்களில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

- உள்ளூர் ரீதியில் உருவாகும் வெள்ளப் பெருக்குப் பகுதியால் பொது மக்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தடுத்தல்
- முழு கால்வாய் முறைமையிலும் சிறந்த இணைப்பை உருவாக்குதல்
- ஒட்டுமொத்த சூழலையும் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருத்தல்

அதன்படி, 2023 ஆம் ஆண்டிற்கு இந்த கால்வாய்களின் பராமரிப்பு பணிக்காக செலவிடப்பட்டுள்ள மொத்தப் பெறுமானம் 12.35 மில்லியன் ரூபாவாகும்.

**கொழும்பு மாநாகப் பகுதியில் காணப்படும் கால்வாய்களை/ஏரிகளை சுத்தம்செய்தல் (கதிரானவத்த கால்வாய்)**





**பேலியகொடப் பகுதியில் காணப்படும் கால்வாய்களை /ஏரிகளை சுத்தம் (பேலியக்கொட மெனிங் சந்தை கால்வாய்)**



முன்பிருந்த நிலை



பின்னருள்ள நிலை

**Iii. அனர்த்த சூழ்நிலையில் விடுக்கப்படும் கோரிக்கையின் பேரில் பொது இடங்களில் வடிகாலமைப்பு மேம்பாடு மற்றும் வெள்ளப் பெருக்கு பற்றிய பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நடவடிக்கைகள்**

இலங்கையில் அடிக்கடி ஏற்படும் வெள்ளப் பெருக்கு இயற்கை அபாயங்களின் மிகவும் அழிவுகரமான ஒரு வடிவமாகும். உயிர் சேதம் மற்றும் சொத்து சார்ந்த சேதம் ஆகிய இரண்டினதும் அடிப்படையில் இது உண்மையான அழிவை ஏற்படுத்துகின்றது. இது இயற்கை ஆபத்தின் மிகவும் பொதுவான ஒரு வடிவமாகும். இந்த நிலையைத் தடுக்கும் வகையில் பொது மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

பாராளுமன்ற வளாகத்திலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதியிலும் அமைந்துள்ள பொது இடங்கள், சங்கங்கள் மற்றும் மத வழிபாட்டு ஸ்தலங்கள் என்பன அவற்றின் அமைவிடங்களிலும் அவற்றை சூழவுள்ள பகுதிகளிலும் காணப்படுகின்ற வடிகாலமைப்பு சார்ந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கடந்த ஆண்டு காலப் பகுதியில் எமது உடனடி உதவியை கோரியிருந்தன.

2023 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்தப் பெறுமானம் 1.51 மில்லியன் ரூபாவாகும்.

**பாராளுமன்ற பகுதியிலும் அதனை சூழவுள்ள பகுதியிலும் வெள்ளப்பெருக்கு நேரத்தில் வடிகாலமைப்பு மேம்பாடுகளையும் பரிகார நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்**





**பாரிய மழையினால் அதிகளவான மரங்கள் ஹமில்டன் கால்வாயினுள் (நீர்கொழும்பு) விழுந்துள்ளன**





**IV. களுஓயா பள்ளத்தாக்கு கால்வாய்கள் பராமரிப்பு**

களுஓயா ஆற்றுப் படுகைப் பகுதியில் உள்ள குடியிருப்பும் கைத்தொழில் துறையும் நிலையான வளர்ச்சியைக் கண்டுள்ளன. குறைந்த சொத்து மதிப்புகளின் பயனாக இது புதிய குடியிருப்பாளர்களை ஈர்த்துள்ளது. கொழும்பின் சனத்தொகை அதிகரித்து வருவதால் எதிர்கால நகர விரிவாக்கத்திற்கான முன்னுரிமைப் பிரதேசமாக இது இப்போது இலக்குக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் துரித அபிவிருத்தி அடங்கலாக இயற்கை ஆபத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்பைக் குறைக்கும் முகமாக மழை நீர் வடிகாலமைப்பிலும், நகர உட்கட்டமைப்பு வசதிகளிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

இகாஅகூ, கால்வாய்களை அகழ்ந்து துப்புரவாக்குதல், பெரிய மற்றும் சிறிய கால்வாய்களில் தேவையான இடங்களில் கால்வாய் கரை பாதுகாப்பு பணிகள், கால்வாய் மேம்பாட்டு

மற்றும் பராமரிப்பு பணிகள் முதலிய பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

இந்தக் கருத் திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்திருந்தன.

- மழை நீர் வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்துவதன் ஊடாக வெள்ளப் பெருக்கு சார்ந்த சேதங்களைக் குறைத்தல்
- வெள்ளப் பெருக்கு அபாயத்தைக் குறைத்து (அல்லது கட்டுப்படுத்தி) வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
- சமூகத்திற்கான பாதுகாப்பை மேம்படுத்துதல்
- சமூக மற்றும் வணிக செயற்பாடுகளுக்கான இடையூறுகளைக் குறைத்தல்
- குடியிருப்பாளர்களுக்கு ஏற்படும் சுகாதார ஆபத்துக்களைக் குறைத்தல்
- மிகவும் கவர்ச்சிகரமான நகர சூழலை உருவாக்குதல்

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்தப் பெறுமானம் 11.27 மில்லியன் ரூபாவாகும்.







**V. கால்வாய்களின் ஓரமாக புதிய மற்றும் கால்வாய் கரைப் பகுதி மீளப்பலப்படுத்தல் பாதுகாப்பு வேலை (கேபியன் வேலை, தாள் பைலிங், RRM சுவர்கள், RCC சுவர்கள் முதலியன)**

திறைசேரி நிதியின் கீழ், கொழும்பு பிரதான கால்வாய் முறைமையின் வடிகாலமைப்பு சார்ந்த தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாக கால்வாய் கரைகளைப் புனரமைப்பதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு முதல் 1998 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் கொழும்பிலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதியிலும் உள்ள கால்வாய் முறைமை கால்வாய் கரைப்பகுதி மேம்பாட்டுப் பணிகளைக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்டது. தற்போது, கால்வாய்க் கரைகளின் சில பகுதிகள் பொது மக்களின் செயற்பாடுகள் போன்ற பல காரணங்களினால் பாதிக்கப்பட்டுள்ளன. கால்வாய் கரைப் பகுதிகளில் இயற்கையான மண்ணரிப்பும் ஏற்பட்டுள்ளது.

மேற்குறித்த விடயங்களைக் கருத்திற் கொண்டு, கொழும்பு தெற்குப் பகுதியிலும், கொழும்பு கிழக்குப் பகுதியிலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் கால்வாய் கரைகள் தேய்ந்து இடிந்து விழுவதைத் தவிர்க்கவும், மேலும் சாத்தியமான அதிகளவு அகலத்தை பேணவும், கால்வாய் கரைகளை முறையாக வரையறுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த கருத்திட்டத்தின் கீழ் இந்தப் பிரதேசங்களில் பின்வரும் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எத்துகல, நீர்கொழும்பு மற்றும் உஸ்வெட்டகெய்யாவ, முத்துராஜவெல ஆகியவற்றிற்கு அருகில் உள்ள ஹமில்டன் கால்வாயில் கால்வாய் கரை மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 2023 ஆம் ஆண்டுக்கான மொத்த பணிகளின் பெறுமானம் 2.74 மில்லியன் ரூபாவாகும்.







**Vi. லூனாவ கால்வாய் வலையமைப்பில் உள்ள N1, N1 - iii, S1 மற்றும் S2 கால்வாய்களை அகழ்ந்து துப்புரவு செய்தல், புனரமைத்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் லூனாவ ஏரி மற்றும் அதன் சுற்றுப்புறங்கள் ஆகியவற்றை நகர நிலக்காட்சிப்படுத்தல்**

லூனாவ ஏரி, கொழும்பு மாவட்டத்தின் தெற்கில் தெஹிவளை-கல்கிசை நகரசபை பகுதியிலிருந்து வடக்கில் மொரட்டுவ மாநகர சபைப் பகுதி வரை செல்கின்ற 6.15 கி.மீ. பரப்பளவான ஒரு ஏரியாகும். 2000 ஆம் ஆண்டு யூலை மாத்தில் அரசாங்கத்தினால் லூனாவ சுற்றாடல் மேம்பாடு மற்றும் சமூக மேம்பாட்டுக் கருத்திட்டம் சர்வதேச நிதியுதவியைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அந்த நேரம், இங்குள்ள களப்பு பேரழிவை நோக்கி சென்றிருந்தது.

உத்தேச கருத் திட்டப் பகுதியில் உள்ள லூனாவ கால்வாய் ஒரு பிரதான கால்வாய் ஆகும். இது வடக்கிலிருந்து தெற்காக விரிவடையும் தாழ்வான பகுதியின் ஊடாக லூனாவ ஏரியில் கலக்கின்றது. ஏரியின் மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் உள்ள ஏரிக்கு நேரடியாக மழை நீரை வெளியேற்றும் பல சிறிய ஆற்றுப்படுக்கைகள் இந்த ஆற்றுப் படுக்கைப் பகுதியில் உள்ளன. அங்குலான புகையிரத நிலையத்தின் தெற்கே அமைந்துள்ள புகையிரதப் பாலத்தின் கீழ் லூனாவ ஏரி கடலுடன் கலக்கின்றது.












ஆண்டுதோறும் இகாஅகூ பிரதான கால்வாய் முறைமையின் ஒரு பகுதியைப் பராமரித்து வருகின்றது. களப்புப் பகுதியிலும் மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும், பிரதான கால்வாய் முறைமையின் ஒரு பகுதியிலும் அகழ்ந்து துப்புரவாக்கும் பணிகளும் சில புனர்நிர்மாணப் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. அதன்படி, இகாஅகூ சமூகப் பொறுப்பு என்ற வகையில், பொது மக்களுக்கு இனிமையான ஒரு சூழலை உருவாக்கும் நோக்கில், பிரதான கால்வாய் முறைமையில் அகழ்ந்து துப்புரவாக்கும் மற்றும் சுத்தம் செய்யும் பணிகளை கவனித்துள்ளது.

இந்தக் கருத் திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு இருந்திருந்தன.

- மழை நீர் வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்தி அதன் மூலம் மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கைக்காகவும், நகரின் கண்ணியத்தை உயர்த்துவதற்காகவும் நகர்ப்புறப் பகுதியில் ஆரோக்கியமான ஒரு சூழலை உருவாக்குதல்
- கல்வி அடங்கலாக பொருளாதார மற்றும் கலாச்சார செயற்பாடுகள் அடிக்கடி சீர்குலைந்துள்ள கருத் திட்டப் பகுதியில் வெள்ளம் ஏற்படாமல் தடுத்தல்
- நகர்ப்புறப் பகுதிகளில் இருந்து மழை நீரைப் பெறும் கால்வாய்களினதும் மற்றும் கடலினதும் நீரின் தரத்தை மேம்படுத்துதல்
- பிரதான கால்வாய் முறைமையின் ஒரு பகுதியை அகழ்ந்து துப்புரவாக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றின் மூலம் இனிமையான கவர்ச்சியான ஒரு சூழலை உருவாக்குதல்
- வண்டல் மண்ணை அகழ்வதன் மூலம் கால்வாயின் நீர் காவிச்செல்லும் கொள்ளளவை அதிகரித்தல்
- ஏரிகளுக்கும் மற்றும் கால்வாய் முறைமைகளுக்கும் வருகின்ற திண்மக் கழிவுகளைக் கட்டுப்படுத்துதல்
- கால்வாய்களினுள்ளும் மற்றும் களப்பு ஒதுக்கப் பகுதிகளினுள்ளும் ஆக்கிரமிப்புகளையும் மற்றும் சட்டவிரோத செயல்களையும் தடுத்தல்

அதற்கிணங்க, 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்தப் பெறுமானம் 9.83 மில்லியன் ரூபாவாகும்.

**Vii. பழைய ஒல்லாந்தர் கால்வாயையும் கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக வீதியுடன் (CKE) இணைந்த நீர்நிலைகளையும் பராமரித்தல்**









அதன்படி, பழைய ஒல்லாந்தர் கால்வாய்களையும், இணைந்த நீர்நிலைகளையும் பராமரிப்பதில் இகாஅகூ தொடர்ந்து கவனம் செலுத்தி வருகின்றது. மேலும், 2023 ஆம் ஆண்டிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்தப் பெறுமானம் 17.42 மில்லியன் ரூபாவாகும்.

<u>வெள்ளப் பெருக்குத் தணிப்பு செயற்பாடுகள்</u>

**i. பேலியகொடையில் தற்போதுள்ள நீரிறைக்கும் நிலையத்தை மேம்படுத்துதல் மற்றும் அதன் வருடாந்த பராமரிப்பு மற்றும் செயற்பாடுகள்**

பேலியகொடையில் தற்போதுள்ள நீரிறைக்கும் நிலையம் அதிக வெள்ளப் பெருக்கு மட்டத்தில் களனி ஆற்றின் கீழ் நீரோட்டத்தின் போது பேலியகொடைப் பகுதியில் மழை நீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ளது. இது, இகாஅகூ இன் மூலம் தற்போது பராமரிக்கப்பட்டு வரும் 2 செங்குத்து எக்ஸியல் பாம்பியை (மின் சக்தியில் இயங்கும்) கொண்டுள்ளது.

2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் போது, தற்போதுள்ள பேலியகொட நீரிறைக்கும் நிலையத்தையும், அதன் உள்வரும் கால்வாய்களையும் பராமரிக்கும் பணியை, இகாஅகூ கவனித்து நிறைவேற்றியுள்ளது.

பிரதான குறிக்கோள்கள் பின்வருமாறு காணப்பட்டன.

- தற்போதுள்ள நீரிறைக்கும் நிலையத்தையும், அதன் நீர்வழங்கு கால்வாயையும் புனரமைத்தல்
- வருடாந்த செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பணிகள்







மேற்குறித்த கருத் திட்டத்தின் நிமித்தம் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்தப் பெறுமானம் 4.51 மில்லியன் ரூபாவாகும்.

**ii. கொழும்புக்கு வெளியே வடிகாலமைப்பு மேம்பாடு மற்றும் நகர்ப்புற நிலக்காட்சிப்படுத்தல் கருத்திட்டங்கள்**

ஏரிகளை புனரமைத்தல், வண்டல் மண்ணை அகற்றுதல், ஆக்கிரமிப்பாளர்களால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மண் அள்ளுதல் மற்றும் தூர்வாருதல் செயற்பாடுகளை தடுத்தல், ஏரியின் அணையை ஒட்டி நடைபாதைகளை அமைத்தல் மற்றும் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் வெள்ள அபாயத்தைக் குறைப்பதற்காக கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே உள்ள முக்கிய நகரங்களிலும் மற்றும் இடங்களிலும் அபிவிருத்தியுடன் இணைந்த சிறந்த கால்வாய் முறைமையை உருவாக்குதல் என்பன இந்த கருத்திட்டங்களின் நோக்கங்களாகும்.

இந்தக் கருத் திட்டத்தின் ஏனைய நன்மைகளில் பின்வருவன உள்ளடங்குகின்றன.

- நீர்தேங்கி நிற்கக் கூடிய கொள்ளளவை அதிகரித்து நகர நிலக்கட்சியை ஏற்படுத்தி வெள்ளப் பெருக்கு நீங்கிய சுற்றாடல்நேய பசுமையான ஒரு சூழலை உருவாக்குதல்
- நிலம் நிரப்பும் செயற்பாடுகளுக்காக நிகழும் ஆக்கிரமிப்புகளைத் தடுத்தல்
- திண்மக் கழிவு முகாமைத்துவம்
- வடிகாலமைப்பு மேம்பாடுகள்
- நகர நிலக்காட்சிப்படுத்தல்

2023 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் போது, இகாஅகூ இந்த வகுதியின் கீழ் பின்வரும் கருத்திட்டங்களை கவனித்துள்ளது. மேற்கூறியவற்றிற்காக 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்த பெறுமானம் 70.38 மில்லியன் ரூபாவாகும்.

- பாணந்துறை வடிகாலமைப்பு மேம்பாட்டு கருத்திட்டம்
- இரத்மலானை யூனிவோடெக் கால்வாய் தோண்டும் பணி
- எண்டரமுல்ல பிரதேச வடிகாலமைப்பு வசதியை மேம்படுத்துதல்
- வேவல்துவ கால்வாயை தூர்வாருதல் மற்றும் சுத்தம் செய்தல்
- வெலிசர பிரதேச வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணி
- கம்பஹா மாவட்ட கட்டான கிம்புலபிட்டிய ஓயாவின் வண்டல்மண் அகற்றும் பணிகள்
- பியகம பிரதேச வடிகாலமைப்பு மேம்பாப்டுப் பணி
- கலேவெல வஹாகோட்டே குளத்தின் மேற்பரப்பு சுத்தம் செய்யும் பணி
- களனி - டயர் சந்தி கால்வாய்களின் மேற்பரப்பு சுத்தப்படுத்தும் பணிகள்
- பேலியகொட நீரிறைக்கும் நிலையத்தின் கால்வாயின் மேற்பரப்பு சுத்தம் செய்யும் பணிகள்

**பியகம பகுதி வடிகாலமைப்பு மேம்பாட்டுப் பணி**



முன்பிருந்த நிலை



பின்னருள்ள நிலை

**கம்பஹா மாவட்ட கட்டான கிம்புலாபிட்டிய ஓயாவின் வண்டல்மண் அகற்றும் பணிகள்**



முன்பிருந்த நிலை



பின்னருள்ள நிலை

**V. பாராளுமன்ற மேல் நீரேந்துபரப்பு மற்றும் அதன் சுற்றுப்புற பகுதி வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுப் பணிகள்**

பாராளுமன்ற வளாகத்திலும் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஏற்படும் வெள்ளப்பெருக்குகளை தணிப்பதும் மற்றும் பசுமை நகர எண்ணக்கருவுக்கான சூழலை மேம்படுத்தி மேல் மேலேந்து நீர்ப்பரப்புகளில் உள்ள ஈரநிலங்களை பாதுகாப்பதும் இந்தக் கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பின்வருவன இந்த கருத்திட்டத்தில் உள்ளடங்கும் ஏனைய நன்மைகளாகும்.

- நீர்தேங்கி நிற்கக் கூடிய கொள்ளளவை அதிகரித்து நகர நிலக்கட்சியை ஏற்படுத்தி வெள்ளப் பெருக்கு நீங்கிய சுற்றாடல்நேய பசுமையான ஒரு சூழலை உருவாக்குதல்

- நிலம் நிரப்பும் செயற்பாடுகளுக்காக நிகழும் ஆக்கிரமிப்புகளைத் தடுத்தல்
- திண்மக் கழிவு முகாமைத்துவம்
- நீரின் தரத்தை மேம்படுத்தல்
- வடிகாலமைப்பு மேம்பாடுகள்
- நகர நிலக்காட்சிப்படுத்தல்

2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்த பெறுமானம் 4.49 மில்லியன் ரூபாவாகும்.



முன்பிருந்த நிலை



பின்னருள்ள நிலை

**பேரவெ ஏரி நீர்நிலையினதும் மற்றும் அதன் சுற்றுப்புறங்களினதும் பராமரிப்பு பணிகள்**

பேரவெவ ஏரிக்கு புனித செபஸ்தியன் கால்வாய் வழியாக நீர் கிடைக்கின்றது. அந்த நீர் நகர்ப்புற நீரேந்துபரப்புகளில் இருந்து வெளியேறுகின்றது. எனவே, ஏரி நீர் முறைமையினுள் பொதுவாக நகர கழிவுகளும் தொழிற்சாலை கழிவுகளும் மற்றும் கழிவுநீரும் வந்தடைகின்றன. இது ஏரியின் சிதைவுக்கு வழிவகுக்கின்றது. இகாஅகூ பேரவெவ ஏரியின் நீர்நிலையிலும் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் உள்ள ஏரியிலும் நிகழக்கூடிய சாத்தியமான சீரழிவைத் தணிக்க தேவையான பராமரிப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தியுள்ளது.

பேரவெவ ஏரியின் நீர்நிலையையும் அதன் சுற்றுப்புறத்தையும் பராமரிப்பது இந்தக் கருத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பேரவெவ ஏரி கொழும்பு நகரின் மத்திய பகுதியில் அமைந்துள்ளது. பேரவெவ ஏரியின் பரப்பளவு 161.2 ஏக்கர்களாகும். பேரவெவ ஏரி நீர்நிலையில் பின்வரும் முக்கிய பிரிவுகள் உள்ளடங்குகின்றன.

- கிழக்கு ஏரி (100.6 ஏக்கர்)
- காலி முகத்திடல் ஏரி (5.4 ஏக்கர்)
- மேற்கு ஏரி (21.3 ஏக்கர்)
- தென்மேற்கு ஏரி (27.2 ஏக்கர்)
- களனி பள்ளத்தாக்கு (விரல் பிரிவு) பகுதி (2.5 ஏக்கர்)
- பிரதான ஆற்றுப்படுகை (மிதக்கும் சந்தை) பகுதி (4.2 ஏக்கர்) மற்றும் புனித செபஸ்தியன் கால்வாய் கிழக்கு பேரவெவ ஏரியுடன் இணைந்துள்ளது. மேலும் முக்கியமாக காலி முகத்திடல் ஏரியிலிருந்து கடலுக்கு இங்கிருந்து நீர் வழிந்தோடுகின்றது.








மழை பெய்யும் காலத்தில்



2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் மொத்த பெறுமானம் 20.24 மில்லியன் ரூபாவாகும்.

**கொலன்னாவ மழைநீர் வடிகாலமைப்பு சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம்**

வருடாந்தம் இகாஅகூ கொலன்னாவ பகுதியில் பிரதான கால்வாய் முறைமையை பராமரித்து வருகின்றது. மேலும் கொலன்னாவையில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தைத் தணிக்கும் முகமாக கொலன்னாவ பிரதேசத்திலும் அதனை சூழவுள்ள பல உப கால்வாய்களிலும் அகழ்ந்து துப்புரவாக்கும் பணிகளும் மற்றும் மேற்பரப்பைத் துப்பரவு செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்தகைய பகுதிகள் பின்வருமாறு காணப்படும்.

- கித்தம்பாஹு கால்வாய்
- தஹம்வெல காய்வாய்
- சலலிஹினி மாவத்தை கால்வாய்
- பசன்ன கால்வாயும் உப கால்வாய்களும் பிரதான கால்வாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் மொத்த பெறுமானம் 75.70 மில்லியன் ரூபாவாகும்.






மழை பெய்யும் காலத்தில்



சுத்தம் செய்யப்பட்டதன் பின்னருள்ள நிலை

1. **வாடிக்கையாளர் கருத்திட்டங்கள் - 2023**

1. **ஜா-எல கொட்டுகொட ரன்னக்க குளத்தின் உத்தேச புனர்நிர்மாணப் பணி**

வாடிக்கையாளர்: நகர அபிவிருத்தி, கழிவகற்றல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு இராஜாங்க அமைச்சு

ஆரம்பித்த திககி: 2021.07.05

நிறைவுசெய்யப்பட்டுள்ள திகதி: 2023.02.28

மதிப்பிடப்பட்டுள்ள செலவு: 146.98 மில்லியன் ரூபா (நிர்மாண செலவும், VAT வரியும் நீங்கலாக)

2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பணியின் பெறுமானம்: 146.98 மில்லியன் ரூபா

**பணியின் நோக்கெல்லை**

- நீர்க்குட்டையை அகழ்ந்து துப்புரவாக்கல் (பரப்பளவு 72,843 மீ$^2$- 1 மீற்றர் ஆழம் வரை)
- நடைபாதையை தயார்படுத்தல்
- இரும்பாலான பாலத்தை நிர்மாணித்தல் (6மீ x3மீ அளவில்)
- சிறகு வடிவ சுவர்களுடைய ஹியூம் குழாய் மதகுகளை நிர்மாணித்தல்
- முன்கூட்டி வார்த்தெடுத்த ஆசன அலகுகளை வழங்குதல் மற்றும் பொருத்துதல்
- அணைக்கட்டு தயாரித்தல் பணியை மேற்கொள்ளல் மற்றும் கால்வாய்மார்க்கங்களை நிர்மாணித்தல்
- விளையாட்டு மைதானத்தை தயார்படுத்தல்
- வாகனம் நிறுத்தும் ஸ்தலத்தை நிர்மாணித்தல்
- நிலக்காட்சிப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளல்









2. **உத்தேச காலி ஹொலுவாகொட உயிரியல் விவசாய பூங்கா**

வாடிக்கையாளர்: நகர அபிவிருத்தி, கழிவகற்றல் மற்றும் சமுதாய துப்புரவேற்பாட்டு இராஜாங்க அமைச்சு

ஆரம்பித்த திககி: 2021.01.26

கருத்திட்டத்தின் நிலை: ஒப்படைப்பதற்கு தயார் நிலையிலுள்ளது

மதிப்பிடப்பட்டுள்ள செலவு: 341.96 மில்லியன் ரூபா (நிர்மாண செலவும், VAT வரியும் நீங்கலாக)

2023 திசம்பர் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட பணிகளின் பெறுமானம்: 397.04 மில்லியன் ரூபா

**நிறைவுசெய்யப்பட்டுள்ள பணிகள்**

- 8 மீற்றர் அளவான 02 இரும்பாலான பாலங்கள்
- 4 மீற்றர் அளவான இரும்பாலான பாலம்
- ஏரிகளை உருவாக்குதல் மற்றும் அகழ்ந்து துப்புரவாக்கல்
- சந்தைப் பகுதி வடிகாலமைப்புப் பணிகளை மேற்கொள்ளல்
- சந்தைப் பகுதி மண்ணிரப்பும் பணிகளை மேற்கொள்ளல்
- சந்தைப் பகுதி சாய்வு மற்றும் கூழாங்கற்கள் பரவும் பணிகளை மேற்கொள்ளல்
- சந்தைப் பகுதி கொங்கிறீட்டு சாய்வுப் பணி மற்றும் படிகற்களுக்கு கொங்கிறீட்டுதல் ஆகியவற்றை மேற்கொள்ளல்
- 06 ஹியூம் குழாய் மதகுகளை நிர்மாணித்தல்
- உத்தேச சிறுவர் பூங்கா பகுதிற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் மற்றும் நிறுவுதல்
- விரிந்த மதகுகளை நிர்மாணித்தல்
- நடைபாதையை அமைத்தல்

**எஞ்சியுள்ள பணிகள்**

- ஏரியை அகழ்ந்து துப்புரவாக்கும் பணியை மீளக்கவனத்தில்
- உத்தேச புதிய வடிகாலமைப்பை நஅஅச மூலம் நிர்மாணித்தல் - 2024.02.01









**3. கெரவலப்பிட்டிய IIHS இற்கான உத்தேச பல்கலைக்கழகத்திற்கு அருகாமையிலுள்ள வெலிஒயா கால்வாயினதும் கால்வாய் கரைப்பகுதியினதும் அபிவிருத்தி**

வாடிக்கையாளர்: இன்டர்நெஷனல் இன்சிடியூட் ஒஃப் ஹெல்த் சயன்ஸ் (ப்ரைவட்) லிமிற்றட் நிறுவனம்

ஆரம்பித்த திகதி: 2022.08.21

கருத்திட்டத்தின் நிலை: கொடுப்பனவு தாமதித்த காரணத்தால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது

மதிப்பிடப்பட்டுள்ள செலவு*:* 79.77 மில்லியன் ரூபா (நிர்மாண செலவும், VAT வரியும் நீங்கலாக)

2023 திசம்பர் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட பணிகளின் பெறுமானம்: 55.64 மில்லியன் ரூபா

**நிறைவுசெய்யப்பட்டுள்ள பணிகள்**

- கால்வாயை அகழ்ந்து துப்புரவாக்கல்
- மேற்பரப்பை சுத்தம் செய்தல்
- கால்வாய் கரையை தயார்படுத்தல்
- அணையின் உயர் மட்டத்தை அதிகரித்தல் (+ 1.55 மீ MSL வரை)

**எஞ்சியுள்ள பணிகள்**

அணையின் உயர் மட்டத்தை அதிகரித்தல் (+ 1.8 மீ MSL)

- ரிப் ரப் பாதுகாப்பு
- புல் வளர்த்தல்
- கரந்த மரங்களை நடுதல்








**4. கம்பஹா பிரதேசத்தில் தேர்ந்தெடுத்த கால்வாய்களை சுத்தம் செய்யும் மற்றும் அகழ்ந்து துப்புரவாக்கும் பணிகள்**

வாடிக்கையாளர்: கம்பஹா மாவட்ட செயலகம்

ஆரம்பித்த திகதி: 2022.11.03

நிறைவு செய்த திகதி: 2023.07.23

மதிப்பிடப்பட்டுள்ள செலவு: 14.53 மில்லியன் ரூபா (நிர்மாண செலவும், VAT வரியும் நீங்கலாக)

2023 திசம்பர் இறுதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட பணிகளின் பெறுமானம்: 14.53 மில்லியன் ரூபா

**நிறைவுசெய்யப்பட்டுள்ள பணிகள்**

கம்பஹா பிரதேசத்தில் 07 கால்வாய்களை சுத்தம் செய்தல்

- ஜாறு கால்வாய் (250 மீ)
- களு கொட்டுவ கால்வாய் (650 மீ)
- குன்டி விலா கால்வாய் (1,360 மீ)
- களு கொள விலா இணைப்பு கால்வாய் (450 மீ)
- பெல்லேவெல நிலையத்திற்கு அருகிலுள்ள கால்வாய் - மேலருவி (2,100 மீ)
- ஹொரகந்தவில கால்வாய் (1,100 மீ)
- பெல்லேவெல நிலையத்திற்கு அருகிலுள்ள கால்வாய் - கீலருவி (410 மீ)







**5. கப்பல் சரக்குகளின் நகர்வுக்கு வசதியளிக்கும் முகமாக ஹமில்டன் கால்வாயின் நீர்வெளிச்செல்லும் பகுதியில் அகழ்ந்து துப்புரவாக்கும் பணி**

வாடிக்கையாளர்: லக்தனவி லிமிற்றட்

**கட்டம் I**

ஆரம்பித்த திகதி: 2022.11.08

நிறைவுசெய்த திகதி: 2023.02.21

மதிப்பிடப்பட்டுள்ள செலவு: 21.69 மில்லியன் ரூபா (நிர்மாண செலவும், VAT வரியும் நீங்கலாக)

2023 இறுதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட பணிகளின் பெறுமானம்: 24.56 மில்லியன் ரூபா

2023 இறுதி வரை கிடைத்த மொத்த கொடுப்பனவுகள்: 24.56 மில்லியன் ரூபா

**நிறைவுசெய்த பணிகள்**

- ஹமில்டன் கால்வாய் நீர்வெளிச்செல்லும் பகுதியை அகழ்ந்து துப்புரவாக்கல்
- அகழ்ந்தெடுத்த பொருட்களை கெரவலப்பிட்டியவுக்கு எடுத்துச்செல்லல்

**கட்டம் II**

ஆரம்பித்த திகதி: 2023.12.01







நிறைவுசெய்த திகதி: 2023.12.15

மதிப்பிடப்பட்டுள்ள செலவு: 12.97 மில்லியன் ரூபா (நிர்மாண செலவும், VAT வரியும் நீங்கலாக)

2023 இறுதி வரை மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட பணிகளின் பெறுமானம்: 6.47மில்லியன் ரூபா

2023 இறுதி வரை கிடைத்த மொத்த கொடுப்பனவுகள்: 6.47 மில்லியன் ரூபா

**நிறைவுசெய்த பணிகள்**

- ஹமில்டன் கால்வாய் நீர்வெளிச்செல்லும் பகுதியை அகழ்ந்து துப்புரவாக்கல்
- அகழ்ந்தெடுத்த பொருட்களை கெரவலப்பிட்டியவுக்கு எடுத்துச்செல்லல்

# வெரஸ் கங்கை மழை நீர் வடிகாலமைப்பு மற்றும் மேம்பாட்டுக் கருத் திட்டம்

## 1. அறிமுகம்

கொழும்பு நகரிலும் மற்றும் அதை சூழவுள்ள பகுதிகளிலும் நிகழ்ந்த துரித நகரமயமாக்கலின் விளைவாக திட்டமிடப்படாத நிலம் நிரப்புதல் மற்றும் கால்வாய் ஆக்கிரமிப்புகள் என்பன அதிகரித்துள்ளன. நுகேகொட, இரத்தினபிட்டிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை மற்றும் வெரஹெர ஆகிய பிரதேசங்களில் மழை காலத்தில் பாரிய வெள்ளப்பெருக்குகள் ஒவ்வொரு வருடமும் ஏற்படுகின்றன. இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் (இகாஅகூ) ஜப்பான் சர்வதேச கூட்டுறவு முகவர் நிலையத்தின் (ஜசகூமுநி) உதவியுடன் கொழும்பு மாநகரப் பிராந்தியத்திற்கான விரிவான தலைமை வடிகாலமைப்புத் திட்டத்தைத் தயாரித்துள்ளது. ஆய்வினது பரிந்துரைகளின் பிராகரம், வெரஸ் கங்கை மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத்திட்டம் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

இகாஅகூ தாபனத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும் பொருட்டு, மேற்கூறிய கருத்திட்டத்திற்கு 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி அமைச்சரவையின் அனுமதி கிடைத்தது. இகாஅகூ, மிகப்பெரிய வெள்ளப்பெருக்குக் கட்டுப்பாட்டுக் கருத்திட்டங்களை செயற்படுத்தும் ஆற்றல் உடைய ஒரேயொரு நிறுவனமாக இருப்பதால், முழு வடிவமைப்பு வேலைகளையும் மற்றும் கருத்திட்டத்தின் செயற்படுத்தலையும் மற்றும் நிர்மாணப் பணிகளையும் மேற்கொள்ள நிர்பந்திக்கப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தின் திருத்திய செலவு 11,050 மில்லியன் ரூபாவாகும்.

வெரஸ் கங்கை மழைநீர் வடிகாலாமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம் என்பது தேசத்திற்கான ஒரு முதலீட்டு கருத்திட்டமாகும். இது புவியீர்ப்பு விசையின் கீழ் வெள்ளப்பெருக்குகள் நீங்கிய கால்வாய் முறைமையை உருவாக்க உள்ளூர் பொறியியல் தொழில்நுட்ப நிபுணத்துவத்தைப் பயன்படுத்துகின்றது.

இந்தக் கருத்திட்டத்தின் பராமரிப்பு செயற்பாடுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் கருத்திட்டத்தின் நிறைவு செய்த பகுதிகளில் பொதுமக்கள் அதிக பயனை அனுபவிக்கின்றனர்.

## 2. கால்வாய்களினதும், ஏரிகளினதும், நடைபாதைகளினதும் மற்றும் நீரைத்தேக்கிவைக்கும் பகுதிகளினதும் பராமரிப்பு பணி

### 2.1 கால்வாய்களின் பராமரிப்பு

வெரஸ் கங்கை கருத்திட்டத்தில் வெள்ளப்பெருக்குகள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக சுமார் **30** கிமீ நீளமுள்ள கால்வாய்களை (ஆரம்ப**,** இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை) உள்ளடக்குகின்ற அபிவிருத்தியடைந்துள்ள வடிகாலமைப்பு முறைமையின் பராமரிப்புக்கு முன்னுரிமை அளித்தல்.



**2.1-1 கொங்கிறீட்டுக் கால்வாய்**

கொங்கிறீட்டுக் கால்வாயின் மொத்த நீளம் - அண்ணளவாக 2.5 கிமீ



**2.1-2 தகட்டுத் தூண் கொங்கிறீட்டுக் கால்வாய்**

கால்வாயின் மொத்த நீளம் - அண்ணளவாக 0.5 கிமீ





**2.1-3 கேபியன் கால்வாய்**

கேபியன் கால்வாயின் மொத்த நீளம் - அண்ணளவாக 3.5 கிமீ

**2.2 ஏரிகளின் பராமரிப்பு**

இந்தக் கருத்திட்டத்தின் கீழ், சுமார் **40** ஹெக்டேர் பரப்பளவிலான நீரைத்தேக்கிவைக்கக்கூடிய பகுதிகள் நீரைத்தேக்கிவைக்கக்கூடிய கொள்ளளவை அதிகரிக்கும் முகமாக நீர்க்குட்டைகளாகவும் ஏரிகளாகவும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

நீரைத்தேக்கிவைக்கும் கொள்ளளவை அதிகரிக்கும் அதே வேளையில், நடைபாதைகள், சிறுவர்கள் விளையாடும் பகுதி, திறந்த உடற்பயிற்சி கூடம் போன்றவற்றின் மூலம் பொதுமக்களின் பொழுதுபோக்கு செயற்பாடுகள் மேம்படுத்தப்பட்டன.



**2.2-1 மானெல் மாவத்தை ஏரி**

- ஏரியின் மொத்த பரப்பளவு - அண்ணளவாக 0.5 ஹெக்டேயர்
- அணைக்கட்டு வீதியின் நீளம் - அண்ணளவாக 0.5 கிமீ
- சுற்றுப்புற கால்வாயின் நீளம் - அண்ணளவாக 0.5 கிமீ
- கிறீன் நெட்டின் நீளம் - அண்ணளவாக 0.5 கிமீ



**2.2-2 பெப்பிலியான ஏரி**

- ஏரியின் மொத்த பரப்பளவு - அண்ணளவாக 2.0 ஹெக்டேயர்
- அணைக்கட்டு வீதியின் நீளம் - அண்ணளவாக 0.9 கிமீ
- சுற்றுப்புற கால்வாயின் நீளம் - அண்ணளவாக 1.2 கிமீ
- கிறீன் நெட்டின் நீளம் - அண்ணளவாக 1.2 கிமீ



**2.2-3 வெல வீதி ஏரி**

- ஏரியின் மொத்த பரப்பளவு - அண்ணளவாக 1.1 ஹெக்டேயர்
- அணைக்கட்டு வீதியின் நீளம் - அண்ணளவாக 0.5 கிமீ
- சுற்றுப்புற கால்வாயின் நீளம் - அண்ணளவாக 0.5 கிமீ
- கிறீன் நெட்டின் நீளம் - அண்ணளவாக 0.5 கிமீ



**2.2-4 வயல் வீதி ஏரி**

• ஏரியின் மொத்த பரப்பளவு - அண்ணளவாக 0.5 ஹெக்யேடர்

• அணைக்கட்டு வீதியின் நீளம் - அண்ணளவாக 0.6 கிமீ

• சுற்றுப்புற கால்வாயின் நீளம் - அண்ணளவாக 0.5 கிமீ

• கிறீன் நெட்டின் நீளம் - அண்ணளவாக 0.5 கிமீ



**2.2-5 வேரஹெர ஏரி**

• ஏரியின் மொத்த பரப்பளவு - அண்ணளவாக 2.0 ஹெக்யேர்

• அணைக்கட்டு வீதியின் நீளம் - அண்ணளவாக 0.9 கிமீ

• சுற்றுப்புற கால்வாயின் நீளம் - அண்ணளவாக 1.0 கிமீ

• கிறீன் நெட்டின் நீளம் - அண்ணளவாக 1.0 கிமீ



**2.2-6 இறப்பர்வத்தை ஏரி**

• ஏரியின் மொத்த பரப்பளவு - அண்ணளவாக 4.0 ஹெக்டேயர்

• அணைக்கட்டு வீதியின் நீளம் - அண்ணளவாக 2.0 கிமீ

• சுற்றுக்கால்வாயின் நீளம் - அண்ணளவாக 2.0 கிமீ

• கிறீன் நெட்டின் நீளம் - அண்ணளவாக 2.0 கிமீ



**2.2-7 சூரியமல்வத்தை ஏரி**

• ஏரியின் மொத்த பரப்பளவு - அண்ணளவாக 5.0 ஹெக்டேயர்

• அணைக்கட்டு வீதியின் நீளம் - அண்ணளவாக 1.2 கிமீ

• சுற்றுப்புற கால்வாயின் நீளம் - அண்ணளவாக 1.0 கிமீ

• கிறீன் நெட்டின் நீளம் - அண்ணளவாக 1.0 கிமீ

## 2.3 சதுப்புநிலங்களின் பராமரிப்பு

உண்மையான கருத்திட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சுவீகரிக்கப்பட்டுள்ள சதுப்பு நிலங்களை அவற்றின் இயற்கையான நிலையைப் பேணுவதற்கும், பெற்றுள்ள நீரைத்தேக்கிவைக்கும் கொள்ளளவை பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியமானது. எனவே, இந்த கருத்திட்டம் மஹா எல, பெல்லன்வில, பில்லேவ, கட்டுவாவல, நாவின்ன, சுனேத்ராதேவி மற்றும் வெரஸ் கங்கை நீர்தேங்கி நிற்கும் பிரதேசங்களின் நீரைத்தேக்கி வைக்கும் கொள்ளளவை பேணுகின்றது.

மேலும் பிடவெல்ல பாலத்திற்கும் கொஸ்பலான பாலத்திற்கும் இடையில் உள்ள வெரஸ் கங்கை சதுப்பு நிலத்தை (சுமார் 88 ஹெக்டேர்) சுத்தப்படுத்தும் பணி தேவையான போது நீரின் சுமுகமான பாய்ச்சலைப் பேணும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.





**2.3-1 வெரஸ் கங்கையின் பராமரிப்பு**

## ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புகள் பிரிவு

ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புகள் பிரிவு (ஆவ) இகாஅகூ இன் ஒரு உசாதுணைக் கரமாகும். இந்தப் பிரிவில் நிர்மாண மற்றும் வடிகாலமைப்பு ஆகிய இரண்டு அலகுகளும், கட்டடக்கலை அலகும், கணிய அளவையியல் அலகும், பொறியியல் மூலப்பொருட்கள் சோதனை ஆய்வுகூட அலகும் மற்றும் அளவையியல் அலகும் உள்ளடங்குகின்றன. இந்தப் பிரிவின் இலக்குகளை நிறைவேற்ற அனைத்து அலகுகளும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன.

பொதுவாக, பொறியியல் அலகு ஹைட்ராலஜி மற்றும் ஹைட்ராலிக் வடிவமைப்புகள் மற்றும் நிர்மாண வடிவமைப்புகள் ஆகிய துறைகளில் தனது பொறியியல் சேவைகளை வழங்குகின்றது. கட்டிடக்கலை அலகு கட்டிடக் கருத் திட்டங்களுக்கும் மற்றும் நிலக்காட்சிப்படுத்தல் வேலைகளுக்கும் தனது நிபுணத்துவ சேவையை வழங்குகின்றது. ஏனைய பிரிவுகள் இந்த இரண்டு அலகுகளுக்கும் ஒப்படைக்கப்படும் கருத் திட்டங்களை நிறைவு செய்ய தேவையான தொழில் நுட்ப உதவியை வழங்குகின்றன.

### I. பொறியியல் மற்றும் கட்டிடக்கலைப் பிரிவு

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை பொதுவாக பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. வாடிக்கையாளர் கருத் திட்டங்கள்
2. திறைசேரி நிதியிட்டுள்ள கருத் திட்டங்கள்
3. சொந்தக் கருத் திட்டங்கள்

### 1. வாடிக்கையாளர் கருத் திட்டங்கள்

வீஅஅச மற்றும் நஅஅச ஆகியவையும் மேல் மாகாணத்தில் உள்ள சில உள்ளூராட்சி மன்றங்களும் ஆ-அ பிரிவின் மிக முக்கியமான வாடிக்கையாளர் தரப்புகளாகும்.

- **வீஅஅச மேற்கொண்டு நிறைவேற்றிய கருத் திட்டங்கள்**

அதிவேக வீதிக் கருத் திட்டங்களுக்கான தலைமை வடிகாலமைப்பு ஆய்வை மேற்கொள்ளும் பணி வீஅஅச மூலம் இகாஅகூ தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2023 ஆம் ஆண்டில், ஆ-அ பிரிவு, முன்மொழிந்த ருவன்புர அதிவேக வீதிக் கருத் திட்டத்தின் நிமித்தம் நீரியல் மற்றும் நீர்வலு ஆய்வுகளை மேற்கொண்டது. இது தவிர, மத்திய அதிவேக வீதிக் கருத் திட்டத்தின் நிர்மாணக் கட்டத்தில் உள்ள வடிகாலமைப்பு சார்ந்த பிரச்சினைகள் இகாஅகூ தாபனத்தினால் கவனிக்கப்படுகின்றன.

#### உத்தேச ருவன்புர அதிவேக வீதிக் கருத் திட்டம்

ருவன்புர அதிவேக வீதிக் கருத் திட்டத்திற்கான நீரியல் நீர்வலு ஆய்வை மேற்கொள்ளும் பணி ஆ-அ பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தது. உத்தேச ருவன்புர அதிவேக வீதிக் கருத் திட்டம் கஹதுடுவவில் ஆரம்பித்து, இங்கிரிய வழியாகச்சென்று இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள கஹவத்தை என்ற இடத்தில் முடிவடையும். வீதியின் மொத்த நீளம் சுமார் 77 கிமீ. உருப்படம் 01 இல் காட்டப்பட்டுள்ளவாறு இந்தக் கருத் திட்டத்தில் 3 பிரிவுகள் உள்ளடங்குகின்றன. 2023 ஆம் ஆண்டு வரை ஆய்வுக்காக செலுத்திய மொத்த உசாதுணை கட்டணம் 31 மில்லியன் ரூபாவாகும். தற்பொழுது பிரிவு I வடிவமைப்புகளில் 60% வீதமான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. I ஆம் பிரிவினதும் மற்றும் II ஆம் பிரிவினதும் சுதாம ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.




உருப்படம் 01: ருவன்புர அதிவேக வீதிக் கருத் திட்டத்திற்கான உத்தேச ஓடுபாதை

#### உத்தேச மத்திய அதிவேக வீதிக் கருத் திட்டம்

மத்திய அதிவேக வீதிக் கருத் திட்டத்திற்கான நீரியல் நீர்வலு ஆய்வை மேற்கொள்ளும் பணி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த அதிவேக வீதி கடவத்தையில் ஆரம்பித்து குருநாகல் நகரத்தின்

ஊடாகச்சென்று உருப்படம் 02 இல் காட்டப்பட்டுள்ளவாறு தம்புள்ளையில் முடிவடையும். இந்த அதிவேக வீதியின் நீளம் சுமார் 185 கிமீ. குறித்த ஆய்வுக்கான மொத்த உசாதுணைக் கட்டணம் 62.5 மில்லியன் ரூபாவாகும்.

முக்கியமான நீரியல் மற்றும் ஹைட்ராலிஸ் ஆய்வை 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிறைவு செய்ய வேண்டியிருந்தது. 2023 ஆம் ஆண்டில், 01 ஆம் பிரிவினதும் மற்றும் 03 ஆம் பிரிவினதும் கருத்திட்டத்தை செயற்படுத்திய காலப்பகுதியில் ஆலோசனை சேவையை வழங்க இகாஅகூ தாபனத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆ-அ பிரிவு தேவையான சேவையை வெற்றிகரமாக வழங்கியது.




உருப்படம் 02: மத்திய அதிவேக வீதிக் கருத் திட்டத்திற்கான உத்தேச ஒடுபாதை

**குருனாகல் உத்தேச துணை வீதி**

குருநாகல் நகரில் உள்ள போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு ஒரு துணை வீதியை அமைக்க வீஅஅச திட்டமிட்டுள்ளது. முன்மொழிந்த துணை வீதியின் நீளம் சுமார் 3.5 கி.மீ. துணை வீதிக்காக முன்மொழிந்த ஒடுபாதை உருப்படம் 03 இல் காட்டப்பட்டுள்ளது. குறுக்கு வடிகாலமைப்பு தேவையை வீஅஅச இற்கு வழங்குவது இகாஅகூ இன் சிறப்புப்பணியாக இருந்தது.




உருப்படம் 03: குருனாகல் துணை வீதிக்கான உத்தேச ஒடுபாதை

- **ஏனைய நிறுவனங்கள்**

**மினுவங்கொட மாநகர சபை**

நகர அபிவிருத்தி அதிகார சபை (நஅஅச) மினுவாங்கொட நகரத்திற்கான ஒரு தலைமை அபிவிருத்தி முன்மொழிவை தயாரித்துள்ளது. உயரமான நிலம் இல்லாததால், வாரசந்தை ஸ்தலத்தை ஒட்டி அமைந்துள்ள நெல் வயலை அபிவிருத்தி செய்ய நஅஅச திட்டமிட்டது. மேற்கூறிய அபிவிருத்திற்கான வடிகாலமைப்பு மற்றும் காணி சீராக்கல் திட்டத்தைத் தயாரிக்கும் பணி இகாஅகூ தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்படி இகாஅகூ விரிவான வடிகாலமைப்பு ஆய்வை மேற்கொண்டு கருத்திட்டத்திற்கான விரிவான வடிகாலமைப்பு திட்டத்தை தயாரித்தது. ஆய்வுக்கான உசாதுணை கட்டணம் 2.2 மில்லியன் (VAT வரி நீங்கலாக) ரூபாவாகும்.



உருப்படம் 04: மினுவங்கொட நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான கருத்திட்டப் பிரதேசம்

**இமிச கருத் திட்டங்கள்**

- **மேல் கொத்மலை மின் உற்பத்தி நிலையத்தின் கட்டுகித்துல் ஒயா புகையிரதப் பாலம் அமைந்துள்ள பகுதியில் வண்டல்மண் அகற்றல்**

புகையிரப் பாலத்தடியிலும், பாலத்திற்கு அருகில் உள்ள நீர்க்குட்டையிலும் மற்றும் பிரதான நீர்க்குட்டையின் ஒரு பகுதியிலும் வண்டல் மண்ணை அகற்றுவது மேற்கூறிய கருத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஆ-அ பிரிவு, பொறித்தொகுதி மற்றும் உபகரண பிரிவுடன்

(பொஉ) இணைந்து கருத்திட்ட ஸ்தலத்தை சோதனையிட்டு கருத் திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்றியுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்கான அபிவிருத்தி பணியின் மொத்த பெறுமானம் கருத் திட்டத்தின் மொத்தப் பெறுமானம் 35 மில்லியன் ரூபாவாகும்.





உருப்படம் 05: வண்டல்மண் அகற்றல் முன்னேற்றம்

## 2. திறைசேரி நிதியிட்டுள்ள கருத் திட்டங்கள்

**பிலியந்தல துணை வீதிற்கான வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம்**

பிலியந்தல நகரம் கொழும்பு நிருவாகப் பிரதேசத்தின் சுற்றுப்புறப் பகுதியில் அமைந்துள்ளது. ஆகையால், இது அபிவிருத்திற்கு அதிக அழுத்தத்தைப் பெறுகின்றது. ஏற்கனவே நகரத்தில் அதிக போக்குவரத்து நெரிசல் காணப்படுகின்றது. ஆதலால், கைவிடப்பட்டுள்ள நெற்காணியை அபிவிருத்தி செய்து, பேரூந்து நிலையம், சந்தை போன்றவற்றை இடமாற்ற நடவடிக்கை எடுப்பதன் மூலம் நகரத்தை விரிவுபடுத்துவதற்கு நஅஅச முன்மொழிந்துள்ளது. கொழும்பு / ஹொரணை வீதியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காகவும், தென்னிலங்கைக்கு இலகுவாக அணுகுவதற்காகவும் ஜாலியகொடையிலிருந்து கெஸ்பேவ சந்தி வரையிலான ஒரு துணை வீதி ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்கான திறைசேரி நிதி ஒதுக்கீடு 22 மில்லியன் ரூபாவாகும். மேற்குறித்த நிதி ஒதுக்கீட்டில் உள்ளடங்கும் பிரதான சிறப்புப்பணிகள் பின்வருமாறு காணப்படும்.

- 3.5 மீ அகலமான கொங்கிறீட்டு வடிகாலமைப்பு நிர்மாணம்
- ஏற்கனவே இருக்கின்ற கால்வாயை அகழ்ந்து துப்புரவாக்குதல் மற்றும் சுவீகரிக்கப்பட்டுள்ள நிலத்தை அபிவிருத்தி செய்தல்
- விரிவான வடிகாலமைப்பு



உருப்படம் 06: பிலியந்தல கருத்திட்டத்திற்கான தளவமைப்புத் திட்டம்

**நீர் மட்டம் மற்றும் நீர் வெளியீட்டு அளவுகள் கருத்திட்டம்**

எதிர்கால சூழ்நிலைகளில் வெள்ளப்பெருக்குப் பாதிப்புகளைத் தணிப்பதற்கான தலைமை வடிகாலமைப்பு ஆய்வுகளை மேற்கொள்வது இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். தலைமை வடிகாலமைப்பு ஆய்வுகள் நீர்நிலைகள், ஏரிகள் மற்றும் முக்கியமான கால்வாய்களின் தற்போதைய நிலை மற்றும் நகர்வு என்பவற்றை அடிப்படையாக கொண்டு காணப்படுகின்றன. நீர் நிலையும் மற்றும் நீர்வெளியேற்ற அளவீடுகளும் வடிகாலமைப்பு ஆய்வுகளில் பயன்படுத்த வேண்டிய மிக முக்கியமான அளவுருக்களாகும்.

நீர் மட்டத் தரவுகளை சேகரிப்பதற்காக தற்போது, இலங்கைக் காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் கீழ்காணும் 7 ஆற்றுப்படுக்கைப் பகுதிகளினுள் 126 இடங்களை இனங்கண்டுள்ளது. அவை பின்வருமாறு காணப்படும்.

- பொல்கொட ஆற்றுப் படுக்கை
- ஜா-எல ஆற்றுப் படுக்கை
- முந்துன் எல ஆற்றுப் படுக்கை
- களு ஒயா ஆற்றுப் படுக்கை
- கொழும்பு பெரும்பாக ஆற்றுப் படுக்கை

- கொலன்னாவ ஆற்றுப் படுக்கை
- பறவா ஆற்றுப் படுக்கை

2023 ஆம் ஆண்டிற்கு திறைசேரி ஒதுக்கிய நிதி ஒதுக்கீடு 3 மில்லியன் ரூபாவாகும்.





உருப்படம் 07: நீர் மட்ட அளவீட்டு நிலையத்தின் நிறுவுகை

**முதுன் எல வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டுக் கருத் திட்டத்திற்கான விரிவான வடிகாலமைப்பு ஆய்வு**

முதுன் எல ஆற்றுப்படுக்கை களனி மற்றும் பியகம பிரதேச செயலகப் பிரிவுகளில் வருகின்ற மிகவும் சமதளமான தாழ்வான ஒரு நீர்நிலையாகும். அதன் தாழ்வான தன்மை காரணமாக அடிக்கடி வெள்ளப்பெருக்குகள் ஏற்படுகின்றன. இது கொழும்பு தலைநகரின் மிகவும் அண்மித்த நகரமயமாக்கப்பட்டுள்ள ஒரு பிரதேசமாகும். எனவே பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்தைத் தடுக்கும் முகமாக வெள்ளப்பெருக்குகளை தணிப்பதற்கு இகாஅகூ திட்டமிட்டுள்ளது.




உருப்படம் 08: பேலியகொட முதுன் எல உப ஆற்றுப்படுக்கை கருத்திட்டப் பிரதேசம்

இந்த ஆய்வில் கருதப்படும் வடிவமைப்பு அடையும் காலம் 25 ஆண்டுகள். MIKE 11 அடிப்படையிலான வெள்ள மாதிரி உருவாக்கப்பட்டு, பல்வேறு வெள்ளத் தணிப்பு நிலைகளை சோதிப்பதில் முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. கருத்திட்டப் பிரதேசம் கீழே காணப்படும் உருப்படம் 09 இல் காட்டப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டிற்கான திறைசேரி நிதி ஒதுக்கீடு 7.108 மில்லியன் ரூபாவாகும்.

**பிந்துனு எல வடிகாலமைப்பு மற்றும் மேம்பாட்டுக் கருத் திட்டம்**

பிந்துனு எலவை சூழவுள்ள திட்டமிடப்படாத அபிவிருத்தி மற்றும் நகரமயமாக்கல் ஆகியவற்றின் காரணமாக மழை பெய்யும் காலங்களில் சுற்றுப்புற பகுதிகளில் அடிக்கடி வெள்ளப் பெருக்குகள் ஏற்பட்டுள்ளன. ஆகையால், களுத்துறை மாவட்ட செயலகத்தினால் விடுத்த கோரிக்கையின் பேரில், இகாஅகூ பிந்துனு எல பகுதிற்கான ஒரு வெள்ளத் தணிப்பு முன்மொழிவுத் திட்டத்தை வகுத்தமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது. வெள்ளப் பெருக்கைக் குறைப்பதும், நெற்செய்கையை மீளமேற்கொள்வதற்கு பிந்துனு கால்வாயைப் புனரமைத்து அதன் மூலம் பிரதேசத்தின் சமூக-பொருளாதார நிலையை மேம்படுத்துவதும் இந்தக் கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.



உருப்படம் 09: பிந்துனு எல வடிகாலமைப்பு மற்றும் மேம்பாட்டுக் கருத் திட்டத்திற்கான தளவமைப்புத் திட்டம்

**மேல் மாகாணத்தில் எழும் உள்ளக வடிகாலமைப்புப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுவதற்கான வடிகாலமைப்புத் திட்டங்களை தயாரித்தல்**

வெள்ளப்பெருக்கு ஆபத்தை தணிப்பதற்கான தரவு சேகரிப்பு, ஆய்வுப் பணிகள் மற்றும் கொழும்பு மற்றும் வெளிப் பகுதிகள் ஆகியவற்றுக்கான தலைமை வடிகாலமைப்பு திட்டங்களைத் தயாரித்தல் முதலிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 14 தலைமை வடிகாலமைப்பு முன்மொழிவுத் திட்டங்கள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 6 முன்மொழிவுத் திட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன.

| இல. | விபரம் | குறிப்புகள் |
|---|---|---|
| 1 | பொரலஸ்கமுவ பகுதி உள்ளக வெள்ளப்பெருக்கு பிரச்சினைகள் | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 2 | சரண எல வடிகாலமைப்புத் திட்டம் | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 3 | கின்ஹதெனிய ஏரி - பாதுகாப்பு தலைமையக கருத்திட்டத்திற்கான ஏரி அகழ்ந்து துப்புரவாக்கல் | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 4 | பொரலஸ்கமுவ வடிகாலமைப்பு மேம்பாட்டு கருத்திட்டம் | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 5 | கொழும்பு 08 ரிஜ்வே கோல்ப்ஃ இணைப்பு சுற்றுப்புற கால்வாய் புனரமைப்பு | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 6 | பேலியகொட துட்டுகெமுனு வீதி உள்ளக வடிகாலமைப்பு பிரச்சினை | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 7 | கட்டான கொந்தகமுல்ல ஆரம்ப பாடசாலையில் உள்ள வடிகாலமைப்பு பிரச்சினை | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 8 | ராஜசிங்க மாவத்தை வெள்ளப்பெருக்கு பிரச்சினைகளுக்கான மழைநீர் வடிகாலமைப்பு முன்மொழிவுத் திட்டம் | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 9 | இம்புல்கொட ரணகல வீதி உள்ளக வடிகாலமைப்பு பிரச்சினை | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 10 | கம்பஹா சுமித்துரு உயன உள்ளக வடிகாலமைப்பு பிரச்சினை | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 11 | பானந்துறை கல்பொத்த வீதி வெள்ளப்பெருக்கு பிரச்சினை | நிகழ்கின்றது |
| 12 | கல்தேரம்மடுவத்த வடிகாலமைப்புத் திட்டம் | நிகழ்கின்றது |
| 13 | மில்லெனிய கொம்பொக்காவ வீதி வடிகாலமைப்புத் திட்டம் | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 14 | அவுபோமுல்லவுக்கான வடிகாலமைப்பு முன்மொழிவுத் திட்டம் | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 15 | பானந்துறை எம்பையர் காணிக்கான வடிகாலமைப்பு முன்மொழிவுத் திட்டம் | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 16 | புத்தள நகர வீதி வலையமைப்பு மேம்பாடு | நிறைவு செய்யப்பட்டுள்ளது |
| 17 | புத்தளம் பிரதேச வெள்ளப்பெருக்கு பிரச்சினைகள் | நிகழ்கின்றது |
| 18 | மாத்தறை கந்தர வெள்ளப்பெருக்கு பிரச்சினைகள் | நிகழ்கின்றது |
| 19 | குருனாகல் வைத்தியசாலைக்கு முன்னால் உள்ள சதுப்புநிலத்தின் அபிவிருத்தி | நிகழ்கின்றது |
| 20 | மாத்தறை திக்வெல்ல பிரதேச உள்ளக வெள்ளப்பெருக்கு பிரச்சினைகள் | நிகழ்கின்றது |

## 3. சொந்த கருத்திட்டங்கள்

எமது நிர்மாண பணிகளை நிலைபெறச்செய்யும் தர நியமங்களை பேணும் முகமாக நிர்மாண, கட்டடக்கலை, வடிகாலமைப்புகள் மற்றும் பெறுகை ஆவணங்கள் என்பவற்றின் வாயிலாக கூட்டுத்தாபனத்தின் உள்ளக பிரிவுகளுக்கு ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்புகள் பிரிவு நிபுணத்துவ சேவையை வழங்குகின்றது. 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தன.

- **நுவரெலிய சுற்றுலா பங்களாவுக்கான புனரமைப்பு**

தற்போதுள்ள ஒற்றை மாடி சுற்றுலா பங்களா காலத்திற்கொவ்வாததாகவுள்ளதால் பயன்படாத நிலையில் உள்ளது. மேலும் இது விடுமுறை காலங்களில் வருகை தருகின்ற நபர்களின் அதிக தங்குமிடவசதிகள் தேவையை பூர்த்திசெய்யக்கூடிய நிலையில் இல்லை. எனவே தற்போதுள்ள இந்த கட்டிடம் அறையின் கொள்திறனை அதிகரிக்கவும், புதுப்பிக்கவும் மற்றும் மேம்படுத்தவும் முன்மொழியப்பட்டுள்ளது. அந்த இலக்கை அடையும் பொருட்டு, தற்போதுள்ள கட்டிடத்திற்கு மொத்தமாக புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பாதிப்படைந்துள்ள பகுதிகள் மேம்படுத்தப்பட்டு காலத்திற்கொவ்வாத நிர்மாணங்கள் தேவையானவாறு அகற்றப்பட்டுள்ளன.





உருப்படம் 10: நுவரெலிய சுற்றுலா பங்களாவின் முன்னேற்றம்

- **சதுப்புநிலங்களை அத்துமீறி ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளை தவிர்ப்பதற்கான கருத்திட்டம் - கட்டம் I - கொத்தொட்டுவ பகுதி**

இந்த சதுப்பு நிலப் பகுதிகள் வெள்ளப்பெருக்கு நீரை தேக்கிவைப்பதற்காகவும் மற்றும் பராமரித்து முகாமை செய்வதற்காகவும் கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால், கொத்தொட்டுவ சதுப்புநிலம் அத்துமீறி ஆக்கிரமிக்கப்படுவதிலிருந்து அதனை பாதுகாப்பதற்கு இகாஅகூ பல முயற்சிகளை எடுத்துள்ளது. மேலும் கொத்தொட்டுவ சதுப்பு நிலம், பிரதேசத்தின் விரைவான நகரமயமாக்கலின் விளைவாக எப்போதும் அத்துமீறலுக்கு உள்ளாகும் பிரதான சதுப்பு நிலங்களில் ஒன்றாகும். ஒரு மூலோபாயமாக, வாழ்விடத்தைப் பாதுகாக்கும் வகையில் கொத்தொட்டுவ சதுப்பு நிலத்தை சுற்றி ஒரு சுற்றுப்புற கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இது சில சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. எனினும் ஆக்கிரமிப்புகளைத் தடுக்க இது போதுமானதாக இல்லை. ஆக்கிரமிப்பை தடுப்பதற்கான ஒரு பயனுள்ள உத்தியாக இது இனங்காணப்பட்டுள்ளது.

இந்த மூலோபாயத்தை மேலும் வலுப்படுத்த, இகாஅகூ நகர்ப்புற சதுப்புநிலங்களின் நிமித்தம் புத்திசாதுர்யமான பயன்பாட்டு எண்ணக்கருவை ஊக்குவிக்கும் அதே வேளையில் இப்போது கொத்தொட்டுவ சதுப்புநிலத்தை சதுப்புநில பூங்காவாக மாற்றத் திட்டமிட்டுள்ளது. சதுப்பு நிலத்தின் மொத்த சுற்றுப்புற நீளம் 4000 மீ. 1-வது கட்டமாக, நடைபாதையை நிறைவு செய்ய 1.8 கிமீ சுற்றளவுடைய ஒரு வட்டப்பகுதி தேர்ந்தெடுக்கப்பட்டது.




உருப்படம் 11: உத்தேச சைக்கில் ஓடுபாதை

- **அத்திடிய EMT ஆய்வுகூடத்திற்கான உத்தேச புனரமைப்பு**

தற்போதுள்ள கட்டிடம் தரை தளம் மற்றும் கூரை மொட்டை மாடி அடங்கலாக மூன்று தளங்களைக் கொண்டுள்ளது. இரண்டாவது மாடியில் ஒரு இரசாயன ஆய்வுகூடத்தை அமைக்க முன்மொழியப்பட்டுள்ளது. இது எதிர்கால வாய்ப்புகளுக்கான சாத்தியமான விரிவாக்கத்தை அல்லது அபிவிருத்தியை குறிக்கின்றது.



உருப்படம்12: நிறைவுசெய்யப்பட்டுள்ள வேலைப்பட்டறை வசதிக் கட்டிடம்

I. **பொறியியல் மூலப்பொருட்கள் சோதனை ஆய்வுகூடம்**

EMT ஆய்வுகூடம், மண், கொங்கிறீட்டு, செறிமானம் மற்றும் நீர், கழிவு நீர், சேறு, வண்டல்மண் போன்றவற்றுக்கான பல்வேறு சோதனைகளை மேற்கொள்கின்றது. ரொட்டரி (வொஷ் போரிங்), பெர்குஷன் அல்லது ஹேண்ட்டு ஆகுரிங் நுட்பங்களைப் பயன்படுத்தி போர்bர்ஹோல் ஆய்வுகள் இந்த ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. EMT ஆய்வு கூடத்தில் ஒரு YWE D45 ரொட்டரி துளையிடும் இயந்திரம் உள்ளது. ICP-MS மற்றும் மைக்ரோவேவ் டைஜெஸ்டர், நீர், கழிவு நீர், வண்டல்கள், சேறு போன்றவற்றில் காணப்படும் பல கன உலோகப் பொருட்களுக்கான பகுப்பாய்வுகள் இந்த ஆய்வு

கூடத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இது ஆய்வு கூடத்தின் நோக்கத்தையும் வலிமையையும் மேலும் விரிவுபடுத்துவதாக அமைகின்றது.

EMT ஆய்வு கூடம் 2023 ஆம் ஆண்டில் 43 மில்லியன் ரூபா வருமானத்தை ஈட்டியுள்ளது. 2023 ஆம் ஆண்டில் இகாஅகூ தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள பல கருத் திட்டங்களுக்கு இது உதவியுள்ளது. மேலும் இவற்றில் சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- GCFC மற்றும் EI கருத் திட்டம்
- தியவன்னாவ ஏரி நீரின் தர கண்காணிப்பு
- பேரவெவ ஏரி நீரின் தர கண்காணிப்பு
- ஹமில்டென் கால்வாயினதும் அதனை சூழவுள்ள கால்வாய்களினதும் நீர் தர கண்காணிப்பு
- ஒலியமுல்ல நீரிறைக்கும் நிலைய கருத் திட்டம்
- கெரவலப்பிட்டிய உத்தேச பல்வகை அபிவிருத்தி கருத்திட்டம்
- மொரட்டுவ ரத்மலான பகுதி மழைநீர் வடிகாலமைப்பு ஆய்வு
- மீகஹவத்த வீதி உத்தேச 15 மீ அகலமான பாலங்கள்
- முதுன் எல மழைநீர் வடிகாலமைப்பு மேம்பாட்டு கருத்திட்டம்
- சூரியமல்வத்த பல-நோக்க உள்ளக விளையாட்டு அரங்கு

மேலும், EMT ஆய்வு கூடம் இகாஅகூ தாபனம் உற்பத்தி செய்து பகிர்ந்தளிக்கும் கடல் மணலின் அளவு, நீரில் கரையக் கூடிய குளோரைட்டின் அளவு, கரையக் கூடிய அமிலக் கலத்தின் அளவு என்பவற்றை SLS 1397:2010 தரத்திற்கு ஏற்ப கண்காணித்து கடல் மணலின் தரத்தை உறுதிசெய்கின்றது.

## II. கணிய அளவையியல் பிரிவு

இந்தப் பிரிவு பின்வருவன போன்ற கருத் திட்டங்களில் ஒப்பந்தத்ததிற்கு முந்திய மற்றும் ஒப்பந்தத்திற்கு பிந்திய செயற்பாடுகளை மேற்கொள்கின்றது.

- கட்டிடம் மற்றும் சிவில் பொறியியல் கருத் திட்டங்களின் அனைத்து நிர்மாணங்களினதும் அளவுகளை பெற்றுக் கொள்ளல்
- இகாஅகூ தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் கருத் திட்டங்களுக்கான மதிப்பீடுகளை தயாரித்தல்
- நிர்மாணம், புனரமைப்பு மற்றும் வடிகாலமைப்பு என்பன தொடர்பான பணிகளை இகாஅகூ தாபனத்திற்கு பெற்றுக் கொள்ளும் பொருட்டு திறந்த கேள்வி விலை மனு நடைமுறையில் கலந்து கொள்ளல்
- இகாஅகூ தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் கருத் திட்டங்களின் இடைக் கால மதிப்பீடுகளையும் மற்றும் இறுதி மதிப்பீடுகளையும் தயாரித்தல்
- வித்தியாசமான பொருள்கட்டளைகளை தயாரித்தல்
- கோரல்களை தயாரித்தல்
- மூலப்பொருள் தேவைகளின் பட்டியல்களை தயாரித்தல்
- கேள்வி ஆவணங்களை தயாரித்தல்
- கேள்வி மனு தாரர் தரப்புகளின் முற்றகைமைகளை மதிப்பிடுதல்
- கேள்வி விலை மனுக்களை மதிப்பிடுதல்
- கேள்வி விலை மனு தாரர்களினதும் மற்றும் ஒப்பந்தத் தரப்புகளினதும் செலவு அறிக்கைகளை தயாரித்தல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் பேச்சுவார்த்தைகளை நடத்துதல்
- கேள்வி மனுவுக்கு முந்திய கூட்டங்களிலும் கேள்வி விலை மனுக்கள் திறக்கும் கூட்டங்களிலும் கலந்துகொள்ளல்
- வழமையான ஸ்தல விஜயங்களை மேற்கொள்ளல்
- ஒப்பந்த தரப்புகளின் இடைக்கால மற்றும் இறுதி கொடுப்பனவு சான்றிதழ்களை செவ்வைபார்த்து உறுதிப்படுத்துதல்
- ஒப்பந்த தரப்புகளின் வித்தியாசங்களையும் கோரல்களையும் செவ்வைபார்த்து உறுதிப்படுத்துதல்
- வாடிக்கையாளர்களுடனும், உசாதுணை தரப்புகளுடனும், ஒப்பந்த தரப்புகளுடனும் விலைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்துதல்
- கருத்திட்டங்களுடன் சம்பந்தமான கூட்டங்களில் கலந்துகொள்ளல்
- கேள்வி மனு ஆவணங்களை தயாரித்தல்

இந்த பிரிவு 2023 ஆம் ஆண்டில் இகாஅகூ மேற்கொண்டு நிறைவேற்றிய பிரதான கருத்திட்டங்களுக்கு கணிய அளவை சேவைகளை வழங்கியது. மேலும், நிர்மாண பிரிவினதும், வடிகாலமைப்பு மற்றும் காணி சீராக்கல் பிரிவினதும், பொறித்தொகுதி மற்றும்

உபகரணங்கள் பிரிவினதும், சதுப்புநில முகாமைத்துவ பிரிவினதும், திட்டமிடல் மற்றும் வணிக அபிவிருத்தி பிரிவினதும் அகழந்து துப்புரவாக்கல், காணி சீராக்கல், வடிகாலமைப்பு மற்றும் நிர்மாண செயற்பாடுகளுக்கும் கணிய அளவை சேவைகளை இந்த பிரிவு வழங்கியுள்ளது.

உள்வாரி மற்றும் வெளிவாரி கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கணிய அளவை சேவைகளின் மொத்த பெறுமானம் 182 மில்லியன் ரூபாவாகும்.

## சதுப்புநில முகாமைத்துவப் பிரிவு

சதுப்புநில முகாமைத்துவ பிரிவின் தாபிப்பு, குறிப்பாக வெள்ளப்பெருக்குகளை தணிக்கும் செயற்பாடுகளில் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் திறமுறையான பயன்பாடு ஆகியவற்றின் மீது ஒரு பொறுப்பை சுமத்துகின்றது.

இதன்படி சதுப்புநில முகாமைத்துவ பிரிவு குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்டகால கருத்திட்டங்களின் அடிப்படையில் வருடாந்த பணி நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்கின்றது.

2023 ஆம் ஆண்டில் சதுப்புநில முகாமைத்துவப் பிரிவு தனது வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிற்கு இணங்க ஏற்கனவே ஆரம்பித்த நிகழ்ச்சித்திட்டங்களையும் மற்றும் இனங்கண்டுள்ள புதிய கருத்திட்டங்களையும் தொடர்ந்து மேற்கொண்டு நிறைவேற்றி வருகின்றது.

கடந்த இரண்டு வருடங்களில் கழிவுகள் முக்கிய சுற்றாடல் பிரச்சினைகளில் ஒன்றாக மாறியதால், இந்த பிரிவின் கீழ் கழிவு முகாமைத்துவ அலகை தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டின் திட்டமிடப்பட்டிருந்த அனைத்து பணி நிகழ்ச்சித்திட்டங்களையும் நாம் வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளோம். அவை முழுமையாக கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

**தியசரு பூங்கா**

தியசரு பூங்கா இலங்கையின் நிருவாகத் தலைநகரான ஸ்ரீ ஜயவர்தனபுரவின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. இது, 60 ஏக்கர் பரப்பளவில் ஒரு புரட்சிகர நகர்ப்புற சதுப்புநில கேந்திர பகுதியாக விளங்குகின்றது. பரபரப்பான நகர்ப்புற நிலப்பரப்புகளுக்கு மத்தியில், இந்த பூங்கா அமைதியாக அழகாக காட்சியளிக்கின்றது. இது பல்வேறு சதுப்புநில வாழ்விடங்களுக்கு பார்வையாளர்களை ஈர்க்கின்றது. இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினால் நிருவகிக்கப்படும், தியசரு பூங்கா நகர்ப்புற சதுப்புநிலத்தின் பாதுகாப்பிற்கான ஒரு கலங்கரை விளக்கமாக விளங்குகின்றது. இதன் தூரநோக்கமும், செயற்பணியும், குறிக்கோள்களும் வனவிலங்குகளுடன் மனித இருப்பை ஒத்திசைக்கும் நோக்கங்களை சீரமைப்பதாக காணப்படுகின்றன. பாராளுமன்றத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள தியாசரு பூங்கா, சதுப்புநிலங்கள், வெள்ளப்பெருக்குகள் சூழ்ந்த வனப்பகுதிகள், ஏரிகள் மற்றும் குளங்கள் என்பன அடங்கலாக பல்வேறு சதுப்புநில சூழல் முறைமைகளை கொண்டுள்ளது. பூங்காவின் திறமுறையான அமைவிடம், நகர வாழ்க்கையின் அமைதியற்ற சூழலில் அமைதி பெற வாய்ப்பளிக்கும் அதே வேளையில், கல்வி மற்றும் சதுப்புநிலப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்விற்கான தளத்தையும் வழங்குகின்றது.

தியாசரு பூங்கா நகர்ப்புற சதுப்புநிலப் பாதுகாப்பில் முன்னணி வகிக்கின்றது. இந்த முக்கியமான உயிரியல் சூழல் முறைமைகளை பாதுகாப்பதற்காக பல்வேறு முன்னெடுப்புத்திட்டங்களை செயற்படுத்துகின்றது. பூங்காவின் நிருவாகம் மனித செயற்பாடுகளுக்கும், செழித்து வளரும் வனவிலங்குகளுக்கும் இடையே ஒரு நுட்பமான சமநிலையை பேணுவதற்கு உறுதிபூண்டுள்ளது. வாழ்விடங்களின் மறுசீரமைப்பு, நீரின் தர கண்காணிப்பு மற்றும் நிலையான அபிவிருத்தி செயற்பாடுகள் என்பன பாதுகாப்பு முயற்சிகளில் உள்ளடங்குகின்றன. தியாசரு பூங்கா தகவல் தொடர்பு, கல்வி, பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வு (CEPA) முதலிய செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த செயற்பாடுகள் அனைத்து வயதினருக்கும் நன்மை அளிக்கின்றன. அதே நேரம் சதுப்புநில உயிரியல் சூழல் முறைமைகளுக்கான பொறுப்பும் பாராட்டும் சார்ந்த உணர்வையும் மேம்படுத்துகின்றது.

**2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில்**
**மேற்கொள்ளப்பட்டுள்ள முக்கிய செயற்பாடுகள்**



- கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் - தியசரு பூங்கா பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் இலக்குக்கொள்கின்ற கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி சதுப்புநில உயிரியல் சூழல் முறைமைகள், பல்லினத்துவம் மற்றும் அவற்றை பாதுகாப்பதன் முக்கியத்துவம் முதலியன பற்றிய அறிவை மாணவர்களுக்கு வழங்குகின்றது.

    - சமூக பங்கேற்பு - பூங்கா பல்வேறு வேலையரங்குகள், கருத்தரங்குகள் மற்றும் தன்னார்வ நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் ஊடாக சமூக ஈடுபாட்டை ஊக்குவிக்கின்றது. இது நகர்ப்புற சதுப்புநிலங்களைப் பாதுகாப்பதில் உள்ளூர்வாசிகளிடையே உரிமையை மேம்படுத்தி பொறுப்புணர்வை வளர்க்கின்றது.

    - விழிப்புணர்வு பிரச்சாரங்கள் - தியசரு பூங்கா சமூக ஊடகங்கள், நிகழ்வுகள் மற்றும் கூட்டாண்மைகள் என்பவற்றை பயன்படுத்தி, சதுப்புநிலப் பாதுகாப்பையும் நிலையான நடைமுறைகளையும் பற்றிய தகவல்களைப் பரப்புவதற்கு, பரந்த பார்வையாளர்களைச்சென்றடைய விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஏற்பாடு செய்கின்றது. 2023 ஆம் ஆண்டில், 56 கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும்,

      வேலையரங்குகளும், கருத்தரங்குகளும், தன்னார்வ நிகழ்ச்சித்திட்டங்களும் நடத்தப்பட்டன. மேசை கலெண்டரை அச்சிட்டமை 2023 ஆம் ஆண்டில் செய்த மிகவும் உற்சாகமான செயல்களில் ஒன்றாகும். இதில் தியாசரு பூங்காவின் குறிப்பிடத்தக்க இடப் படங்களும் இயற்கை பாதுகாப்பும் தொடர்பான அனைத்து நினைவு நாட்களும் ஒவ்வொரு பக்கத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

தியசரு பூங்கா நகர்ப்புற சதுப்புநிலப் பாதுகாப்பிற்கான ஒரு முன்மாதிரியாக காணப்படுகின்றது. இது நுட்பமான சுற்றாடல் முறைமைகளை பாதுகாப்பதன் மூலம் மனிதனின் செயற்பாடுகளில் வெற்றிகரமான ஒருங்கிணைப்பைக் காட்டுகின்றது. மேலும் இது தொலைநோக்கு அணுகுமுறை, கல்விக்கான அர்ப்பணிப்பு மற்றும் செயலில் சமூக ஈடுபாடு என்பவற்றின் மூலம் பூங்கா இயற்கை ஆர்வலர்களுக்கு ஒரு புகலிடமாக மட்டுமல்லாமல், நகர்ப்புற சதுப்புநிலங்களைப் பாதுகாப்பதில் விழிப்புணர்வையும் பொறுப்புணர்வையும் ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்கை வகிக்கின்றது. இதன் வெற்றிக்கு ஒரு சான்றாக, நகர்ப்புற இடங்கள் இயற்கையுடன் எவ்வாறு இணக்கமாக இருக்க முடியும் என்பதற்கு தியசரு பூங்கா ஒரு சிறந்த முன்னுதாரணமாகும்.

இந்த நகர்ப்புற இயற்கை பூங்கா உள்ளூர் மக்களுக்கு மட்டுமல்லாமல், வெளிநாட்வருக்கும் பயனளிக்கும். 2023 ஆம் ஆண்டில், 411 வெளிநாட்டவர்களும் 61,046 உள்ளூர்வாசிகளும் இந்த ஸ்தலத்தை பார்வையிட்டுள்ளனர்.

மேலும் 2023 ஆம் ஆண்டில், 1541 திருமண படப்பிடிப்புகளும், 992 பிறந்தநாள் படப்பிடிப்புகளும், 05 மாதிரிப் படப்பிடிப்புகளும், 150 முன்-கூட்டிய படப்பிடிப்புகளும், 24 கர்ப்பகால படப்பிடிப்புகளும், 05 குறுகிய நாடக படப்பிடிப்புகளும், 08 தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களும் யூ டியூப் நிகழ்ச்சித்திட்டங்களும், 03 குடும்ப படப்பிடிப்புகளும் ஸ்தலத்தில் பிடிக்கப்பட்டன. இதனால் கணிசமான வருமானம் ஈட்டப்பட்டது. இந்த விலைமதிப்பற்ற இயற்கை சுற்றாடல் முறைமையின் தரத்தை பாதுகாக்கவும் பராமரிக்கவும் என 33 மில்லியன் ரூபா திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் கீழ் செலவு செய்யப்பட்டுள்ளது.

**பேரவெவ ஏரி நீரின் தர கண்காணிப்பு மற்றும் மேம்பாடு**



பேரவெவ ஏரி, அதன் பன்முக பயன்பாடுகளுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. பல ஆண்டுகளாக மாசுகளினாலும் சீரழிவுகளினாலும் இது பாதிக்கப்பட்டுள்ளது. இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் (இகாஅகூ), ஏனைய அரசாங்க அக்கறையுடைய தரப்பு

நிறுவனங்களுடன் இணைந்து, 2012 ஆம் ஆண்டு முதல் ஏரியினது நீரின் தரத்தை மீட்டெடுப்பதற்கான விரிவான அணுகுமுறையின் அவசியத்தை அங்கீகரித்தது.



தேர்ந்தெடுத்த 34 இடங்களில் பேரவெவ ஏரியினது நீரின் தரத்தை இகாஅகூ தீவிரமாக கண்காணித்து, மாதத்திற்கு இருமுறை சோதனைகளை நடத்தி வருகின்றது. ஏரியின் ஆரோக்கியத்தைப் புரிந்துகொள்வதற்கும் மாசு மூலங்களை அடையாளம் காண்பதற்கும் முக்கியமான பல்வேறு குறிகாட்டிகள் மதிப்பிடப்பட்டுள்ள அளவுருக்களில் உள்ளடங்குகின்றன. இதற்கிடையில், மிதக்கும் சதுப்புநிலங்கள் (FTW) ஏரியின் மாசுபட்டுள்ள பகுதிகளை பைட்டோரேமீடியேஷன் செய்வதற்காக பேரவெவ ஏரிக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், பேரவெவ ஏரியின் அதிகப்படியான மாசுபடுத்தும் சுமைகளும் சைட்டோடாக்சின்களின் குவிப்பும் காரணமாக இந்த அணுகுமுறையின் வெற்றிகரமான தன்மை மட்டுப்பட்டுள்ளது.

எனவே, நனோ குமிழி காற்றோட்டத்தையும் நனோ காபன் கட்டுப்பாட்டையும் உள்ளடக்கிய அதிநவீன ஜப்பானிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்த Grepo PTE Ltd கம்பனியுடன் இணைந்து Grepo Lanka Bioscience (Pvt) Ltd கம்பனியின் முன்மொழிவை இகாஅகூ ஏற்றுக்கொண்டது. நானோ குமிழி காற்றோட்டம், மீன் வளர்ப்பும் கழிவு நீர் சுத்திகரிப்பும் போன்ற பல்வேறு பயன்பாடுகளில் அதன் செயல்திறனுக்கு சிறந்ததாக காணப்படுகின்றது. இது பேரவெவ ஏரியினது நீரின் தரத்தை மேம்படுத்த பயன்படுத்தப்படுகின்றது.

நனோ குமிழி காற்றோட்டம்

- நனோ குமிழ்கள் 100 நானோமீட்டர்களுக்கும் குறைவான விட்டம் உள்ளவையாகும். வழக்கமான முறைகளுடன் ஒப்பிடும்போது அதிக ஒட்சிசன்ன் பரிமாற்ற செயல்திறன் உடையதாக காணப்படுகின்றது.
- ஒட்சிசனை கரைப்பதிலும், ஊட்டச்சத்துக்களை காவிச்செல்வதிலும், கழிவு நீரை சுத்திகரிப்பதிலும், கரிமப் பொருட்களின் முறிவை மேம்படுத்துவதிலும் பயனுள்ளதாக காணப்படுகின்றது.
- ஏரோபிக் நுண்ணுயிரிகளின் வளர்ச்சியை துரிதப்படுத்துகின்றது. ஆல்கா வளர்ச்சியையும் அதனுடன் இணைந்த நாற்றங்களையும் குறைக்கின்றது.

நனோ கார்பன் கட்டுப்பாடு

- நனோ கார்பன் கட்டுப்பாடு நோய்க்கிருமி செயலிழக்க வினைத்திறன் ஒட்சிசன் இனங்களின் உருவாக்கத்தை ஊக்குவிப்பதன் மூலம் நனோ குமிழி காற்றோட்டத்தை நிறைவு செய்கின்றது.
- நீரின் கலவையை மேம்படுத்துகின்றது. இரசாயனங்களினதும் சேர்க்கைகளினதும் சீரான வழங்கலை உறுதிசெய்கின்றது.

நனோ குமிழி காற்றோட்டக் கருவிகள் மாசுகளை கட்டுப்படுத்துவதற்காக மூலோபாய ரீதியாக பேரவெவ ஏரிக்குள் குறிப்பிட்ட இடங்களில் வைக்கப்படும். இந்த கருத்திட்டம் நீரின் தெளிவை மேம்படுத்துவதையும், தீங்கு விளைவிக்கும் சயனோபாக்டீரியாவின் பரவலைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது வழக்கமான கண்காணிப்பு முன்னேற்றத்தை மதிப்பிடும். மேலும் கார்பன் கிரெடிட் திட்டத்தின் கீழ் அடையப்படும் நன்மைகளும் கோரப்படும்.
பேரவெவ ஏரியில் நீரின் தர மேம்பாட்டிற்காக ஜப்பானிய தொழில்நுட்பத்தை அங்கீகரிக்கின்றது. இந்த முக்கிய நீர்நிலையை மீட்டெடுப்பதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படிமுறையை இது கருதுகின்றது. இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் அனைத்து அக்கறையுடைய தரப்பு நிறுவனங்களுடனும் இணைந்து கருத்திட்டத்தின் இலக்குகளை அடைவதற்கும் முன்னேற்றத்தை விடாமுயற்சியுடன் கண்காணிப்பதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளது. இம்முயற்சியின் வெற்றி ஆரோக்கியமான பேரவெவ ஏரியை உறுதிசெய்வதோடு மட்டுமல்லாமல், சுற்றாடலின் நிலைத்தன்மைக்கும் பங்களிக்கின்றது. அதுமட்டுமன்றி எதிர்கால நீர் மறுசீரமைப்பு கருத்திட்டங்களுக்கு முன்னோடியாகவும் விளங்குகின்றது. தேவையான அங்கீகாரங்களும் ஆரம்ப உபகரணங்களை நிறுவுதலும் உள்ளடங்கிய

பூர்வாங்க ஆயத்த பணிகள் 2023 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

**கொலன்னாவ மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம் (KSWD-EIP)**

கருத்திட்டப் பிரதேசம் 17 கிமீ$^2$ பரப்பளவு உடையதாகும். இது கொழும்பு மாவட்டத்தில் கொலன்னாவ பிரதேச செயலகப் பிரிவுக்கு சொந்தமான கொலன்னாவ நகர சபை மற்றும் கொட்டிகாவத்தை-முல்லேரியா நகர சபை ஆகிய இரண்டு உள்ளூராட்சி மன்றங்களின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ளது. 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முழுமையாகவும், 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பகுதியளவாகவும் இந்தக் கருத்திட்டத்தின் கீழ் அடங்குகின்றன. கருத்திட்டப் பிரதேசத்திற்குள் 2012 ஆம் ஆண்டில் சனத்தொகை 191,687 ஆகவும், குடும்பங்கள் 40125 ஆகவும் இருந்தன.




நில அமைப்பு ரீதியாக, கருத்திட்டப் பிரதேசம் களனி ஆற்றின் இடது கரை வெள்ளப்பெருக்கு சமவெளியில் அமைந்துள்ளது. களனி ஆற்றின் வெள்ளப்பெருக்கிலிருந்து கொழும்பு நகரைப் பாதுகாப்பதற்காக ஹார்வார்ட்டு அணையை நிர்மாணித்ததில் இருந்து களனி ஆற்றின் நிலப்பரப்பு வெள்ளத்திற்கு எதிராக பாதுகாப்பற்ற பகுதியாக இனங்காணப்பட்டுள்ளது. கருத்திட்டப் பிரதேசம் கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களாக திட்டமிடப்படாத வகையில் நகரமயமாக்கப்பட்டது. இப்போது இது அபிவிருத்தி அடைந்த ஒரு பகுதியாக இனங்காணப்பட்டுள்ளது.





கருத்திட்டப் பிரதேசம் அடிக்கடி உள்நாட்டு வெள்ளத்தால் மிகவும் பாதிக்கப்படக்கூடிய நிலையிலுள்ளது. களனி ஆற்றின் சிறு வெள்ளப்பெருக்கு நிலைமையிலிருந்து அவ்வப்போது நிலத்தடி வெள்ளம் பாதுகாக்கப்படுகின்றது (நீர்ப்பாசன திணைக்களம் வகைப்படுத்திய நாகலகம் வீதி நீர் நிலை அளவீட்டில் ஆற்று நீர் மட்டம் 5 மீ MSL சிறு வெள்ளப்பெருக்கு மட்டமாகும்).

கித்தம்பஹுவ, சலலிஹினி மாவத்தை, தண்டுதோட்டை ஆகியவை குறித்தொதுக்கப்பட்டுள்ள கருத்திட்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள மூன்று மழைநீர் வடிகால் கால்வாய் முறைமைகளாகும். இவை மழைநீரை களனி ஆற்றினுள் வெளியேற்றுகின்றன. மழைநீர் தேங்கிநிறக்கும் பகுதிகள், கால்வாய்கள், கால்வாய் ஒதுக்கப்பகுதிகள் ஆகியவற்றில் திட்டமிடப்படாத அபிவிருத்தி மற்றும் ஆக்கிரமிப்புகளினால் ஏற்படும் தற்போதைய வடிகால் கால்வாய்களின் புறம்போக்குகள் முதலியவற்றின் காரணமாக நீர் தேக்கங்களின் போதுமான கொள்ளளவு, குறைவான போக்குவரத்து ஆற்றல் மற்றும் தடைகள் என்பவற்றினால் கருத்திட்டப் பிரதேசம் உள்ளூர் வெள்ளப்பெருக்குகளினால் பாதிக்கப்படுகின்றது. SDG1, SDG9 SDG11, SDG13, SDG14, SDG15 ஆகிய நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக கொலன்னாவ வடிகால் ஆற்றுப்படுகையில் அடிக்கடி ஏற்படும் உள்ளூர் வெள்ளப்பெருக்குகளை தணிக்கும் பொருட்டு இ-ப வீதிகள், தற்போதுள்ள வீதிக் கடவை நிர்மாணங்கள்

என்பவற்றை விரிவுபடுத்துதல், தக்கவைத்தல்/தடுப்புக் குளங்களை உருவாக்குதல் மற்றும் நீரிறைத்தனுப்பும் நிலையங்களை தாபித்தல் முதலிய நிர்மாண செயற்பாடுகள் முன்மொழியப்பட்டுள்ளன.













இந்த கருத்திட்டம் 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டு வரை சாத்தியவள ஆய்வு, விரிவான பொறியியல் வடிவமைப்புகள் (தஹம்வெல கால்வாய், பசன்னா கால்வாய், சலலிஹினி மாவத்தை கால்வாய்), தற்போதுள்ள 650 மீ நீளமான 08 கால்வாய்களை விசாலப்படுத்தல், கால்வாய்களின் மேம்பாடு, 01 நீர்த்தேக்கமில்லாத நீர்க்குட்டைய அமைத்தல் மற்றும் கால்வாய் பராமரிப்பு முதலிய பணிகள் அடங்கலாக 581.97 மில்லியன் ரூபா பெறுமதியான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துணைக் கால்வாய், தண்டுதோட்டை கால்வாய் முறைமை, கால்வாய் பராமரிப்பு பணிகள், 03 வாய்க்கால்களை விரிவுபடுத்துதல், 01 நீர்த்தேக்க நீர்க்குட்டையை அமைத்தல் மற்றும் காணி சுவீகரிப்புக்கான நிலப்பரப்பு ஆய்வு பணிகளுக்கான விரிவான பொறியியல் வடிவமைப்புகள் என்பன போன்ற 264.79 மில்லியன் ரூபா பெறுமதியான பணிகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மதிப்பிடப்பட்டுள்ள கருத்திட்ட செலவு 8300 மில்லியன் ரூபாவாகும். இதற்கான நிதி திறைசேரியினால் வழங்கப்படும். சாத்தியவள ஆய்வு, விரிவான பொறியியல் வடிவமைப்பு மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம், காணி சுவீகரித்தல் மற்றும் இழப்பீடு, செயற்படுத்துகை மற்றும்

இயக்கச்செயற்பாட்டு பராமரிப்பு பணிகள் என்பன இந்த மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில், நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக கருத்திட்ட நிதி போதுமானதாக இருக்கவில்லை. ஆகையால் அத்தியாவசிய செயற்பாடுகளை முதலில் இனங்காணுவதற்கு முடிவு செய்து நிதியுதவிக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டது. அதன்படி, கருத்திட்ட காலத்தை 2027 ஆம் ஆண்டு வரை நீடிப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரமும் கிடைத்தது. மேலும் 2024 ஆம் ஆண்டுக்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டு (300 மில்லியன் ரூபா) வழங்கப்பட்டுள்ளது.

**<u>இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் முகாமை செய்யும் கெரவலப்பிட்டிய கழிவு நீர் முகாமைத்துவ பூங்கா</u>**

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம், கொழும்புப் பகுதியிலும் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளிகளிலும் உருவாகும் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்கான நடுத்தர கால தீர்வாக கெரவலப்பிட்டிய கழிவு முகாமைத்துவ பூங்காவில் (KWP) உர உற்பத்தி நிலையத்தை 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 முதல் ஆரம்பித்தது. உரம் தயாரிக்கும் பொறித்தொகுதியின் ஆரம்ப உற்பத்திக் கொள்ளளவு 100மெடொ/நாள் ஆகும். மீதொட்டமுல்லை குப்பை மேடு சரிந்து விழுந்ததன் பின்னர் திறந்த வெளியில் குப்பைகளை கொட்டுவதால் ஏற்படும் சுற்றாடல் பாதிப்புகளை குறைப்பதே இந்த கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். சட்ட அமுலாக்கலையும் விழிப்புணர்வையும் கொண்டு கருத்திட்டத்தை ஆரம்பித்த 9 மாதங்களுக்குள் SWM இன் 100% மூலப் பிரிவினை கருத்திட்டம் அடைந்துள்ளது. இந்த கருத்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில், KWP மொத்தம் 750மெ.டொ. கழிவுகளைப் பெற்றுள்ளது. 550 மெ.டொ. மக்கும் குப்பைகளும் 200 மெ.டொ. மக்காத குப்பைகளும் குவிக்கப்பட்டன. மொத்தமாக வந்தடையும் கழிவுகளுக்கு இடவசதியளிக்க வசதிகள் போதியளவில் இல்லை. எனவே, KWP இல் புதிய சல்லடை இயந்திரத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம் உர உற்பத்தி கொள்ளளவு அதிகரிக்கப்பட்டது. தற்போதைய தினசரி உர உற்பத்தி சாதகமான காலநிலையில் சுமார் 30 மெற்றிக் டொன்களாக காணப்படுகின்றது. முழு உரமும் திறந்த சந்தைக்கு விநியோகிக்கப்படுகின்றது.

தற்போது கெரவலப்பிட்டியவில் முதல் கழிவு சக்தி உற்பத்தி கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக நாளாந்தம் வெளியேறும் கழிவுகளின் அளவு 150 மெற்றிக் டொன்னாக காணப்படுகின்றது.

KWP உடன் தொடர்புடைய முக்கிய விபரங்கள் - 2023

- கிடைத்த மொத்த கழிவுகள் - 52,576.33 மெ.டொ.
- மொத்த கொம்போஸ்ட்டு உர விற்பனை - 225.00 மெ.டொ.
- கழிவுகள் ஏற்கப்பட்டதன் மூலம் கிடைத்த மொத்த வருமானம் - ரூ. 94,627,116.00
- கொம்போஸ்ட்டு உர விற்பனையிலிருந்து கிடைத்த மொத்த வருமானம் - ரூ. 3,676,295.00

KWP உர உற்பத்தி வசதி எடைப்பாலம், 80 x 45 மீ² கொங்றீட்டு தளம், 3 விண்ட்ரோ டேர்னர் கொம்போஸ்ட்டு உர சல்லடை இயந்திரம், நீண்டகரம் உடைய அகழ்வு இயந்திரம் 01, குறுகியகரம் உடைய அகழ்வு இயந்திரம் 01, ஆறு சக்கர டிப்பர் வண்டி 01, நான்கு சக்கர உழவியந்திரம், பக்கோஹோல் லோடெர் மற்றும் ஸ்கிட் ஸ்டீயர் என்பவற்றை கொண்டுள்ளது. விண்ட்ரோ டேனெர் காற்றோட்டம் மூலம் சிதைவு செயல்முறையை மேம்படுத்தி உரத்தின் தரத்தையும் விளைச்சலையும் மேம்படுத்துகின்றது.

அங்கீகாரம் பெற்ற ஆய்வுகூடங்களிலிருந்து உரத்தின் தரத்தை உறுதிப்படுத்த அவ்வப்போது வழமையாக உரத்தின் தர சோதனை செயன்முறையாக நடத்தப்படுகின்றது. “மிஹிஜயா” என்ற உரம் விவசாய தேவைகளுக்கு பொருத்தமானது என்பதை சோதனை முடிவுகள் உறுதிப்படுத்தின. மேலும், கனரக உலோக உள்ளடக்கம் இலங்கை தர நியம கட்டளைகள் நிறுவகம் பரிந்துரைத்த நிலையான அதிகூடிய அனுமதித்த அளவை பார்க்கிலும் மிகவும் குறைவாக இருப்பதை சோதனை முடிவுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

மக்காத கழிவுகளுக்கு தீர்வுகாணும் பொருட்டு பொலிஎதிலின் பிளாஸ்டிக் பைரோலிசிஸ் பொறித்தொகுதியை அமைப்பதற்காக LOLC அட்வான்ஸ் ரெக்னொலஜீஸ் தனியார் நிறுவனத்திற்கு இகாஅகூ 4Ac காணியை

ஒதுக்கியுள்ளது. LOLC நிறுவனம் ஒரு நாளைக்கு 10 மெ.டொ. செயலாக்க கொள்ளளவுடைய பொறித்தொகுதியை அமைத்துள்ளது. இது எதிர்வரும் ஆண்டுகளில் ஒரு நாளைக்கு 40 மில்லியன் டொன் வரை அதிகரிக்கப்படும்.











**<u>சதுப்புநிலங்கள் அத்துமீறப்படுவதை தவிர்க்கும் கருத்திட்டம் - கட்டம் I - (கொத்தொட்டுவ சதுப்புநில பூங்கா)</u>**

**அறிமுகம்**




1990 ஆம் ஆண்டுகளில் இலங்கை பாராளுமன்றத்தை சுற்றியுள்ள ஆயிரம் ஏக்கர் அளவான சதுப்பு நிலங்கள் (நெல் வயல்கள் அடங்கலாக) கொழும்பு பெரும்பாக வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் நீரை தேக்கி வைக்கும் பகுதிகளாகப் பராமரிக்க அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டன. இந்த சுவீகரித்த காணிகள் பின்னர் வெள்ளம் தேங்கிய பகுதிகளாக பராமரிக்கும் நிமித்தம் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு (இகாஅகூ) ஒப்படைக்கப்பட்டன. எனினும், சுவீகரித்த நிலப்பரப்பு காலப்போக்கில் அனுமதியின்றி மண் அள்ளுதல் மற்றும் ஆக்கிரமிப்புகள் என்பவற்றினால் குறைந்துள்ளமை தெரியவந்தது. ஆகையால், எஞ்சியுள்ள வெள்ளம் தேங்கிய பகுதிகளை பாதுகாப்பதற்கான ஒரு தீர்வாக, சுவீகரித்த அந்த நிலங்களுக்கான எல்லை மீள்-திறப்பு கருத்திட்டம் 2013 ஆம் ஆண்டு இகாஅகூ தாபனத்தினல் ஆரம்பிக்கப்பட்டது. கொத்தடுவ சதுப்புநிலம் ஒரு முக்கியமான வெள்ளம் தேங்கி நிற்கும் பகுதியாகவும், ஆக்கிரமிப்புகளினால் அதிக பாதிப்புக்குள்ளான ஒரு பெரிய சதுப்புநிலப் பகுதியாகவும் கொழும்பு ஈரநில பிரதேசத்தினுள்

இனங்காணப்பட்டுள்ளது. ஆகையால் எல்லைகளை மீண்டும் திறப்பதற்கும் எல்லைத் தூண்களை நிர்மாணிப்பதற்கும் அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டில் அந்த பணிகள் நிறைவு செய்யப்பட்டன.

இந்த சதுப்புநிலப் பகுதிகள் வெள்ளத்தை தக்கவைக்கும் நோக்கங்களுக்காக பராமரிக்கவும் நிர்வகிக்கவும் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் கொதொட்டுவ சதுப்புநிலத்தை ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாப்பதற்கு இகாஅகூ பல முயற்சிகளை எடுத்துள்ளது. இந்த சதுப்புநிலத்தின் பெரும்பாலான பகுதிகள் முன்னர் முதன்மையாக செயலிலுள்ள நெல் வயல்களாக காட்சியளித்தன. கொழும்பு மக்கள் சதுப்புநிலங்களுடன் இணைந்திருக்கும் பாரம்பரிய ஒரு முறையாக இது காணப்படுகின்றது. எவ்வாறாயினும், காணிகளை சுவீகரித்ததன் மூலம் இந்த இணைப்பு முற்றிலும் சீர்குலைந்தது. இதனால் கொழும்பில் உள்ள சதுப்புநிலங்களிலிருந்து மக்கள் விலகினர். காலப்போக்கில், மக்கள் சதுப்புநிலங்களை ஆக்கிரமிக்க முனைந்தனர். மேலும் கொதொட்டுவ சதுப்புநிலம் பிரதேசத்தின் விரைவான நகரமயமாக்கல் காரணமாக எப்போதும் அத்துமீறலுக்குள்ளாகும் முக்கிய சதுப்புநிலங்களில் ஒன்றாக காணப்படுகின்றது. ஒரு மூலோபாயமாக வாழ்விடத்தைப் பாதுகாப்பதற்காக கொதொட்டுவ சதுப்புநிலத்தை சுற்றி ஒரு சுற்றுப்புற கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இது சில சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. ஆனால் இது ஆக்கிரமிப்புகளை தடுக்க போதுமானதாக இல்லை. இதன் விளைவாக சதுப்புநிலத்தை பொது இடமாக மாற்றும் யுக்தியாக சதுப்புநிலத்தை சுற்றி மொத்தம் 4 கி.மீ நீளத்திற்கு ஒரு சுற்றுவீதி அமைக்கப்பட்டுள்ளது. நகர்ப்புற சதுப்புநிலங்களுக்கும் மக்களுக்கும் இடையே இழந்த தொடர்பை மீண்டும் சதுப்புநிலத்தின்பால் கொண்டு வருவதன் மூலம் மீளக்-கட்டியெழுப்ப வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். ஆக்கிரமிப்பைக் கைவிடுவதற்கான ஒரு சிறந்த உத்தியாக இது இனங்காணப்பட்டுள்ளது. இந்த மூலோபாயத்தை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு நகர்ப்புற சதுப்புநிலங்களுக்கான புத்திசாதுர்யமான பயன்பாட்டு எண்ணக்கருவை இகாஅகூ ஊக்குவிக்கும் அதே வேளையில், இப்போது கொதொட்டுவ சதுப்புநிலத்தை ஈரநிலப் பூங்காவாக மாற்றுவதற்கு திட்டமிட்டுள்ளது.

1-வது கட்டமாக நடைபாதையை நிறைவு செய்ய 1.8 கிமீ சுற்றளவு உடைய ஒரு வட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் மொத்த நீளம் 1 கிமீ என்ற அளவில் இருந்தது. இதில் 1.8 கிமீ பகுதியில் பக்க வடிகால்களும் சேர்த்து நிறைவு செய்யப்பட்டன. நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடி நிலையில், சதுப்புநிலத்தை பாதுகாக்கும் போது பரஸ்பர நலன்களுக்காக வெற்றிக்கு-வெற்றி என்ற சூழ்நிலையை இலக்காகக் கொண்டு, நிதி உதவியின் நிமித்தம் தனியார்-பொது கூட்டாண்மையை தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.








**கொழும்புப் பகுதி நீரின் தர மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

பெருகிவருகின்ற சனத்தொகை, மட்டுப்படுத்தப்பட்டளவான வளங்கள், காலநிலை மாற்றத்தினால் அதிகரித்து வருகின்ற தாக்கங்கள் என்பவற்றினால் கொழும்பு நகரம் கடும் அழுத்தத்தை எதிர்நோக்கி வருகின்றது. இங்கு நீர் மாசு அடைதல் ஒரு பெரிய சவாலாக காணப்படுகின்றது. நகரத்தில் ஆரோக்கியமான நிலையான வாழ்க்கை சூழலை ஏற்படுத்துவதற்கு இது விரைவில் தீர்க்கப்படுதல் வேண்டும்.

இகாஅகூ கொழும்பு மாநகரப் பகுதியில் உள்ள கால்வாய்களின் மீது நியாயாதிக்கத்தை கொண்டுள்ளது. இந்த கூட்டுத்தாபனம் அவற்றின் வழக்கமான பராமரிப்புக்கும், முதன்மையாக மழைநீரை வெளியேற்றுவதற்கும், நீர்மார்க்கங்களை பராமரிப்பதற்கும் பொறுப்புடையதாக உள்ளது. இகாஅகூ மாசு நீங்கிய நீர்மார்க்கங்களை பராமரிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. அவ்வாறிருந்தும் கொழும்பில் கால்வாய் வலையமைப்பு மாசடைந்துள்ளது. 2016 ஆம் ஆண்டு நடத்திய சதுப்புநில முகாமைத்துவ மூலோபாய (WMS) ஆய்வு கொழும்பு பெரும்பாகத்தின் (CMR) வடிகால் நீரேந்துபரப்பில் 65% வீதத்திற்கும் அதிகம் நீரின் தரம் மிகவும் மோசமானது முடிவு செய்துள்ளது.

ஆகையால் அதிகரித்து வருகின்ற மாசுகளையும் அதனால் ஏற்படும் பாதிப்புகளையும் குறைப்பதற்கு CMR இன் நிமித்தம் நீண்டகால நிலையான நீர் தர முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்த வேண்டிய அவசியம் கண்டறியப்பட்டது.

அதன்படி, CWQM நிகழ்ச்சித்திட்டம் அதாவது (1) பங்காளித்துவத்தை கட்டியெழுப்புதல், (2) பிரச்சினைகளை கண்டறிவதற்காக கொழும்பு நீரேந்துபரப்பை வகைப்படுத்துதல், (3) இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் பிரச்சினைகளை கண்டறிதல், (4) நடைமுறைப்படுத்தும் ஒரு நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடுதல், (5) நடைமுறைப்படுத்தும் ஒரு திட்டத்தை தயாரித்தல் (6) முன்னேற்றத்தை மீளாய்வு செய்து சீராக்கல்களை மேற்கொள்ளல் ஆகிய ஆறு கட்டங்களில் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது.

அதிகரித்து வருகின்ற சனத்தொகை மற்றும் நகரமயமாக்கல் ஆகியவற்றின் காரணமாக பாராளுமன்ற ஏரியின் நீரேந்துபரப்பு காலப்போக்கில் பல்வேறு சுற்றாடல், சமூக, பொருளாதார தாக்கங்களுக்கு உட்பட்டுள்ளது. எனினும், 2016 ஆம் ஆண்டில் சதுப்புநில முகாமைத்துவ மூலோபாயத்திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுளளவாறு, பாராளுமன்ற ஏரியின் நீரேந்துபரப்பு "நல்ல" தரமான நீரைக் கொண்டதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நீரேந்துபரப்பு பகுதியில் உள்ள நீர்மார்க்கங்கள் மாசுபடுவது இத்தகைய பிரச்சினைகளில் ஒரு பிரச்சினையாக காணப்படுகின்றது. இது அண்மை காலத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாவது வாரத்தில், பாராளுமன்ற ஏரியிலும் டென்சில் கொப்பேகடுவ மாவத்தை வீதி ஓரமாகவும் பத்தரமுல்ல பாதுகாப்பு அமைச்சு வீதி ஓரமாகவும் ஓடுகின்ற நீர்மார்க்கங்களிலும் மஞ்சள் நிறம் கலந்த பழுப்பு நிற கறையாக தோன்றும் பாசிகள் அவதானிக்கப்பட்டன. இதனையடுத்து, இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற வாளகம் ஓரமாக ஓடுகின்ற தியவன்னா ஓயாவுடன் இணைந்த நீர்மார்க்கங்களில் உருவாகும் மாசுகளை கட்டுப்படுத்துவதற்கும் அந்த நீர்மார்க்கங்களின் நீரின் தரத்தை மேம்படுத்துவதற்கும் சிறப்புசெயலணியினால் பாராளுமன்ற ஏரி நீரேந்துபரப்பு பகுதியில் நீரின் தரத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு முகாமைத்துவ திட்டம் தயாரிக்கப்பட்டது. இகாஅகூ ஒரு தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு நிறுவனமாகவும், பணிக்குழுவின் அங்கத்துவ தரப்பாகவும் இந்த முகாமைத்துவத் திட்டத்தை தயாரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. இந்த முகாமைத்துவ திட்டத்தில் ஏழு இலக்குகளும், நோக்கங்களும், பொறுப்புகளுடன் கூடிய செயற்பாடுகளும், காலவரையறையும், தேவையான வளங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த முகாமைத்துவ திட்டத்தின் இலக்குகள் பின்வருமாறு காணப்படும்:

இலக்கு 1: பாசிப் பூக்கள் அடிக்கடி உருவாகுவதையும் தீவிரத்தன்மையையும் குறைத்தல்
இலக்கு 2: ஏரியின் அழகியல் மதிப்பையும் பொழுதுபோக்கு ஆற்றலையும் மேம்படுத்துதல்
இலக்கு 3: ஒரு ஆரோக்கியமான பல்லினத்துவ நீர்வாழ் உயிரினங்களின் கட்டமைப்பை பேணுதல்
இலக்கு 4: கடற்கரையை பாதுகாத்து மீட்டெடுத்தல்
இலக்கு 5: முகாமைத்துவ திட்டங்களையும்

செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்த நிதியைப் பெற்று வளங்களை மேம்படுத்துதல்

இலக்கு 6: ஆராய்ச்சியாளர்களினதும், தனியார் துறையினதும், ஏனைய அக்கறையுடைய குழுக்களினதும் பங்குபற்றலையும் பங்களிப்பையும் ஊக்குவித்தல்

இலக்கு 7: பொருத்தமானவாறு முகாமைத்துவ குறிக்கோள்களையும் மூலோபாயங்களையும் இற்றைப்படுத்த முற்போக்கு கண்காணிப்பை மேற்கொள்ளல்

இந்த முகாமைத்துவ திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்டகால செயற்பாடுகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இந்த செயற்பாடுகள் இகாஅகூ உள்ளடங்கலாக அனைத்து அக்கறையுடைய தரப்புகளினாலும் மேற்கொள்ளப்படுகின்றன. இகாஅகூ 2023 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

மிதக்கும் சுத்திகரிப்பு ஈரநிலங்கள்: மிதக்கும் சுத்திகரிப்பு சதுப்புநிலம் (FTW) என்பது கழிவுநீர் சுத்திகரிப்புக்கு பயனுள்ள நிலையான ஒரு தொழில்நுட்பமாகும். விவசாய கழிவுகள், மழைநீர், தொழிற்சாலை கழிவுகள் அடங்கலாக பல்வேறு வகையில் மாசுபடும் நீரை சுத்திகரிக்க இது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்த FTW சதுப்புநில தாவரங்களையும் இணைந்த நுண்ணுயிரிகளையும் பயன்படுத்தி நீர்நிலைகளின் நீரின் தரத்தை சுத்திகரித்து மேம்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில், இலங்கை இராணுவத்தின் உதவியுடன் இகாஅகூ 500 எண்ணிக்கையான மிதக்கும் சிகிச்சை வசதிகள் சதுப்புநிலங்களை பாராளுமன்ற ஏரியின் துணை நீரேந்துபரப்பு 01 இல் இனங்காணப்பட்டுள்ள இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. ஏரியில் உள்ள உயிரியல் கட்டுப்பாட்டு முறைகளின் கீழ் FTW இல் பராமரிப்பு பணிகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன (இலக்கு: 01- பாசிப் பூக்கள் அடிக்கடி உருவாகுவதையும் தீவிரத்தன்மையையும் குறைத்தல்).

மறுசீரமைப்புக்காக பாராளுமன்ற ஏரி நீரேந்துபரப்பு பகுதியில் அரிப்புக்குள்ளாகிய கால்வாய் கரைகளை இனங்காணுதல்: மறுசீரமைப்பு தேவைப்படும் பகுதிகளின் நீளத்தை கண்டறிவதற்காகவும், நீரேந்துபரப்பு கால்வாய் கரைகளின் பாதுகாப்பின் நிமித்தம் தற்போதைய நிலையை வரைபடமாக்குவதற்கும் பாராளுமன்ற ஏரி நீரேந்துபரப்பு கால்வாய் கரைகள் பற்றிய கள ஆய்வு நடத்தப்பட்டது. முழு கரையோரமாக மண்ணரிப்பை கட்டுப்படுத்தும் முகமாக முறையியல், செலவு கால மதிப்பீடுகள் என்பன நிர்ணயிக்கப்பட்டன.

நீரின் தரத்தை கண்காணித்தல்: 2023 ஆம் ஆண்டில், இகாஅகூ தாபனத்தின் EMT ஆய்வுகூடம் துணை நீரேந்துபரப்பு 01 இல் தேர்ந்தெடுத்த எட்டு மாதிரிப் புள்ளிகளில் நீரின் தரம் மாதாந்தம் பரிசோதிக்கப்படுகின்றது. இந்தத் தரவுகள் சதுப்புநில பிரிவினால் பகுப்பாய்வு செய்யப்பட்டு விளக்கப்படுகின்றன.

ஆராய்ச்சியாளர்களினதும், தனியார் துறையினதும், ஏனைய அக்கறையுடைய குழுக்களினதும் பங்குபற்றலையும் பங்களிப்பையும் ஊக்குவித்தல் (இலக்கு 6)

சுத்திகரித்த கழிவுநீரை வெளியேற்றுவதற்கான செயலாக்க அங்கீகாரங்கள்: அடுக்குமாடி, உற்பத்தி தொழிற்சாலை, அலுவலகம், பாடசாலை அல்லது கலப்பு அபிவிருத்தி செயற்பாடுகள் என்பவற்றிலிருந்து வருகின்ற சுத்திகரித்த கழிவுநீரை கொழும்பு பெரும்பாகத்தில் உள்ள எந்தவொரு கால்வாய் வலையமைப்பிலும் (இகாஅகூ கால்வாய்கள்) வெளியேற்றுவதற்கான விண்ணப்ப செயல்முறையில் உதவுதல். 2023 ஆம் ஆண்டில் ஏற்கனவே 08 கோரிக்கைகள் கிடைத்தன. இவற்றில் 02 கோரிக்கைகளுக்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. போதிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாததால் 04 அனுமதிகள் வழங்கப்படாமல் நிறைவுபெறாத நிலையில் உள்ளன. ஏனைய 02 கோரிக்கைகள் எமது கட்டுப்பாட்டில் இல்லாத காரணத்தினால் நிராகரிக்கப்பட்டன.







உருப்படம் 01: பாராளுமன்ற ஏரி உப நீரேந்துபரப்பு மிதக்கும் சுத்திகரிப்பு சதுப்புநிலங்கள்






| Location | QR Code | Location | QR Code |
|---|---|---|---|
| Pinniyara Canal (P-1) | | | |
| P1 LHS 0m | | P1 RHS 0m | |
| P1 LHS 100m | | P1 RHS 100m | |
| P1 LHS 200m | | P1 RHS 200m | |

உருப்படம் 02: புனரமைப்பின் நிமித்தம் கால்வாய் கரைப்பகுதிகளை இனங்காணுவதற்கான கால்வாய் கரைப்பகுதி ஆய்வு

## விஷேட கருத் திட்டங்கள் பிரிவு

விஷேட கருத்திட்டங்கள் பிரிவு என்பது இகாஅகூ தாபனத்தின் முக்கிய தொழில்நுட்பப் பிரிவுகளில் ஒன்றாகும். நீரியல், ஹைட்ரோடினமிக் மொடலிங், விரிவான வடிகாலமைப்பு ஆய்வுககளை மேற்கொள்வதும், அரசு மற்றும் தனியார் துறை வாடிக்கையாளர்களுக்கு தலைமை வடிகாலமைப்பு திட்டங்களை தயாரிப்பதும், காணி அபிவிருத்திற்கு அனுமதி வழங்குவதும் மற்றும் கட்டுமான கருத்திட்டங்களை செயற்படுத்துவதும் விஷேட கருத்திட்டங்கள் பிரிவின் முக்கிய கருமபணிகளாகும்.

விஷேட கருத்திட்டங்கள் பிரிவு 2023 ஆம் ஆண்டில் மேற்குறித்த பல்வேறு பகுதிகளில் தனது செயற்பாடுகளை பின்வருமாறு செயற்படுத்தியுள்ளது:

- **காணி அபிவிருத்திற்கு அனுமதி வழங்குதல்**
- **வாடிக்கையாளர் கருத்திட்டங்கள் செயற்படுத்துகை**

I. குருனாகல் முதல் அனுராதபுரம் வரை உள்ள ஏரிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அழகுபடுத்தல்

II. காலநிலை நேர்த்தி ஒன்றிணைந்த விவசாய கருத்திட்டம் (CSIAP)

a. குருனாகல் மாவட்டம் - 1 ஒப்பந்தம் (7 குளங்கள்)

b. அனுராதபுர மாவட்டம் - 3 ஒப்பந்தங்கள் (5 குளங்கள்)

c. திருகோணமலை மாவட்டம் - 1 ஒப்பந்தம் (3 குளங்கள்)

**வடிவமைப்பு மற்றும் செயற்படுத்துகை**

III. அரச மருந்தாக்க கூட்டுத்தாபன (அமகூ) வளாகத்திலிருந்து பொல்கொட ஏரி வரையான மழைநீர் வடிகாலமைப்பு முறைமை

1. காணி அபிவிருத்திற்கு அனுமதி வழங்குதல் (திட்டமிடல் குழுவின் ஊடாக)

### 1. காணி அபிவிருத்திற்கு அனுமதி வழங்குதல் (திட்டமிடல் குழுவின் ஊடாக)

திட்டமிடப்படாத மற்றும் அங்கீகரிக்கப்படாத அபிவிருத்தி செயற்பாடுகளும் தாழ்நிலங்களை மண்ணிரப்பியெடுக்கும் செயற்பாடுகளும் உள்ளூர் ரீதியாக ஏற்படும் வெள்ளப்பெருக்குகளுக்கும் நாட்டில் திடீரென உருவாகும் வெள்ளப்பெருக்கு நிலைமைகளுக்கும் முக்கிய காரணங்களில் ஒரு காரணியாக காணப்படுகின்றன. ஆகையால், நகர்ப்புற வெள்ளத்தால் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு, திறமையான பயனுள்ள வடிகாலமைப்பு முறைமை அடங்கலாக தாழ்நிலங்களை அபிவிருத்தி செய்வது இன்றியமையாததாகும்.

விஷேட கருத்திட்டங்கள் பிரிவு, தாழ்நிலங்களின் அபிவிருத்திற்காக வாடிக்கையாளர்களின் கோரிக்கையின்படி, விரிவான நீரியல் மற்றும் ஹைட்ரோடினமிக் ஆய்வுகளை ஒவ்வொரு விடய அடிப்படையில் மேற்கொண்டு இந்தப் பணியை செய்து வருகின்றது. இந்த விரிவான வடிகாலமைப்பு முன்மொழிவுகள் இகாஅகூ சட்டத்தின் கீழ் தாபிக்கப்படும் கருத் திட்டக் குழுவுக்கு அதன் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்றன.

### 2. வாடிக்கையாளர் கருத்திட்டங்கள்

**i. குருனாகல் முதல் அனுராதபுரம் வரை உள்ள ஏரிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அழகுபடுத்துதல்**

ஆரம்பித்த திகதி: 22.05.2021

நிறைவுசெய்த திகதி: 28.02.2023

ஒப்பந்த பெறுமானம்: ரூ.140,341,481.99

கருத்திட்டத்தின் நோக்கெல்லையின் பின்வருவன அடங்குகின்றன.

- ஏரியின் கொள்ளளவை மேம்படுத்தி விவசாயத்திற்கு நீர்ப்பாசனம் செய்யக்கூடிய பகுதிகளை அதிகரித்தல்
- சுற்றுலா பயணிகளை அதிகளவில் ஈர்க்கும் பொருட்டு சுற்றுப்புற சூழலை இற்றைப்படுத்தி அழகுபடுத்துதல்
- பொது சுகாதாரத்தையும் வாழ்க்கை தரங்களையும் மேம்படுத்துதல்

பௌதீக முன்னேற்றம்: 100%

நிதி முன்னேற்றம்: 99%

1. இப்பாகமுவ களகஸ்வெவ குளம் (குருனாகல் மவட்டம்)



2. மெல்சிறிபுர கலமுள்ள குளம் (குருனாகல் மாவட்டம்)



3. கலேவல கலஹாகெல குளம் (மாத்தளை மாவட்டம்)



4. கலேவல புவக்பிட்டிய குளம் (மாத்தளை மாவட்டம்)



5. தம்புள்ள சலுவப்புள்ளன குளம் (மாத்தளை மாவட்டம்)



6. கெக்கிராவ மலவ குளம் (அனுராதபுர மாவட்டம்)



7. மரதன்கடவள உலன் குளம் (அனுராதபுர மாவட்டம்)



8. திரப்பன குளம் (அனுராதபுர மாவட்டம்)



**9. கல்குளம் வெவ (அனுராதபுர மாவட்டம்)**



### ii. காலநிலை நேர்த்தி ஒன்றிணைந்த விவசாய கருத்திட்டம் (CSIAP)

1. குருனாகல் மாவட்டத்தின் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவில் அம்பன்பொல கசேநி பகுதி மாம்பிட்டிகம வெவ, கொரகஹவெவ, ரட்டேதரனகஸ்வெவ, முத்துபண்டாகே வெவ மற்றும் நான்னேரிய கசேநி பகுதி ஹம்மில்லாவ வெவ, உட தோர வெவ மற்றும் பின் வெவ ஆகிய குளங்களின் புனரமைப்பு

ஆரம்பித்த திகதி: 27.03.2023

நிறைவுசெய்த திகதி: 26.03.2024

ஒப்பந்த பெறுமானம்: 57.403 மில்லியன் ரூபா

கருத்திட்டத்தின் நோக்கெல்லை:

- குளக்கட்டுகளின் மேம்பாடுகள்
- மதகுதகள், வாண்வழிகள், குளிப்பதற்கான படிக்கட்டுக்கள் மற்றும் பெருமதகுகள் என்பவற்றின் நிர்மாணம்
- குளப்படுக்கைகளிலுள்ள வண்டல் மண்ணை அகற்றுதல்

பௌதீக முன்னேற்றம்: 85%

நிதி முன்னேற்றம்: 37%

















2. **அனுராதபுர மாவட்டத்தின் நேபொடவெவ கிராம வலஸ்வெவ, உனுக்கேவ மஹாவெவ மற்றும் குடா உனுக்கேவ ஆகிய குளங்களின் புனரமைப்பு**

ஆரம்பித்த திகதி: 13.04.2023

நிறைவுசெய்த திகதி: 22.01.2024

ஒப்பந்த பெறுமானம்: 43.449 மில்லியன் ரூபா

கருத்திட்டத்தின் நோக்கெல்லை:

- குளக்கட்டுகளின் புனரமைப்பு
- மதகுதகள், மதகு கால்வாய்கள், குளிப்பதற்கான படிக்கட்டுக்கள் என்பவற்றின் நிர்மாணம்
- குளப்படுக்கைப் பகுதியிலுள்ள வண்டல்மண்ணையும் களைகளையும் அகற்றுதல்
- மரங்களை நடுதல்

பௌதீக முன்னேற்றம்: 98%

நிதி முன்னேற்றம்: 18%





3. **அனுராதபுர மாவட்டத்தின் புளியன்கடவள கிராமிய ஹொரணக்காரயாயகம குள புனரமைப்பு**

ஆரம்பித்த திகதி: 13.04.2023

நிறைவுசெய்த திகதி: 11.01.2024

ஒப்பந்த பெறுமானம்: 30.908 மில்லியன் ரூபா

கருத்திட்டத்தின் நோக்கெல்லை:

- குளக்கட்டுகளின் புனரமைப்பு
- மதகுதகள், மதகு கால்வாய்கள், குளிப்பதற்கான படிக்கட்டுக்கள் என்பவற்றின் நிர்மாணம்
- குளப்படுக்கைப் பகுதியிலுள்ள வண்டல்மண்ணையும் களைகளையும் அகற்றுதல்
- கால்வாய்களினதும் விவசாய வீதிகளினதும் மேம்பாடுகள்
- மரங்களை நடுதல்

பௌதீக முன்னேற்றம்: 99%

நிதி முன்னேற்றம்: 31%













**4. அனுராதபுர மாவட்டத்தின் தெமட்டவெவ வஸ்ஸல்லகம குள புனரமைப்பு**

ஆரம்பித்த திகதி: 13.04.2023

நிறைவுசெய்த திகதி: 15.10.2023

ஒப்பந்த பெறுமானம்: 21.495 மில்லியன் ரூபா

கருத்திட்டத்தின் நோக்கெல்லை:

- குளக்கட்டுகளின் புனரமைப்பு
- மதகுதகள், வாண்வழிகள், குளிப்பதற்கான படிக்கட்டுக்கள் மற்றும் விவசாய வீதிகள் என்பவற்றின் நிர்மாணம்
- குளப்படுக்கைப் பகுதியிலுள்ள வண்டில்மண்ணையும் களைகளையும் அகற்றுதல்
- வாண்வழி கால்வாயை வெட்டி துப்புரவுசெய்தல்

பௌதீக முன்னேற்றம்: 100%

நிதி முன்னேற்றம்: 45%









**5. கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்ட கயான் வெவ, கரங்கஹ வெவ மற்றும் பெல்லிகடவள வெவ ஆகிய குளங்களின் புனரமைப்பு**

ஆரம்பித்த திகதி: 17.05.2023

நிறைவுசெய்த திகதி: 07.05.2024

ஒப்பந்த பெறுமானம்: 93.908 மில்லியன் ரூபா

கருத்திட்டத்தின் நோக்கெல்லை:

- குளக்கட்டு புனரமைப்பு
- வாண்வழி புனரமைப்பு
- மதகு கதவு மேம்பாடுகள்
- மதகுகள், கால்வாய்கள், விவசாய வீதிகள், கொங்கிறீட்டு வடிகாலமைப்புகள் என்பவற்றின் நிர்மாணம்

பௌதீக முன்னேற்றம்: 83%

நிதி முன்னேற்றம்: 29%















**iii. அரச மருந்தாக்க கூட்டுத்தாபன (அமகூ) வளாகத்திலிருந்து பொல்கொட ஏரி வரையான மழைநீர் வடிகாலமைப்பு முறைமை**

ஆரம்பித்த திகதி: 07.03.2023

நிறைவுசெய்த திகதி: 06.05.2023

ஒப்பந்த பெறுமானம்: 1,803,326.80 மில்லியன் ரூபா

கருத்திட்டத்தின் நோக்கெல்லை:

- கொங்கிறீட்டு கால்வாய்கள் - மேற்பரப்பை சுத்தம் செய்தல், வண்டல்மண்ணை அகற்றுதல் மற்றும் இடிபாடுகளை நிரந்தரமாக அகற்றுதல்
- மண் அணைக்கட்டுடைய கால்வாய் - கால்வாய் கரையையும் மேற்பரப்பையும் சுத்தல் செய்தல், இடிபாடுகளை நிரந்தரமாக அகற்றுதல்

பௌதீக முன்னேற்றம்: 100%

நிதி முன்னேற்றம்: 95%





## நிர்மாண பிரிவு

**2023 ஆம் ஆண்டில் நிர்மாண பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள கருத்திட்டங்கள்**

**இலங்கை துறைமுக அதிகார சபை**

1. திருகோணமலை துறைமுக பொறியியல் வேலைப்பட்டறை கட்டிடத்தின் நிர்மாணம்

**கமத்தொழில் அமைச்சின் கீழ் இருந்த கருத்திட்டங்கள் (உலக வங்கி நிதியளித்த)**

2. தம்பாராவ வெவ குள புனரமைப்பு

3. ரொட்டவெல வெவ குள புனரமைப்பு

4. பாபாவ வெவ குள புனரமைப்பு

**திறைசேரி நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள்**

5. கொலன்னாவ மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம் (KSW-EIP)
   1. போபத்த பெட்டி வடிவ மதகு நிர்மாணம்
   II. மஜிதியவத்த பெட்டி வடிவ மதகு நிர்மாணம்
   III.சதஹம் மாவத்த பெட்டி வடிவ மதகு நிர்மாணம்
   IV.துப்பாவெல ஏரியின் உருவாக்கம்

6. ரத்கம - நகர அபிவிருத்தி மற்றும் வடிகாலமைப்பு மேம்பாட்டு கருத்திட்டம்

7. பேலியகொட நகர அபிவிருத்திற்கும் துணை வீதி அபிவிருத்திற்கும் உரிய வடிகாலமைப்பு மேம்பாட்டு கருத்திட்டம்

8. கடவத்த "சுவத்த உயன" பராமரிப்பு பணி

**சொந்த நிதியிடப்பட்டுள்ள கருத்திட்டங்கள்**

9. கிரிமண்டல மாவத்த உத்தேச கிரிக்கெட்டு விளையாட்டரங்கு

10. நுவரெலிய சுற்றுலா பங்களா புனரமைப்பு பணிகள்

11. அத்திடிய EMT ஆய்வுகூட புனரமைப்பு பணி

**<u>இலங்கை துறைமுக அதிகார சபை</u>**

**1. திருகோணமலை துறைமுக பொறியியல் வேலைப்பட்டறை கட்டிடத்தின் நிர்மாணம்**

இந்த கருத்திட்டம் இலங்கை துறைமுக அதிகாரசபையால் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்டுள்ள பெறுமானம் வற் வரி நீங்கலாக 252 மில்லியன் ரூபாவாகும்.

ஏனைய தேவையான வசதிகளுடனும் சேவைகளுடனும் மின்சார நிறுவுகை, குழாய் பொருத்துதல் மற்றும் வடிகாலமைப்பு முறைமை அடங்கலாக நிலம் தயார்படுத்தல், மண் வேலை, கொத்தன் வேலை, அலுமினியம் வேலை, நீர்புகாமல் பாதுகாக்கும் வேலை, தளவோடு இடுதல், நிறம்பூசும் வேலை, உருக்காலான தூண்களையுடைய பலமான கொங்கிறீட்டு கட்டிடத்துடன் இணைந்திருக்கும் உருக்காலான வேலைப்பட்டறை (கொட்டகை), உருக்காலான ட்ரஷர்கள், கூரை, சுவர் மூடுபடலங்கள், சுருளும் கதவுகள் பொருத்துதல் முதலிய பணிகள் அடங்கிய மூன்று மாடி பலமான கட்டிடத்தின் (1800 சதுர மீற்றர்) நிர்மாணம் இந்த கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

இந்த கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதி நிறைவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் திரண்ட பெறுமானம் 98 மில்லியன் ரூபாவாகும். இதன் பௌதீக முன்னேற்றம் 55% வீதமாகும்.









**<u>காலநிலை நேர்த்தி ஒன்றிணைந்த விவசாய கருத்திட்டங்கள் (CSIAP)</u>**

**<u>உலக வங்கி நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள்</u>**

### 2. பாபாவ வெவ குள புனரமைப்பு

மேற்குறித்த கருத்திட்டம் உலக வங்கி நிதியிட்டுள்ள கமத்தொழில் அமைச்சின் காலநிலை நேர்த்தி ஒன்றிணைந்த விவசாய கருத்திட்டத்தினால் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள பெறுமானம் வற் வரி நீங்கலாக 67 மில்லியன் ரூபாவாகும். இந்த கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

வாண்வழிகளினதும் குளக்கட்டுக்களினதும் புனரமைப்பும், மதகுகளினதும், கொங்கிறீட்டு கால்வாய்களினதும், வடிகாலமைப்பு மதகுகளினதும், நீர்மார்க்கங்களனிதும், உழவியந்திர கடவைகளினதும், அடைவெளிப்பகுதிகளினதும், வடிகாலமைப்பு கால்வாய்களினதும் நிர்மாணமும் இந்த கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் திரண்ட பெறுமானம் 14.51 மில்லியன் ரூபாவாகும். இதன் பௌதீக முன்னேற்றம் 18% வீதமாகும்.

### 3. தம்பராவ வெவ குள புனரமைப்பு

மேற்குறித்த கருத்திட்டம் உலக வங்கி நிதியிட்டுள்ள கமத்தொழில் அமைச்சின் காலநிலை நேர்த்தி ஒன்றிணைந்த விவசாய கருத்திட்டத்தினால் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள பெறுமானம் வற் வரி நீங்கலாக 87 மில்லியன் ரூபாவாகும். இந்த கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

குளக்கட்டுக்களின் புனரமைப்பும், கால்வாய்களினதும் வாண்வழிகளினதும் நிர்மாணமும் இந்த கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் திரண்ட பெறுமானம் 11.51 மில்லியன் ரூபாவாகும். இதன் பௌதீக முன்னேற்றம் 16% வீதமாகும்.









### 4. ரொட்டவெல வெவ குள புனரமைப்பு

மேற்குறித்த கருத்திட்டம் உலக வங்கி நிதியிட்டுள்ள கமத்தொழில் அமைச்சின் காலநிலை நேர்த்தி ஒன்றிணைந்த விவசாய கருத்திட்டத்தினால் வழங்கப்பட்டது. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள பெறுமானம் வற் வரி நீங்கலாக 68 மில்லியன் ரூபாவாகும். இந்த கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

குளக்கட்டுக்களின் புனரமைப்பும் நீர்மார்க்கங்களினதும், வாண்வழி கால்வாய்களினதும், கால்வாய் அணைக்கட்டுக்களினதும், கொங்கிறீட்டு கால்வாய்களினதும், மேல்-கடவைகளினதும் மற்றும் மதகுகளினதும் நிர்மாணமும் இந்த கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் திரண்ட பெறுமானம் 18 மில்லியன் ரூபாவாகும். இதன் பௌதீக முன்னேற்றம் 17% வீதமாகும்.

<u>**திறைசேரியின் மாணிய கருத்திட்டங்கள்**</u>

1. <u>**கொலன்னாவ மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம் (KSW-EIP)**</u>

### 5.1. போபத்த பெட்டி வடிவ மதகு நிர்மாணம்

மேற்குறித்த கருத்திட்டம் கொலன்னாவ மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. கொங்கிறீட்டு பெட்டி வடிவ மதகு நிர்மாணமும், பழுதடைந்த கொங்கிறீட்டு வீதியை மீளப்படுத்தலும், வீதியோர கொங்கிறீட்டு வடிகாலமைப்பு நிர்மாணமும் இந்த கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

இந்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள பெறுமானம் வற் வரி நீங்கலாக 12 மில்லியன் ரூபாவாகும். இந்த கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தை 2023 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் இறுதியளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் திரண்ட பெறுமானம் 11 மில்லியன் ரூபாவாகும். இதன் பௌதீக முன்னேற்றம் 100% வீதமாகும்.









### 1.2. மஜித்தியவத்த பெட்டி வடி மதகு நிர்மாணம்

மேற்குறித்த கருத்திட்டம் கொலன்னாவ மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. கொங்கிறீட்டு பெட்டி வடிவ மதகு நிர்மாணமும், பழுதடைந்த கொங்கிறீட்டு வீதியை மீளப்பலப்படுத்தலும், உருக்காலான தகட்டு தூண் சுவர் நிர்மாணமும் மற்றும் கொங்கிறீட்டு வடிகாலமைப்புகளின் நிர்மாணமும் இந்த கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

இந்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள பெறுமானம் வற் வரி நீங்கலாக 69 மில்லியன் ரூபாவாகும். இந்த கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தை 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இறுதியளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் திரண்ட பெறுமானம் 62 மில்லியன் ரூபாவாகும். இதன் பௌதீக முன்னேற்றம் 100% வீதமாகும்.

### 1.3. வென்னவத்த பெட்டி வடிவ மதகு நிர்மாணம்

மேற்குறித்த கருத்திட்டம் கொலன்னாவ மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது. இரண்டு குடா பெட்டி வடிவ மதகு (அளவு 5மீ x 2.7மீ x 2.65மீ) இந்த கருத்திட்டத்தில் அடங்குகின்றது.

இந்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள பெறுமானம் வற் வரி நீங்கலாக 23 மில்லியன் ரூபாவாகும். இந்த கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 08 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டு மாதம் மாதம் இறுதியளவில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் திரண்ட பெறுமானம் 28 மில்லியன் ரூபாவாகும். இதன் பௌதீக முன்னேற்றம் 98% வீதமாகும்.









### 6. ரத்கம நகர அபிவிருத்தி மற்றும் வடிகாலமைப்பு மேம்பாட்டு கருத்திட்டம்

காணி சீராக்கல் வேலைகளும் (14.7 ஏக்கர்கள்), உள்நிரல் ஏரியினதும் (23.7 மில்லியன் ரூபா) வடிகாலமைப்புகளினதும், மதகுகளினதும் (12) நிர்மாணமும் மற்றும் நடைபாதையின் நிர்மாணமும் இந்த கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

மேற்குறித்த கருத்திட்டம் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நிர்மாண பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான வடிவமைப்பு திறைசேரியின் நிதியில் விஷேட கருத்திட்டங்கள் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த கருத்திட்டத்தின் I ஆம் கட்டத்திற்கு மதிப்பிடப்பட்டுள்ள மொத்த மதிப்பீடு வற் வரி நீங்கலாக 409 மில்லியன் ரூபாவாகும். இந்த கருத்திட்டம் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கான நிர்மாண பணிகள் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இறுதியில் பகுதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் பெறுமானம் 223 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட பணிகளின் பெறுமானம் 349 மில்லியன் ரூபாவாகும்.

### 7. பிலியந்தல நகர அபிவிருத்தி மற்றும் துணை வீதி அபிவிருத்திற்கு உரிய வடிகாலமைப்பு மேம்பாட்டு கருத்திட்டம்

கொங்கிறீட்டு வடிகாலமைப்பினதும் (நீளம் - 25.2மீ) மற்றும் கூழாங்கற்களாலான தடுப்பு சுவரினதும் (நீளம் - 11.50மீ) நிர்மாணம் இந்த கருத்திட்டத்தில் அடங்குகின்றது.

இந்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள மொத்த செலவு வற் வரி நீங்கலாக 25 மில்லியன் ரூபாவாகும். இந்த கருத்திட்டம் 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தை 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் திரண்ட பெறுமானம் 14 மில்லியன் ரூபாவாகும். இதன் பௌதீக முன்னேற்றம் 60% வீதமாகும்.





### 8. கடவத்த "சுவத்த உயன" பராமரிப்பு பணி

கால்வாய் மேற்பரப்பு துப்புரவாக்கலும், கால்வாய்கரைகளை துப்புரவாக்கலும், கால்வாய்களை சோதனையிடுதலும், டேர்பிஃங் வெட்டுதலும், பாதைகளினதும் உற்பயிற்சி பகுதியினதும் பராமரித்தலும் இந்த கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

2023 ஆம் ஆண்டிற்கு மேற்குறித்த கருத்திட்டத்தின் நிமித்தம் திறைசேரியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள மொத்த நிதி வற் வரி நீங்கலாக 10 மில்லியன் ரூபாவாகும். குறித்த ஆண்டு முழுதிலும் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் பெறுமானம் 10.58 மில்லியன் ரூபாவாகும்.





**<u>சொந்த நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள்</u>**

### 9. கிரிமண்டல மாவத்த உத்தேச கிரிக்கெட்டு விளையாட்டரங்கு

மினுக்கல் வேலை, மின்சார நிறுவுகை, குழாய் பொருத்துதல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதியை நிறுவுதல் அடங்கலாக இரண்டு மாடி கட்டிடத்தின் நிர்மாணம் மேற்குறித்த கருத்திட்டத்தில் அடங்குகின்றது.

குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள சிவில் வேலையின் செலவு வற் வரி நீங்கலாக 88 மில்லியன் ரூபாவாகும்.

இந்த கருத்திட்டம் 2022 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த கருத்திட்டத்தை 2023 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ஆம் திகதி நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் பெறுமானம் 57 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட பணிகளின் பெறுமானம் 80 மில்லியன் ரூபாவாகும்.





**10. நுவரெலிய சுற்றுலா பங்களா புனரமைப்பு பணிகள்**

சுற்றுலா பங்களாவின் புனரமைப்பு பணியும், சாரதிகளுக்கான விடுதியின் நிர்மாண பணியும் மற்றும் நுழைவாயில் அடங்கலாக தோட்ட மற்றும் வெளிக்கள பணிகளும் மேற்குறித்த கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள செலவு வற் வரி நீங்கலாக 30 மில்லியன் ரூபாவாகும்.

குறித்த புனரமைப்பு பணி 2022 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த புனரமைப்பு பணி 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் பெறுமானம் 37 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட பணிகளின் பெறுமானம் 38 மில்லியன் ரூபாவாகும்.







**11. அத்திடிய EMT ஆய்வுகூட புனரமைப்பு பணி**

எல்லை சுவர் அடங்கலாக EMT ஆய்வுகூடகத்தின் புனரமைப்பு பணியும் வெளிக்கள பணியும் மேற்குறித்த கருத்திட்டத்தில் அடங்குகின்றன.

குறித்த கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்டுள்ள செலவு வற் வரி நீங்கலாக 17 மில்லியன் ரூபாவாகும்.

குறித்த புனரமைப்பு பணி 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த புனரமைப்பு பணி 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் இறுதியளவில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளின் பெறுமானம் 13 மில்லியன் ரூபாவாகும். மேற்கொள்ளப்பட்டுள்ள திரண்ட பணிகளின் பெறுமானம் 13 மில்லியன் ரூபாவாகும்.

2021 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த பணியின் பெறுமானம் 20 மில்லியன் ரூபாவாகும்.









**ஒலியமுல்ல மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம் பற்றிய சுருக்கமான விபரம்**

வத்தளை மற்றும் களனி ஆகிய பிரதேசங்களில் பருவ மழை காலத்தில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. வத்தளை மற்றும் களனி ஆகிய பிரதேச செயலகங்கள் இந்தப் பகுதிகளில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு பாரியவான இழப்பீடுகளை வழங்க வேண்டியுள்ளன. ஆகையால் வத்தளை மற்றும் களனி ஆகிய பிரதேசங்களில் ஏற்படும் வெள்ளத்தைத் தணிப்பதற்கு இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் ஒலியமுல்ல மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. எதிர்கால உட்கட்டமைப்பு வசதிகளுக்காக அபிவிருத்தி செய்த காணிகளை வழங்குவதும் களனி மற்றும் வத்தளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதும் இந்த கருத்திட்டத்தின் ஏனைய நோக்கங்களாகும். உத்தேச ஒலியமுல்ல கருத்திட்டத்தின் நீரேந்துபரப்பு சுமார் 17 கிமீ$^2$ (1700 ஹெக்டேர்) ஆகும்.

பிரதானமாக 15மீ3/செக்கன் மற்றும் 20 மீ3/செக்கன் கொள்ளளவான 02 நீரிறைத்தனுப்பும் நிலையங்களை நிர்மாணித்தல், பேலியகொட-புத்தளம் பிரதான வீதியிலுள்ள பாலத்தை புனரமைத்தல், அணைக்கட்டுகளை அமைத்தல், ஏரிகளை அகழ்ந்து துப்புரவாக்குதல், கால்வாய்களை புனரமைத்தல் மற்றும் இந்த கருத்திட்டப் பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ள குடும்பங்களை மீள்குடியேற்றுதல் மற்றும் பொழுதுபோக்கு வசதிகளை செய்துகொடுத்தல் என்பன இந்த உத்தேச கருத்திட்டத்தில் அடங்குகின்றன. 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை, கருத்திட்டத்திற்கு நிதி ரீதியில் 2,348.16 மில்லியன் ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளது. நீரிறைத்தனுப்பும் நிலையத்தின் II ஆம் கட்ட நிர்மாணத்திலிருந்து கருத்திட்டம் 97% முன்னேற்றத்தை அடைந்துள்ளது.



உருப்படம் 1: 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நீரிறைத்தனுப்பும் நிலையத்தின் நிர்மாண பணிகள் - கட்டம் II




உருப்படம் 2: 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நீரிறைத்தனுப்பும் நிலையத்தின் நிர்மாண பணிகள் - கட்டம் II



உருப்படம் 3: நிறுவப்பட்டுள்ள அலுமினியம் லோவர்களும் சுருளும் கதவுகளும்



உருப்படம் 4: நிறுவப்பட்டுள்ள EOT தூக்குசாதனம்




உருப்படம் 5: நிர்மாணிக்கப்பட்டுள்ள பெட்டி வடிவ மதகு



உருப்படம் 6: 2023 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் அமைக்கப்பட்டுள்ள வலது கரை நிர்மாணம்




உருப்படம் 7: 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் அமைக்கப்பட்டுள்ள வலது கரை நிர்மாணம்




உருப்படம் 8: 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அமைக்கப்பட்டுள்ள இடது கரை நிர்மாணம்



உருப்படம் 9: 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் அமைக்கப்பட்டுள்ள இடது கரை நிர்மாணம்

# காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு

**காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு**

காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு இந்தக் கூட்டுத்தாபனத்தின் முக்கிய செயற்பாட்டுக் கரங்களில் ஒன்றாகும். இது பின்வரும் செயற்பாடுகளின் மூலம் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அடைய உதவுகின்றது.

- அபிவிருத்தி நோக்கங்களுக்கு பொருத்தமான காணிகளை சுவீகரித்தல்
- நீரை தேக்கிவைக்கும் நோக்கத்திற்காக நிலங்களை சுவீகரித்தல்
- கொழும்பு பெரும்பாக வெள்ளக் கட்டுப்பாட்டு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டத்திற்கு (GCFC-EIP) சுவீகரிக்கப்பட்டுள்ள நீரை தேக்கிவைப்பதற்கான நிலங்களை அத்தகைய நிலங்களின் பாதுகாவலர் என்ற வகையில் முகாமை செய்தல்
- காணி கையுதிர்த்தல் தொடர்பான வழிகாட்டல்களின் பிரகாரம் காணிகளை வழங்குதல்
- 2006 இன் 35 ஆம் இலக்க திருத்தல் சட்டத்தின் பிரகாரம் சதுப்புநிலங்களை பிரகடனப்படுத்துதல்
- அத்தகைய அபிவிருத்திகளினால் பாதிக்கப்பட்டுள்ள சட்டமுறையற்ற குடியிருப்பாளர்களுக்கு காணி உறுதிகளை வழங்கி அவர்களை மீளக்குடியேற்றுதல்
- நெற் பயிர்ச்செய்கைக்கும் குறுங்காலப் பயிர்ச்செய்கைக்கும் சாத்தியமான நிலங்களை ஒதுக்குதல்

கொலன்னாவ மற்றும் ஒலியமுல்ல ஆகிய பிரதேசங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்குகளை தடுத்து உதவுவதற்கும் அந்தந்த பிரதேசங்களில் வாடிகாலமைப்புகளை மேம்படுத்துவதற்கும் அந்த பிரதேசங்களிலுள்ள காணிகளை சுவீகரிக்க இந்த கூட்டுத்தாபனம் ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

பாணந்துறையில் உள்ள நிலங்களை சுவீகரிப்பது தொடர்பான நடவடிக்கைகள் அப்பகுதியில் வெள்ளத்தைத் தணிக்கும் நோக்கத்துடன் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், ரத்கம நகர அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் ரத்கமவில் சுமார் 22 ஏக்கர் நிலப்பரப்பை சுவீகரிக்கும் பணியையும் கூட்டுத்தாபனம் ஆரம்பித்துள்ளது.

மேற்கூறியவை தவிர, வெரஸ் கங்கை மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டத்தின் (WGSWD-EIP) கீழ் நிலங்களை சுவீகரிக்கும் செயல்முறையை துரிதப்படுத்தி நிறைவு செய்யும் பொறுப்புப்பணியும் காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வது தொடர்பான அரசாங்கத்தின் தூரநோக்குக்கு இணங்க, சாத்தியமான அனைத்து நிலங்களையும் பயிர்ச்செய்கையின் நிமித்தம் பயன்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் முயற்சிகளை எடுத்துள்ளது. அதன்படி, கொழும்பு பெரும்பாக வெள்ளக் கட்டுப்பாட்டு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம் (GCFC-EIP) வெரஸ் கங்கை மழைநீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் மேம்பாட்டு கருத்திட்டம் (WGSWD - EIP) ஆகிய கருத்திட்டங்களின் கீழ் சுவீகரிக்கப்பட்டுள்ள நிலங்கள் நெற் பயிர்ச்செய்கைக்கும் மற்றும் குறுங்கால பயிர்ச்செய்கைக்கும் என ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு தனியார் தரப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

முத்துராஜவெல இலங்கையின் வர்த்தக நிலையம் மற்றும் நிருவாக தலைநகரம் ஆகிய இரண்டிற்கும் அருகாமையில் அமைந்திருப்பதை கருத்தில் கொண்டு மேற்கு பிராந்தியத்தில் உள்ள வசதிகள் வலயத்தின் ஒரு பகுதியாக முத்துராஜவெல இனங்காணப்பட்டுள்ளது. மேலும் முத்துராஜவெல பிரதேசத்தின் அபிவிருத்தியையடுத்து கொழும்பின் பிரதான வர்த்தக நிலையத்திற்கு அருகாமையில் அது அமைந்துள்ளதை கருத்தில் கொண்டும் மேற்கு பிராந்தியத்தில் வசதிகள் வலயத்தின் ஒரு பகுதியாக இனங்காணப்பட்டுள்ளது. கெரவலப்பிட்டிய வெளிச்சுற்று நெடுஞ்சாலைகள் கருத்திட்டத்தின் அபிவிருத்தியையடுத்து வசதிகள் தொடர்பான கருத்திட்டங்களின் நிமித்தம் முத்துராஜவெல பிரதேசத்தில் காணிகளுக்கான தேவை வெகுவாக அதிகரித்துள்ளது. அதன்படி, முத்துராஜவெல பகுதியில் பல வசதிகள் மேம்பாட்டு கருத்திட்டங்களை கூட்டுத்தாபனம் ஆரம்பித்துள்ளது.

அதன்படி 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முத்துராஜவெலயில் 22 ஏக்கர் காணிகள் இலங்கை மின்சார சபைக்கும் சிஏ க்ரஷிங் (தனியார்) நிறுவனத்திற்கும் ஒதுக்கிக்கொடுக்கப்பட்டுள்ளன.

முத்துராஜவெல கைத்தொழில் வலயத்திலுள்ள பெரும்பாலான காணிகள் கடந்த சில ஆண்டுகளாக அரச நிறுவனங்களுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்டங்களுக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. பெற்றோலிய தொட்டிப் பண்ணை, லிட்ரோ எரிவாயு முனையம் மற்றும் இமிச மின் உற்பத்தி நிலையம் முதலியன இந்த வலயத்தினுள் அமைந்துள்ள சில முக்கியமான கருத்திட்டங்களாகும்.

காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு நீண்டகால குத்தகை, குறுங்கால குத்தகை, நேரடி விற்பனை மற்றும் தனிநபர் வீட்டுவசதி விற்பனை என்பவற்றின் மூலம் நிலங்களை பெற்றுக்கொடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இதன்படி 2023 ஆம் ஆண்டு காலப்பகுதிளில் இந்த பிரிவு விற்பனையின்/குத்தகையின் மூலம் சுமார் 1.6 பில்லியன் ரூபா காசுப்பாய்ச்சலை ஈட்டியுள்ளது.




அண்மை காலத்தில் புதிய அபிவிருத்தி பரிமாணங்களையடுத்தும் கூட்டுத்தாபனத்தின் நோக்கெல்லை அபிவிருத்தியையும் சுற்றாடலை பாதுகாப்பதையும் அதிகளவில் முன்னிலைப்படுத்தி மாற்றமடைந்துள்ளது. வெள்ளத்தை கட்டுப்படுத்துதல், சதுப்புநிலங்களை பாதுகாத்தல், கால்வாய்கரைகளை அழகுபடுத்துதல், சட்டவிரோதமான நிர்மாணங்களை அகற்றி கால்வாய்கரை ஓரமாக நடைபாதைகளை அமைத்தல் என்பவற்றுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

மேற்குறித்த பணிகளுக்கு உதவும் பொருட்டு காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு கட்டம் கட்டமாக நாட்டில் சதுப்புநிலங்களை பிரகடனப்படுத்தும் பணியில் ஈடுபடுகின்றது. ஏனைய உரிய பிரிவுகளுடனான கலந்தாலோசனையில் கால்வாய் ஒதுக்க பிரிவுகளும் வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

குறித்த பிரகடனப்படுத்தல் பணிகளின் கீழ் மேல் மாகாணமும், தென் மாகாணமும், ஊவா மாகாணமும், சமபரகமுவ மாகாணமும், வடமத்திய மாகாணமும் வடமேல் மாகாணமும் ஏற்கனவே வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணமும் வட மாகாணமும் பிரகடனப்படுத்தப்பட்டு வருகின்றன.

மேல் மாகாணத்தில் கால்வாய்களை ஒதுக்கி பிரகனப்படுத்தும் பணி ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென் மாகாணம், ஊவா மாகாணம், மத்திய மாகாணம், சபரகமுவ மாகாணம், வட மத்திய மாகாணம், வடமேல் மா◌ாகணம், கிழக்கு மாகாணம், வட மாகாணம் ஆகிய மாகாணங்களில் கால்வாய்களை ஒதுக்கி பிரகடனப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

GCFC - EI கருத் திட்டத்திற்காக சுவீகரித்த சதுப்புநிலங்களையும் நீரை தேக்கி வைக்கும் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனம் பராமரித்து வருகின்றது. தற்போது இந்த நிலங்கள் கூட்டுத் தாபனத்தின் சட்டப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு, விஷேட சட்டஅமுலாக்கல் அலகு என்பவற்றின் உதவியுடன் காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவினால் நிருவகிக்கப்படுகின்றன.

இந்த கூட்டுத்தாபனம் சுவீகரித்த சதுப்புநிலங்களில் அத்துமீறி ஆக்கிரமிப்பவர்களை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு காணிகள் மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவு ஏற்பாடு செய்துள்ளது. முத்துராஜவெல, வெதமுல்லை, பொக்குண வீதி, தெஹிவளை ஆகிய பிரதேசங்களில் இவ்வாறான கருத்திட்டங்கள் அமைந்துள்ளன. அத்தகைய குடும்பங்களுக்கு மாற்று காணி உறுதிப் பத்திரங்களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டிற்கு விற்பனையிலிலுருந்தும் குத்தகையிலிருந்து மதிப்பிடப்பட்டுள்ள வருமானம் 3,135 மில்லியன் ரூபாவாக இருக்கும்.

## திட்டமிடல் மற்றும் வணிக அபிவிருத்தி பிரிவு

### 1. உள்நாட்டு நிர்மாண கைத்தொழிலுக்கு கடல் மணலை அகழ்ந்து விற்பனை செய்தல்

கெரவலப்பிட்டியில் இருந்து அகழ்ந்தெடுக்கப்படும் கடல் மணல் கெரவலப்பிட்டியவில் அமைந்துள்ள சலவை சல்லடை பொறித்தொகுதியில் கழுவப்பட்டு சல்லடை செய்யப்படுகின்றது. இந்த கடல் மணல் "சன்ஸ்தா மணல்" என்ற வர்த்தகப் பெயரில் விற்பனை செய்யப்படுகின்றது. இது இலங்கை நியமங்கள் கட்டளைகள் நிறுவகம் (இநிகநி) கான்கிரீட்டு மற்றும் மோட்டார் (இநிக 1397:2010) ஆகியவற்றிற்கான நுண்ணிய திரட்சிகளுக்காக குறிப்பீடு செய்துள்ள நியமங்களை அனுசரித்து காணப்படுகின்றது. மேலும் "சன்ஸ்தா மணலுக்கு" சூழலுக்கு உகந்த தயாரிப்பு என்பதால் இநிகநி நிறுவகத்திலிருந்து இநிக சான்றிதழும், இலங்கையின் பசுமைக் கட்டிட மன்றத்திலிருந்து "கிரீன் லேபிள் சான்றிதழும்" கிடைத்துள்ளன.

கடந்த சில ஆண்டுகளாக மணலின் விலை மற்றும் கட்டுமானப் பணிகளுக்கு அந்த மணல் ஏற்றது என பொது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஆகியவற்றின் காரணமாக கடல் மணலின் தேவை வெகுவாக அதிகரித்துள்ளது. எனினும் 2022-2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமையினால் நிர்மாண கைத்தொழில் வீழ்ச்சியடைந்தது.

பின்வரும் வரைபடம் 2023 ஆம் ஆண்டிலிருந்து கடல் மணல் விற்பனையினால் கிடைத்த வருடாந்த அளவை காட்டுகின்றது.

2013-2023 ஆம் ஆண்டு வரை விற்பனை செய்த கடல் மணலின் அளவு




பின்வரும் வரைபடங்கள் கடந்த ஐந்து ஆண்டுகளின் விற்பனை போக்குகளை சுட்டிக் காட்டுகின்றன.

வரைபடம் 01 - மாதாந்த கடல் மணல் விற்பனை




வரைபடம் 02 - மாதாந்த கடல் மணல் விற்பனை அளவுகள்




கடல் மணல் விற்பனையின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு அதிக வருமானம் கிடைக்கின்றது. 2023 ஆம் ஆண்டில், கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது 2,496.89 கன அளவான மணல் விற்பனையை கூட்டுத்தாபனத்தினால் அடைய முடிந்தது. வருமானத்தின் அடிப்படையில் பார்க்கும் போது இது 902,142,496.26 ரூபாவாகும்.

**மொத்த வருமானம் (2023): 902.14 மில்லியன் ரூபா**

**மாதாந்தம் விற்பனை செய்த கடல் மணல் அளவுகள்**




- **வருமானம் ஈட்டும் செயற்பாடுகள்**

**1. தியத்த உயன**

தியவன்னா ஓயாவின் கரையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தியத உயன பூங்கா 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் திறந்து வைக்கப்பட்டது. அதன் ஆரம்பம் முதல் சுற்றுப்புறங்களில் வசிப்பவர்களைத் தவிர நாடு முழுவதிலுமிருந்து வருகின்ற அனைத்து தரப்பு மக்களையும் கவருவதில் வெற்றி கண்டுள்ளது. சதுப்பு நிலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்தப் பூங்கா வணிக தலைநகரில் இருந்து எளிதாக அடையக் கூடியதாகவுள்ளது. நகரத்தின் சலசலப்புகளிலிருந்து விலகி, குடும்பங்கள் தமது தரமான நேரத்தை செலவிடுவதற்கு இது ஒரு சிறந்த இடமாகவும் விளங்குகின்றது.

மிதமான நீரூற்றுக்களின் வண்ணமயமான ஜெட் நீரின் ஷூட்டிங் முழு அமைப்பையும் மிகவும் குதூகலிக்கச்செய்கின்றது.

தியவன்னா ஓயாவின் நீர் நிதானமாகப் பாய்வதால், அருகிலுள்ள நீரூற்றுக்கு மேலதிகமாக, பசுமையான சூழல் மற்றும் அமைதியான சூழல் என்பன பொது மக்கள் நாளில் எந்த நேரத்திலும் ஓய்வெடுக்க சிறந்த வகையில் ஆக்கப்பட்டுள்ளன.

தியவன்னா ஓயாவை தாண்டுகின்ற போது, பொது மக்கள் ஓய்வெடுக்காமலும், களைப்பை நீக்காமலும், சுற்றுப்புறத்தை இரசிக்காமலும், பசுமையான தோட்ட நாற்காலிகள் மூலோபாய இடங்களில் வைக்கப்பட்டுள்ளதையும் பார்க்காமலும் போகமாட்டார்கள்.



பார்வையிடுவதற்கு வருகின்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உணவு விற்பனை நிலையங்களும் உள்ளன. அவர்களுக்கு ஆரோக்கியமான நிதானமான சூழ்நிலையில் சிற்றுண்டிகளையும் பானங்களையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளும் காணப்படுகின்றன.

தியத்த உயனவில் உள்ள மீன்வளம் பல குழந்தைகளை ஈர்க்கின்றது. மேலும், மாலை நேரங்களில் வட்ட வடிவ மீன்வளத்தை சுற்றி கூட்டம் கூட்டமாக மக்கள் கூடுகின்றனர். ஏனெனில் இது நகரவாசிகளின் வாழ்க்கைக்கு ஒரு இனிமையான வாய்ப்பை அளிக்கின்றது.

**குறித்த பிரதேசத்தின் முக்கிய பண்புகள் பின்வருமாறு:**

- தியவன்னா ஓயா நீர் கரைப் பகுதிகளில் அழகான அலங்கார பூந்தாவர விற்பனைக் கடைகள் இருத்தல்
    - ஆற்றோரமாக நடைபாதை அமைந்திருத்தல்
    - ஒரு ஆற்றுப் படகை அல்லது மிதக்கும் ஒரு படகை பெற்று ஓட்டக்கூடிய வாய்ப்பு இருத்தல்
    - இலை வடிவ பேரூந்து நிறுத்தும் இடம் காணப்படுதல்
    - சீமெந்தினால் செய்யப்பட்டுள்ள ஆசனங்களும் மேசைகளும் இருத்தல்
- மத்திய நீரூற்று காணப்படுதல்
    - நிறம் மாறும் நீரூற்று காணப்படுதல்
    - சிறுவர்கள் விளையாடக் கூடிய பகுதிகள் இருத்தல்
    - ஓய்வெடுக்கக் கூடிய சூழல் இருத்தல் - மாணவர்கள் படிக்கவும் கூடிய சூழலும் காணப்படுதல்
    - வெள்ளப் பெருக்கு நீர் வெளிச்செல் பகுதி - சுதேசிய மற்றும் வெளிநாட்டு சிற்றுண்டி மற்றும் பான வகைகளை பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகள் இருத்தல்
    - தாழ்வாரம் ஓரமாக துள்ளிநடக்கும் பாதை, உடற்பயிற்சிப் பாதை மற்றும் சைக்கில் ஓடக்கூடிய பாதை என்பன காணப்படுதல்
    - சுற்று அக்குவரிய வசதிகள் இருத்தல்



பொருத்தமான விற்பனையாளர்கள் தேசிய போட்டிக் கேள்விமனு அழைத்தல் நடைமுறையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஒரு வருட காலத்திற்கு மாதாந்த வாடகை அடிப்படையில் ஒப்பந்தங்கள் வழங்கப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்கள் வருடாந்தம் ஐந்து ஆண்டுகள் வரை புதுப்பிக்கப்படும்.

பொது மக்கள் பாவிக்கும் வாகனம் நிறுத்துமிடம் மற்றும் கழுவல் அறை ஆகியவற்றிலிருந்து கிடைத்த வருமானம் 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் செயல்வலுப்பெறும் வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**மொத்த வருமானம் (2023): 113.94 மில்லியன் ரூபா**

**2. பெல்லன்வில**

கொழும்பில் உள்ளவர்களுக்கு இந்த இடம் பற்றி நன்றாக தெரியும். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான அல்லது ஆயிரக்கணக்கானோர் ஓடுவதற்கும், உடற்பயிற்சி செய்வதற்கும், சைக்கிள் ஓட்டுவதற்கும் இங்கு வருகின்றார்கள். கொழும்பில் இரவு நேரத்தில் இந்த இடத்திற்கு செல்வது ஒரு சுவாரஸ்யமான அம்சமாகும்.

கொழும்பில் பொரலஸ்கமுவ என்ற இடத்தில் அமைந்துள்ள பெல்லன்வில பூங்கா, இலங்கையில் இதுவரை நாம் கதைத்த ஏனைய பூங்காக்களை பார்க்கிலும் சற்று வித்தியாசமானது.



வெள்ளப் பெருக்கு அபாயத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் 2014 ஆம் ஆண்டு "வெரஸ் கங்கை" கருத்திட்டத்தின் முதல் கட்டமாக பெல்லன்வில பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நடைபாதை, சைக்கிள் பாதை மற்றும் உணவு நிலையம் என்பன இந்தப் பூங்காவின் முக்கிய அம்சங்களாகும். குடும்ப உறவினர்களுடன் அல்லது நண்பர்களுடன் மாலைப் பொழுதை கழிக்க இது மிகவும் அருமையான ஒரு இடமாகும்.

**மொத்த வருமானம் (2023): 5.29 மில்லியன் ரூபா**



**3. கிம்புலாவெல**

2015.01.12 ஆம் திகதி 103 உறுப்பினர்களுடன் இந்த உடற்பயிற்சி செயற்பாடுகள் நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த எண்ணிக்கை தற்போது 396 ஆக அதிகரித்துள்ளது. இது பொது மக்களின் ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு அதிக மதிப்பை தருகின்றது.



பயனுள்ள, திறமையான மற்றும் ஊக்கமளிக்கக் கூடிய உடற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைப்பதன் மூலம் இது நிறைவேற்றப்படுகின்றது. எமது பயிற்சியாளர்கள் நன்கு தகுதி பெற்றவர்கள். மேலும் இவர்கள் தொழில்துறையின் புதிய போக்குகளை தொடர்ந்து பேணி வருகின்றார்கள்.



மிக முக்கியமாக, புதிதாக இணைந்த அனுபவமற்ற உறுப்பினர்களுக்கு இவர்கள் மிகவும் அக்கறையுடனும் ஆதரவுடனும் இருக்கின்றார்கள்.

உடற்பயிற்சி நிலையத்தின் முதலாவது மாடியிலும் நில மாடியின் மூலையிலும் 2023.06.01 ஆம் திகதியிலிருந்து முறையே உணவு விடுதியும் பழச்சாறு விற்பனை கடையும் அமைந்துள்ளன.

வெளிக்கள உடற்பயிற்சி பகுதிற்கு வருகின்ற உடற்பயிற்சி உறுப்பினர்களும் பொது மக்களும் பழச்சாறு விற்பனை கடையிலிருந்து ஆரோக்கியமான பழ்ச்சாறு பானங்களை வாங்கி அருந்தலாம். இது நாளாந்தம் மு.ப. 6:00 மணி முதல் இரவு 10:00 மணி வரை திறந்திருக்கும். மக்கள் நாளாந்தம் மு.ப. 11:00 மணி முதல் இரவு 11:00 மணி வரை உணவு விடுதியிலிருந்து சுவையான உணவுகளை வாங்கி உண்ணலாம்.

**மொத்த வருமானம் (2023): 25.78 மில்லியன் ரூபா**

## 4. சூரிய மல்வத்த

சூரிய மல்வத்த பூங்கா வெள்ளப்பெருக்கு ஆபத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் 'வெரஸ் கங்கை' கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 2023 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நடைபாதையும் உணவு விற்பனை கடையும் இந்த பூங்காவின் பிரதான அம்ச்ஙகளாகும். இது உண்மையில் குடும்ப அங்கத்தவர்களுடன் அல்லது நண்பர்களுடன் மாலை நேரத்தை கழிக்க மிகவும் இனியாமையான ஒரு இடமாகும்.



**மொத்த வருமானம் (2023): 0.28 மில்லியன் ரூபா**

## 5. கட்டிய சந்தி

கட்டிய சந்தி பூங்கா வெள்ளப்பெருக்கு ஆபத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் 'வெரஸ் கங்கை' கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 2023 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. நடைபாதையும் உணவு விற்பனை கடையும் இந்த பூங்காவின் பிரதான அம்ச்ஙகளாகும். இது உண்மையில் குடும்ப அங்கத்தவர்களுடன் அல்லது நண்பர்களுடன் மாலை நேரத்தை கழிக்க மிகவும் இனியாமையான ஒரு இடமாகும்.



**மொத்த வருமானம் (2023): 0.09 மில்லியன் ரூபா**

## 6. கெலிமல

'பொரலஸ்கமுவ - கெலிமடல சிறுவர் பூங்கா' கொழும்பு - ஹொரண வீதியில் அமைந்துள்ளது. 2018 ஆம் ஆண்டு 'வெரஸ் கங்கை' கருத் ட்டத்தின் கீழ் கெலிமடல பூங்கா நிர்மாணிக்கப்பட்டுள்ளது. விஷேட தேவையுடைய சிறுவர்களுக்கான இலங்கையின் முதலாவது சிறுவர் பூங்கா இதுவாகும். இந்தப் பூங்காவின் முக்கிய அம்சங்களாக நடைபாதை, உணவு விடுதிகள் மற்றும் குழந்தைகள் பூங்கா ஆகியவை காணப்படுகின்றன. உண்மையில் குடும்ப உறவினர்களுடன் அல்லது நண்பர்களுடன் மாலை நேரத்தை கழிக்க இது ஒரு சிறந்த இடமாகும்.

ஊனமுற்ற சிறுவர்களுக்காக திட்டமிட்டு வடிவமைக்கப்பட்டுள்ள 21 வகையான செயற்பாடுகள் உள்ளன. விஷேட தேவைகள் உள்ள சிறுவர்கள், விஷேட பாதுகாப்பின் கீழ் முடிந்தவரை கூட்டு செயற்பாடுகளில் பங்கேற்கலாம்.

**மொத்த வருமானம் (2023): 2.93 மில்லியன் ரூபா**



### 7. கால்வாய் ஒதுக்கப் பகுதி விளம்பரப் பலகைகள் வசதி

கூட்டுத்தாபனத்தின் வெளிப்புற அடையாளம் பெரும்பாலும் வாடிக்கையாளர் பார்க்கும் முதல் விடயமாகும். கூட்டுத்தாபனத்தின் லோகோ வாடிக்கையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் (அழகியதாக இல்லாமல்) போதுமான பிரகாசமாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும். எதிர்கால வாடிக்கையாளர்களுக்கு அங்கு என்ன விற்பனை செய்யப்படுகின்றது என்பதைத் தெரிவிக்கும் வகையில் போதுமான தகவல் இருக்க வேண்டும். இகாஅகூ தாபனத்தின் கட்டுப்பாட்டில் காணப்படும் கால்வாய் கரைகள் மற்றும் பிற பகுதிகள் ஆகியவற்றில் உள்ள இடங்களை தனியாருக்கு அவர்களின் தயாரிப்புகளை, சேவைகளை அல்லது நிறுவனத்தை விளம்பரப்படுத்த அந்தப் பகுதியில் நகர சபையின் அனுமதியுடன் கூட்டுத்தாபனம் வாய்ப்பை அளித்துள்ளது.






**மொத்த வருமானம் (2023): 8.31 மில்லியன் ரூபா**

### 8. கார்ட்டென்ஸ் ஆர்க் உணவு விடுதி

கார்ட்டென்ஸ் ஆர்க் உணவு விடுதி நாவல நகர சதுப்பு நிலப் பூங்காவுக்கு அருகில் தியவன்னாவ ஓயாவின் அமைதியான நீரில் மிதக்கும் இலங்கையிலுள்ள பெரிய ஒரு உணவு விடுதியாகும். இந்த உணவு விடுதி 2014 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் திறந்து வைக்கப்பட்டது.

**மொத்த வருமானம் (2023): 3.86 மில்லியன் ரூபா**



### 9. அன்னப்பறவை படகு சேவை

ஓய்வும் அமைதியும் தியவன்னா ஓயாவின் வாக்குறுதிகள். அன்னப்பறவை துடுப்பு படகுகள் மகிழ்ச்சியைத் தருகின்றன. அதே சமயம் அதன் சதுப்பு நிலக் கரையில் படகு சவாரி செய்வது நகரவாசிகள் இயற்கையுடன் மீண்டும் இணைய உதவும். இந்த வசதியை பொது மக்களுக்கு செயற்படுத்த ஒரு தனியார் தரப்பை வழிநடத்தியுள்ளோம்.

**மொத்த வருமானம் (2023): 0.51 மில்லியன் ரூபா**



### 10. '38' டின்னர் குரூஸ் படகு

இந்தத 38' டின்னர் குரூஸ் படகு 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 24 ஆம் திகதி முதல் தியத்த உயனவை சுற்றியுள்ள தியவண்ணா ஏரியில் பயணிக்கும் ஒரு உணவகமாக காணப்படுகின்றது. அரிய வகை தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் வசிக்கும் அழகான தீவுகளைக் கடந்து தியத்த நீர்மார்க்கத்தின் தெளிவான நீரில் 12 கி.மீ. இகாஅகூ தாபனத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இடங்களையும் மற்றும் நீர்நிலைகளையும் நாம் ஏசியா குரூஸ் லைன்ஸ் என்ட் ட்ரவல்ஸ் லிமிற்றட்டு நிறுவனம் அதன் மிதக்கும் உணவகத்தை இயக்குவதற்காக வழங்கியுள்ளோம்.





**மொத்த வருமானம் (2023): 0.96 மில்லியன் ரூபா**

### 11. கிரிமண்டல மாவத்த கிரிகெட்டு மைதானம்

அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள 5.8 ஏக்கர்களில் வித்தியாசமான விளையாட்டு பொழுதுபோக்கு வசதிகளை வழங்கும் முகமாக ஒரு விளையாட்டு கட்டிடத்தொகுதியை நிர்மாணிக்க 2014 ஆம் ஆண்டில் கிரிமண்டல மாவத்தை பகுதியில் 18.5 ஏக்கர் அளவான ஒரு சதுப்புநிலம் சீராக்கப்பட்டு ஒரு முதல் தர கிரிக்கெட்டு விளையாட்டு மைதானமாக அபிவிருத்தி செய்யப்பட்டது. நிலப்பகுதி சர்வதேச விளையாட்டு மைதானத்திற்கு இணையாக இருந்தது. அமைவிடத்தின் முக்கியத்துவத்தினாலும் நிலம் தயார்ப்படுத்தல் தரத்தினாலும் நீண்டகால அடிப்படையில் குறித்த கிரிக்கெட்டு விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு / குத்தகைக்கு பெறுவதற்காக இலங்கையில் பிரபல கிரிக்கெட்டாளர்கள் அடங்கிய இலங்கை கிரிக்கெட்டு நிறுவனத்திடமிருந்தும் முதல் தர கிரிக்கெட்டு அணிகளிடமிருந்தும் இகாஅகூ தாபனத்திற்கு பல முன்மொழிவு யோசனைகள் கிடைத்தன.

இகாஅகூ 2022.04.22 ஆம் திகதியிலிருந்து இந்த மைதானத்தை வாடகைக்கு கொடுக்க ஆரம்பித்தது. இகாஅகூ தற்பொழுது விளையாட்டு போட்டிகளுக்காகவும், பயிற்சிகளுக்காகவும், விழாக்களுக்காகவும் வெளித்தரப்புகளுக்கு கிரிக்கெட்டு மைதானத்தையும் பக்க விக்கெட்டு வசதிகளையும் வாடகைக்கு வழங்கி வருகின்றது. இகாஅகூ மேலும் இந்த மைதானத்தின் பராமரப்பு பணிகளையும் செயற்பாட்டு பணிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

**மொத்த வருமானம் (2023): 7.88 மில்லியன் ரூபா**



## மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவு

மவஅ பிரிவின் முக்கியமான தொழிற்பாடுகளுக்கு மனித வளங்கள் அபிவிருத்தி நிருவாகப் பிரிவு நல்கும் பங்களிப்பு

01. மவ செயற்பாடுகள் (நிருவாகம்)
முக்கிய மனிதவள செயற்பாடுகளை சீராக்குதல் மற்றும் ஊழியர்களின் நலனை உறுதிசெய்தல்

02. மவ அபிவிருத்திகள்
தனிநபர்களினதும் மற்றும் நிறுவனங்களினதும் நோக்கங்களை அடைய கூட்டுத் தாபனத்தினுள் மனித மூலதனத்தின் சரியான திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி

03. மவ பயிற்சி மற்றும் அபிவிருத்தி
நிறுவன செயல்திறனை மேம்படுத்தும் நோக்கத்திற்காக ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துதல் மற்றும் அதனை அடைதல்

| மவ செயற்பாடுகள் | மவ அபிவிருத்திகள் | மவ பயிற்சி |
|---|---|---|
| • வருடாந்த இடமாற்றங்கள் மற்றும் சேவை அவசியத்தின் பேரில் இடமாற்றங்கள்<br>• மனிதவலு / சொத்துக்கள் / வாகனங்கள் / எந்திராதிகள் மற்றும் உபகரணங்கள் என்பனவற்றின் விபத்துக்கள் தொடர்பான வடருடாந்த காப்புபுறுதி கோரல்களை கையாளுளுதல்<br>• ஒழுக்காற்று கட்டுப்பாடுகள்<br>• ஊழியர்களின் நலன்புரி செயற்பாடுகள்<br>• நன்மைகள் முடிவுறுத்தல்<br>• பாதுகாப்புப் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு மற்றும் மருத்துவ நிலையம் என்பவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்<br>• சம்பளங்கள் வேதனாதிகள் நிருவாகம்<br>• அஞ்சல் முறைமை நிருவாகம்<br>• வருடாந்த / சம்பள படியேற்றங்கள்<br>• தொழிற்சங்க விடயங்களை கையாளுதல்<br>• ஊழியர் மனக்குறைகளை கவனித்து தீர்த்துவைத்தல்<br>• நேர முகாமைத்துவம் | • மவ திட்டமிடுகை<br>• ஆட்சேர்ப்பு மற்றும் தேர்ந்தெடுத்தல்<br>• பதவியுயர்வுகள்<br>• HR கொள்கை தயாரித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்<br>• பணிப்பாளர்கள் சபையின் தீர்மானங்களையும் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவப் பிரிவின் தீர்மானங்களையும் செயற்படுத்துதல் மற்றும் அவற்றை ஒருங்கிணைப்பு செய்தல்<br>• கூட்டிணைந்த திட்டங்களையும் மற்றும் வருடாந்த வரவுசெலவுத் திட்டங்களையும் தயாரித்தல் | • உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்<br>• பயிற்சித் தேவை மதிப்பீடுகளை மேற்கொள்ளல்<br>• வருடாந்த பயிற்சித் திட்டத்தை தயாரித்தல்<br>• பெயர்குறித்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒரு பயிற்சிக் குழு அதிகாரியின் ஊடாக அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நுண்ணாய்வு செய்தல்<br>• பயிற்சிக்கு பிந்திய பின்னூட்டல் முறைமையை செயல் படுத்துதல்<br>• உயர் கல்விக்கு தேவையான நிதி உதவிகளை வழங்குதல்<br>• இகாஅகூ இன் தரமான முகாமைத்துவ முறைமையை அடைவதற்கான நடைமுறைகளையும் நடபடிமுறைகளையும் கண்காணித்தல் மற்றும் மேம்படுத்துதல் |
| • உள்ளக மற்றும் வெளிக்கள சுற்றறிக்கைகள் | | |

**<u>ஆட்சேர்ப்பும் தேர்ந்தெடுத்தலும்</u>**

2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை

| தொழில் வகை | எண்ணிக்கை |
|---|---|
| நிரந்தர ஊழியர்கள் | 24 |
| ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் | - |
| மொத்தம் | 24 |

2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதிற்கு மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை

| விவரம் | எண்ணிக்கை |
|---|---|
| நிரந்தர ஊழியர்கள் | 1277 |
| ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்கள் | 25 |
| அமைய ஊழியர்கள் | - |
| மொத்தம் | 1302 |

**<u>பதவியுயர்வுகள்</u>**

பதவியுயர்வு நிறுவனத்தின் குறிக்கோள்களையும் ஒரு ஊழியரின் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் நிறைவேற்றுவதன் அடிப்படையில் அமைந்துள்ளது. சிக்கலான தன்மையையும் ஒப்படைக்கப்படும் பொறுப்பையும் பொருத்து இது வேறுபடலாம். ஆகையால் பொறுப்பு நிலைகளை மேம்படுத்துவதை உள்ளடக்கிய நிலை மாற்றங்களின் பேரில் பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்றன. பதவியுயர்வுகளின் மேலதிக நன்மைகள் சிறந்த பணிகள் நிறைவேற்றப்படுவதை ஊக்குவித்து ஒழுக்கத்தை மேம்படுத்தி தனிநபரின் சாதனையையும் மதிப்பையும் உணர்த்துகின்றன.

எனவே, 2023 ஆம் ஆண்டில் 59 பதவியுயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

**<u>பயிற்சியும் அபிவிருத்தியும்</u>**

ஒரு நிறுவனம் தனது மனிதவலுவை அனுகூலப்படுத்த வேண்டும் என்றால் **மனித வள**

**முகாமைத்துவ** (மவமு) பயிற்சியும் அபிவிருத்தியும் முக்கியமான அம்சமாகும். பயிற்சியும் அபிவிருத்தியும் குழு முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவம் போன்ற திறன்களை மேம்படுத்துவதில் உதவுவதால் நிறுவனத்தின் வெற்றிகரமான திட்டமிடுகைக்கு மிகவும் முக்கியமானதாகும். நிறுவனத்தின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது, மவ பயிற்சியும் அபிவிருத்தி செயற்பாடுகளும் இலாபத்தை அதிகரிப்பதற்கும் கூட்டுத்தாபனத்தின் நன்மதிப்பை மேம்படுத்துவதற்கும் மிக முக்கியமான **செயலாற்றுகை முகாமைத்துவ** கருவிசாதனமாக விளங்குகின்றது.

அதற்கிணங்க இகாஅகூ 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தனது ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக பல அறிவு பகிர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியுள்ளதுடன் இகாஅகூ தாபனத்தின் எல்லா வகுதி ஊழியர்களுக்கும் தொழில் அபிவிருத்திற்கு தொடர்ந்தும் உதவி வருகின்றது.

**<u>இகாஅகூ தாபனத்தின் தர முகாமைத்துவ முறைமை</u>**

இகாஅகூ இலங்கை தர நியமங்கள் மற்றும் கட்டளைகள் நிறுவகத்தின் (இதநிகநி) தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் தர முகாமைத்துவ நியமங்களை பெற்று ஒரு முதன்னிலை ஒரு நிறுவமான விளங்குகின்றது.

ISO 9001: 2015 தர முகாமைத்துவ முறைமை

ISO 14001: சுற்றாடல் முகாமைத்துவ முறைமை (சுமுமு)

ISO 45001: தொழில் சுகாதார பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை

## சட்டப் பிரிவு

இந்த சட்டப் பிரிவு, இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் (இகாஅகூ) 1968 இன் 15 ஆம் இலக்க சட்டத்தினது ஏற்பாடுகளினாலும் மற்றும் அதற்கான அடுத்தடுத்து வந்த திருத்தங்களினாலும் உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களின் பிரகாரம் செயற்படுகின்றது.

**இதன் சட்ட அம்சங்கள் பின்வருமாறு:**

1. நில அபிவிருத்தி, மீள்குடியேற்றம், சமூக ஆலோசனை மற்றும் குறைந்த வருமான குடியேற்றப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு சட்ட உதவிகளை வழங்குதல் என்பன பற்றிய சட்டசார் ஆவணங்களைத் தயாரித்தல்.

2. கூட்டுத் தாபனத்தினால் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் வழக்குகள் சார்பாகவும் மற்றும் கூட்டுத் தாபனத்திற்கு எதிராக தாக்கல் செய்யப்படும் வழக்குகளுக்கு எதிராகவும் வாதாடுதல்.

3. கூட்டுத் தாபனத்தின் நாளாந்தப் பிரச்சினைகளுடன் தொடர்புடைய கசல விடயங்களிலும் ஆலோசனை வழங்குதல்.

4. அதிகாரமற்ற முறையில் காணிகளை மண்ணிரப்பியெடுக்கும், வடிகால் வடிவமைப்பு பற்றிக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறும், கால்வாய் ஒதுக்கப் பகுதிகளில் சட்டவிரோதமாக குடியிருக்கும், கால்வாய்களை மாசுபடுத்தும் சகல செயற்பாடுகளுக்கு எதிராகவும், அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளும் நபர்களுக்கு எதிராகவும், இகாஅகூ தாபனத்தின் 2006 ஆம் ஆண்டின் 35 ஆம் மற்றும் 13/2021 இன் ஆம் இலக்க திருத்தல் சட்டங்களினது ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டநடவடிக்கைகளை எடுத்தல்.

5. பு.ஒ., விற்பனை ஒப்பந்தங்கள், ஒப்பந்த / உசாதுணை உடன்படிக்கைகள், நீண்டகாலக் குத்தகை ஒப்பந்தங்கள், வருடாந்த குத்தகை ஒப்பந்தங்கள், குறுங்காலக் குத்தகை ஒப்பந்தங்கள், காணி உறுதிகளை மாற்றிக் கொடுத்தல் முதலியன தொடர்பான அனைத்து ஆவணங்களையும் மற்றும் வெளிநாட்டுத் தொழில் தொடர்பான முறிகள் (சம்பளமற்ற / சம்பளத்துடனான), வாகனக் கடன் ஒப்பந்த ஆவணங்கள், அற்றோனித் தத்துவ ஆவணங்கள் மற்றும் காணி அங்கீகார சான்றிதழ்களுக்கான காணி உரித்து ஆவணங்கள் முதலிய ஆவணங்களையும் தயாரித்து உறுதிப்படுத்துதல்.

## கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் அறிக்கை

கணக்காய்வு முகாமைத்துவ குழு என்பது ஒரு நிறுவனத்தின் நிதி அறிக்கை, உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள், இடர் முகாமைத்துவ முறைமைகள், உள்ளக மற்றும் வெளிக்கள கணக்காய்வு செயற்பாடுகள் போன்ற விடயங்களில் அதன் மேற்பார்வை பொறுப்புகளை அடைய சபைக்கு உதவுவதில் ஒரு மூலோபாய வகிபங்கை வகிக்கின்ற ஒரு குழுவாகும். கணக்காய்வு முகாமைத்துவ குழுவுக்கு நிறைவேற்று தரம் அல்லாத ஒரு பணிப்பாளர் தலைமை தாங்குவார். நிறைவேற்று தரம் அல்லாத பணிப்பாளர்கள் மட்டுமே இதில் உள்ளடங்குவார்கள். குழுவுக்கு சிரேஷ்ட துணைப் பணியாளர்கள் உதவுவார்கள். மேலும் குழுவின் கடமைகளை வினைத் திறனாக மேற்கொள்வதற்கு அதில் போதிய நிதி மற்றும் கணக்காய்வு நிபுணர்கள் இருப்பார்கள்.

**குழுவின் வகிபங்கு**

**கணக்காய்வு முகாமைத்துவ குழு சமவாயம்**

பொதுத்தொழில்முயற்சிகளின் கணக்காய்வு முகாமைத்துவ குழுக்கள் பொதுத் திறைசேரி வெளியிட்டுள்ள பொதுத் தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் PED: 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளினால் ஆளப்படும்.

**கவனம் செலுத்த வேண்டிய முக்கிய அம்சங்கள்**

கணக்காய்வு முகாமைத்துவ குழு முக்கியமாக நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயல்முறை மற்றும் இயக்கச்செயற்பாடுகள் பற்றிய ஒரு சுயாதீனமான மற்றும் புறநிலை மதிப்பாய்வை செய்வதன் மூலம் அதன் கடமைகளை நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுவதில் கவனம் செலுத்துகின்றது.

**குழுவின் கூட்டங்கள்**

2023.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டு காலப் பகுதியில், குழுவின் நான்கு கூட்டங்கள் நடைபெற்றன. குழுக் கூட்டங்களின் கூட்டக் குறிப்புகள் பதிவு செய்யப்பட்டு, பணிப்பாளர்கள் சபைக்கு தொடர்ந்து அறிவிக்கப்பட்டது. கணக்காய்வாளர் நாயகத்தின் பிரதிநிதியாக (அவதானிப்பாளராக) கணக்காய்வு மேற்பார்வையாளர் கூட்டங்களில் பங்கேற்றார். நிரல் அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளரினது அழைப்பின் பேரில் இவர் கூட்டங்களில் கலந்து கொண்டார்.

2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற கூட்டங்களில் குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டமை தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| பணிப்பாளர்கள் பெயர் | கலந்து கொண்ட கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திருமதி எஸ். ஏ. சி. குலதிலக்க (தலைவர்) (முதல் மூன்று கூட்டங்களில் கலந்துகொண்டார்) | 3 |
| திரு எஸ். தர்ஷன் (தலைவர்) (இறுதிக் கூட்டத்தில் கலந்துகொண்டார்) | 1 |
| திரு காமினி ஹேவகே (உறுப்பினர்) | 4 |
| திரு தம்மிக்க திஸாநாயக்க (உறுப்பினர்) | 4 |

**உள்ளகக் கணக்காய்வு**

கூட்டுத்தாபனத்தில் தனியான ஒரு உள்ளக கணக்காய்வுப் பிரிவு உள்ளது. உள்ளக கணக்காய்வுத் திட்டம் கணக்காய்வு குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. குழு உள்ளக கணக்காய்வுத் திட்டத்தின் உள்ளடக்கத்தின் முன்னேற்றத்தை மதிப்பாய்வு செய்கின்றது. குழு தனது காலாண்டு கூட்டங்களில் உள்ளக கணக்காய்வாளர்களின் அறிக்கைகளை கண்காணித்து மதிப்பாய்வு செய்கின்றது.

**வெளிக்களக் கணக்காய்வு**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம், கணக்காய்வாளர் நாயகம் வெளிக்கள கணக்காய்வாளராக நியமிக்கப்பட்டார். கணக்காய்வாளர் அதிபதி நியமித்த கணக்காய்வு கண்காணிப்பாளர் மற்றும் அவரது பணியாளர்கள், கூட்டுத்தாபனத்தின் வெளிக்கள கணக்காய்வு செயற்பாடுகளை ஒருங்கிணைக்கிறார்கள்.

**முடிவு**

தலைவர் திருமதி.எஸ்.ஏ.சி.குலத்திலக்க அவர்கள் மூன்று கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினார் என்பதையும், அவர் ஓய்வுபெற்றதன் பின்னர், இந்த அறிக்கையின் உள்ளடக்கப்பட்டுள்ள காலப்பகுதியில், அதாவது 2023 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டில் திரு எஸ்.தர்ஷன் குழுவின் தலைவராக இருந்தார் என்பதையும் குழு கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றது. எனவே, அறிக்கை, பதிவுகளை அடிப்படையாகக் கொண்டது. அதன் நம்பகத்தன்மை சரிபார்க்கப்பட்டு சந்தேகத்திற்கு இடமின்றி உறுதிசெய்யப்பட்டது. தற்போதைய கணக்காய்வு முகாமைத்துவக் குழுவில் திரு எஸ்.தர்ஷன் (தலைவர்), திரு காமினி ஹேவகே (உறுப்பினர்) மற்றும் திரு தம்மிக்க திஸாநாயக்க (உறுப்பினர்) ஆகியோர் உள்ளடங்குகின்றனர்.

**கணக்காய்வு முகாமைத்துவ குழுவின் சார்பாக**

**எஸ். தர்ஷன்**
**தலைவர் - கணக்காய்வு முகாமைத்துவ குழு**
**2024 பெப்ருவரி 22**

## நிதி சார் மீளாய்வு

**கூட்டுத்தாபனத்தின் நிதி சார் செயலாற்றுகை**

2016 ஆம் ஆண்டு முதல் கடந்த ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து இயக்க இலாபத்தை பதிவுசெய்த பின்னர், நடைமுறை ஆண்டில் கூட்டுத்தாபனம் 130 மில்லியன் ரூபா செயற்பாட்டு நட்டத்தை சந்தித்துள்ளது. ஒரு காணியை விற்பதன் மூலம் கிடைத்த இலாபம் 447 மில்லியன் ரூபாவும் இந்த இயக்க நட்டத்தில் உள்ளடங்குகின்றது. இந்த கருத்திட்டங்களின் குறைந்த அல்லது எதிர்மறையான மட்டுப்பாடுகள், குறைந்த செயற்பாட்டு நிலைகள் மற்றும் மேல்நிலை அதிகரிப்பு என்பவற்றின் விளைவாக இயக்க நட்டம் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மீளாய்வு ஆண்டிற்கான வரிக்கு முன்னைய இலாபம் அதன் முன்னைய ஆண்டிலிருந்த 761 மில்லியன் ரூபாவிலிருந்து 1,223 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை, முதலீட்டு வருமானம் 1,191 மில்லியன் ரூபாவிலிருந்து 1,637 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. இது விவேகமான ஆற்றல்மிக்க முதலீட்டு பிரிவு நிர்வாகத்தின் மூலம் சந்தையில் நிலவும் அதிக வட்டி விகிதங்களைப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவாகும்.




இயக்க இலாபம்/(நட்டம்)

குறித்த ஆண்டிற்கான இயக்க இலாபம்/(நட்டம்)

கூட்டுத்தாபனத்தின் வருமானம் அதன் முன்னைய ஆண்டிலிருந்த 4,290 மில்லியன் ரூபாவிலிருந்து நடைமுறை ஆண்டில் 5,431 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. மீளாய்வு ஆண்டில், திறைசேரி கருத்திட்டங்களின் வருமானம் மொத்த வருமானத்தில் 46% வீதமாக உள்ளது. மணல் விற்பனை வருமானம், காணி விற்பனை வருமானம் மற்றும் வாடிக்கையாளர் கருத்திட்டங்களின் வருமானம் என்பன ஏனைய முக்கிய வருமான பங்களிப்பு பிரிவுகளாக மாறியிருந்தன.




2023 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் வருமான விபரங்கள் பிரிவு வாரியாக கீழே தரப்பட்டுள்ளன.




- திறைசேரி நிதியிட்டுள்ள கருத் திட்டங்களிலிருந்து கிடைத்த வருமானம்
- வாடிக்கையாளர் கருத் திட்டங்களிலிருந்து கிடைத்த வருமானம்
- கடல் மணல் விற்பனை
- காணிகளின் விற்பனை மற்றும் குத்தகை
- ஓய்வு பூங்காக்களிலிருந்து கிடைத்த வருமானம்
- கழிவுநீர் முகாமைத்துவ பூங்கா வருமானம்
- ஏனைய

2023 ஆம் ஆண்டில், கூட்டுத்தாபனம் 4469 மில்லியன் ரூபாய் பெறுமானத்தை ஈட்டியுள்ளது. அக்கறையுடைய தரப்புகளுக்கு இடையில் அது பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள விபரம் இந்த அறிக்கையின் பிற்பகுதியில் காட்டப்பட்டுள்ளது. நிதி சட்டத்தின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டில் திரட்டு நிதியத்திற்கு விஷேட வரியாக 500 மில்லியன் ரூபாவுக்கு கூட்டுத்தாபனம் பங்களித்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

2023 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்கள் 11 பில்லியன் ரூபாவை தாண்டியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் கூட்டுத்தாபனத்தின் மொத்த சொத்துக்கள் 19 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாகும். கூட்டுத்தாபனத்தின் பணப்புழக்கமும் திருப்திகரமான அளவில் பேணப்படுகின்றது.

அதிக அளவு மேல்நிலை செலவினங்களால் ஏற்படும் சுமை கூட்டுத்தாபனம் தற்போது எதிர்கொள்ளும் மிகப்பெரிய சவாலாகும். 2023 ஆம் ஆண்டில், 2,375 மில்லியன் ரூபா மொத்த இலாபம் 130 மில்லியன் ரூபா இயக்க இழப்பை ஏற்படுத்திய மேல்நிலை செலவுகளுக்கு முற்றிலும் செலவு செய்யப்பட்டது.

**குழுவின் நிதி சார் செயலாற்றுகை**

2023 ஆம் ஆண்டிற்கான இரு துணை நிறுவனங்களும் குழுவின் நிதி சார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்தும் இலாபத்தைப் பதிவு செய்துள்ளன. முன்னைய ஆண்டில் இருந்த 13 மில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடும் போது REDECO கம்பனி 34 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது. LRDC கம்பனி முன்னைய ஆண்டில் 62 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியிருந்த நிலையில், நடமுறை ஆண்டுகளில் 87 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியது.

## பணிப்பாளர்களின் அறிக்கை

பணிப்பாளர்களாகிய நாம் 2023 ஆம் ஆண்டு திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான எமது இந்தக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையையும் கணக்குகளையும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றோம்.

### பிரதான செயற்பாடுகள்

இந்தக் கூட்டுத் தாபனத்தின் முக்கிய செயற்பாடுகள் இயக்கச்செயற்பாடு சார்ந்த மீளாய்விலும் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான 1 ஆம் இலக்கக் குறிப்பிலும் விவரிக்கப்பட்டுள்ளன.

### குறித்த ஆண்டின் இயக்கச்செயற்பாடு சார்ந்த மீளாய்வு

இயக்கச்செயற்பாடு சார்ந்த மீளாய்வு குறித்த ஆண்டு காலப் பகுதியில் இந்தக் கூட்டுத் தாபனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் விரிவான மீளாய்வு விபரங்களைத் தருகின்றது.

### புறழ்வு

2023 ஆம் ஆண்டிற்கு இந்தக் கூட்டுத்தாபனம் ஈட்டியுள்ள புறழ்வு 5,431 மில்லியன் ரூபாவாகும் (2022: 6,793 மில்லியன் ரூபா)

### இலாபம்

2022 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்டிருந்த 336 மில்லியன் ரூபா இலாபத்துடன் ஒப்பிடும் போது இந்தக் கூட்டுத்தாபனம் குறித்த மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் 938 மில்லியன் ரூபா இலாபத்தை ஈட்டியுள்ளது.

### விவகாரங்களின் நிலை

இந்தக் கூட்டுத் தாபனத்தின் விவகாரங்கள் நிலை நிதிக் கூற்றில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (பக்கம் 113).

### சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

குறித்த ஆண்டு காலப் பகுதியில் காணப்படும் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் நகர்வு நிதிக் கூற்றுக்களுக்கான 8 ஆம் இலக்கக் குறிப்பில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

### வரி விதிப்பு

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் அதனையடுத்து இந்த சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களுக்கும் இணங்க வரி விதிப்பு நோக்கங்களின் நிமித்தம் சீராக்கப்பட்டுள்ளவாறு குறித்த ஆண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில் வருமான வரிக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களுக்கு இருக்கின்ற அக்கறைகள்

நிதிக் கூற்றுக்களுக்கான 22 ஆம் குறிப்பில் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர, கூட்டுத் தாபனத்துடனான ஒப்பந்தங்களில் அல்லது உத்தேச ஒப்பந்தங்களில் பணிப்பாளர்களுக்கு நேரடியான அல்லது மறைமுகமான அக்கறைகள் ஏதும் கிடையாது.

### சபைக் கூட்டம்

**2023** ஆம் ஆண்டு காலப்பகுதியில் 12 சபை கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பணிப்பாளரும் கலந்து கொண்டுள்ள சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| பணிப்பாளரின் பெயர் | நியமன திகதி | கலந்து கொள்ள தகுதியான கூட்டங்கள் | கலந்து கொண்ட கூட்டங்கள் எண் ணிக்கை |
|---|---|---|---|
| கட்டளை அதிகாரி ஹிரான் சச்சீந்திர பாலசூரிய | 14.03.2022 | 12 | 12 |
| பொறியியலாளர் (திருமதி) தீபிக்கா த்ரிமஹாவிதான | 02.01.2023 | 06 | 05 |
| பொறியியலாளர் (திரு) அஜித் குணசேக்கர | 04.07.2023 | 06 | 05 |
| திரு டீ.ஏ.எச். பியதிலக்க | 04.04.2022 | 12 | 11 |
| திரு காமினி ஹேவகே | 04.04.2022 | 12 | 12 |
| திருமதி எஸ்.ஏ.சி. குலதிலக்க | 03.03.2022 | 09 | 09 |
| திரு எஸ். தர்ஷன் | 10.10.2023 | 03 | 02 |
| திரு ஆனந்த ஹரிஸ்சந்திர | 09.08.2022 | 12 | 10 |
| திரு திஸ்ஸ குணவர்த்தன | 09.08.2022 | 12 | 11 |
| திரு டீ.எஸ். திஸாநாயக்க | 09.08.2022 | 12 | 12 |

### நிகழ் எண்ணக்கரு

இந்தக் கூட்டுத் தாபனம் தொடர்ந்தும் இயங்க அதற்கு ஆற்றல் இருக்கின்றது என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும்.

**நியதிச்சட்டமுறையான கொடுப்பனவுகள்**
பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில், இது வரை ஊழியர்களுக்கும் அரசாங்கத்திற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள நிதியச்சட்டமுறையான கொடுப்பனவுகளில் திருப்தியடைகின்றார்கள்.

**ஊழியர்கள்**
2023 திசம்பர் 31 ஆம் திகதியில் கூட்டுத் தாபனம் 1302 நபர்களுக்கு தொழிலை வழங்கியிருந்தது (2022: 1361).

**ஐந்தொகைக்கு பின்னர் எழும் சம்பவங்கள்**
நிதி நிலைக் கூற்றின் திகதிற்கு பின்னர் எழுகின்ற சகல பொருண்மையான சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**அதிவிஷேட விடயங்கள்**
தனித்தனி வெளிப்படுத்துகையை தேவைப்படுத்தும் விதிவிலக்கான / அதிவிஷேட இயல்பின் கொடுக்கல்வாங்கல்கள் நிதி அறிக்கைகளுக்கான குறிப்புகளில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

**கணக்காய்வாளர்கள்**
தேசிய கண்ககாய்வு அலுவலகம் இந்தக் கூட்டுத் தாபனத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை கணக்காய்வு செய்யும்.

சபையின் கட்டளைப்படி

**எச்.கே.கே. டப்ளியூ. ஏக்கநாயக்க**
சபைக்கான செயலாளர்
2024 மே 08

## கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

எச்யூடி/சீ/எஸ்எல்எல்டீசீ/எப்ஏ/23/01 2024 ஒக்டோபர்

தலைவர்
இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம்

**இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்டரீதியான மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் (''கூட்டுத்தாபனம்'') மற்றும் அதன் துணைக் கம்பனிகளின் (''தொகுதி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

**1.2.1 தொகுதி**

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் பிரகாரம் மற்றும் எண்ணக்கரு கட்டமைப்பின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் துணைக் கம்பனிகளுக்கு இடையே இடம்பெறுகின்ற சொத்துக்கள், ஏனைய சொத்துக்கள் விற்பனை, குத்தகைக்கு வழங்கல் அல்லது கையளித்தல் தொடர்பான உரிய தகவல்கள் விரிவாகவும் பொருண்மையானதாகவும் நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.2.2 இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் துணைக் கம்பனியான நில மீட்டல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கம்பனி மற்றும் வ/ப எல்ஆர்டீசீ சேவை (தனியார்) கம்பனியின் 2023 திசெம்பர் 31 ஆந்த திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு அபிப்பிராயம் கீழே குறிப்பிடுகின்ற விடயங்களின் அடிப்படையில் முனைப்பழியாக்கப்பட்டது.**

**1.2.2.1 வ/ப எல்ஆர்டீசீ சேவை (தனியார்) கம்பனி**

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமத்திற்கு இணங்காமை

(அ) நியத்தின் 02 ஆம் பந்தி

எண்ணக்கரு மற்றும் பொதுவான தத்துவங்களின் 2.52 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்தின் மூலம் ஒழுங்குபடுத்தப்படாது இருக்குமாயின் நிறுவனத்தின் வருமானம் மற்றும் செலவினங்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும் கம்பனியின் சேவை பங்களிப்பு நிறுவனம் அறவிடுகின்ற தண்டப்பணம் விற்பனை வருமானத்தில் கழித்துக் காண்பிக்கப்பட்டதன் காரணமாக விற்பனை வருமானம் ரூபா 33.79 மில்லியனால் குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) நியமத்தின் 10 ஆம் பிரிவு

நியமத்தின் 10.21 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தால் இனங்காணப்பட்ட பொறுண்மையான முன்னைய காலப் பகுதியின் தவறுகள் அதன் (அ) மற்றும் (ஆ) பிரிவுகளின் பிரகாரம் சரி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்குரிய ரூபா 9.21 மில்லியன் ஆன தேசத்தைக் கட்டியொழுப்பும் வரி மீளாய்வாண்டின் போது வருமானமாக இனங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமதியால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நியமத்தின் 13 ஆம் பிரிவு

நியமத்தின் 13.19 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் ரூபா 77,968 பெறுமதியான மாதிரி இருப்புக்கள் (Sample) 14 விடயங்களும், ரூபா 6.77 மில்லியன் பெறுமதியான Metal Detectors 731 மற்றும் ரூபா 2.4 மில்லியன் பெறுமதியான CCTV உபகரணங்கள் 587 உம் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 9.25 மில்லியன் பெறுமதியான இருப்புக்கள் 05 வருடங்கள் முழுவதும் விற்பனை செய்யப்படாது காணப்பட்ட போதும் அதற்குரிய இழப்பீட்டு நட்டம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் கம்பனியின் இணக்கம் செய்யப்படாத கடன் பட்டோர் மீதி ரூபா 1.28 மில்லியன் ஆக இருந்ததுடன் இந்தக் கடன்பட்டோரில் குறித்துரைத்தவாறு இனங்கண்டு உரிய கடன்பட்டோர் கணக்குகளைச் சரிசெய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தவுடன் நிதி நிலைமைக் கூற்றில் கடன்பட்டோர் பெறுமதியில் அப்பெறுமதி கழித்து கடன்பட்டோர் மீதி காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) கம்பனியால் தாய் கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைத்த CCTV ஸ்தாபிக்கும் ஒப்பந்தத்திற்குரிய கூட்டுத்தாபனத்தில் இருந்து கிடைக்காத ரூபா 1.59 மில்லியன் விற்பனைகளில் இருந்து கழிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக விற்பனை வருமானம் அப்பெறுமதியால் குறைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**1.2.2.2 நில மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கம்பனி**

**சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்காமை.**

(அ) நியமத்தின் 02 ஆம் பிரிவு

மீளாய்வாண்டு வரையில் பொருளாதார சேவைக் கட்டணம் நீக்கப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்ததன் காரணமாக நடப்பாண்டில் அல்லது அதன் பின்னர் செலுத்த வேண்டிய வரிகளுக்காக பொருளாதார சேவைக் கட்டணம் ஈடு செய்ய முடியாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 3.03 மில்லியன் ஆக பெறவேண்டிய பொருளாதார சேவைக் கட்டணம் காண்பிக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(ஆ) நியமத்தின் 10 ஆம் பிரிவு

(i) நியமத்தின் 10.19 ஆம் பந்திக்கு முரணாக கடந்த ஆண்டுக்குரிய ரூபா 1.51 மில்லியன் மருத்துவ படிகள் மீளாய்வாண்டின் போது செலவினமாக இனங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் இலாபம் அப்பெறுமதியால் குறைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 10.19 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதியின் தவறுகள் கடந்த கால தாக்கங்களின் பிரகாரம் ஆரம்ப மீதி மற்றும் கடந்த ஆண்டின் இணைக்கப் பெறுமதியில் (Comparative amounts for the prior period) மீண்டும் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நடப்பாண்டின் வரி வருமானம் மற்றும் வரிக்கு பின் விரிவான வருமானம் ரூபா 33.28 மில்லியன் மிகைக் கணிப்பீடு காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) நியமத்தின் 16 ஆம் பிரிவு

கம்பனியால் ரூபா 38 மில்லியன் பெறுமதியான கொட்டுகல காணி எதிர்காலத்தின் போது வாடகை வருமானம் உழைக்கும் நோக்கில் வைக்கப்பட்டிருந்ததுடன் நியமத்தின் 16.2 ஆம் பந்திக்கு இணங்க முதலீட்டுச் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படாமல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நியமத்தின் 17 ஆம் பிரிவு

நியமத்தின் 17.19 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் மீளாய்வாண்டின் இறதியில் காணப்பட்ட பதிவழிக்கப்பட்ட பெறுமதி ரூபா 64.95 மில்லியன் ஆன கட்டிடங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான இழிவுப் பெறுமதி மற்றும் பயன் தரு ஆயுட்காலம் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் இறுதியில் கிரயம் ரூபா 63.71 மில்லியன் ஆன முழுமையாகப் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற 635 நிலையான சொத்துக்கள் காணப்பட்ட போதும் அந்த சொத்துக்களின் மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்களை சரி செய்வதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நியமத்தின் 23 ஆம் பிரிவு

நியமத்தின் 23.17 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடல் காலப் பகுதியின் போது ஒப்பந்தத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ள மட்டம் (Stage of Completion) அடிப்படையில் ஒப்பந்த வருமானம் மற்றும் செலவினங்கள் இனங்காண வேண்டியிருந்த போதிலும் கம்பனியின் பொறியியலாளரின் சான்றுபடுத்தப்பட்ட பட்டியல் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்த வருமானம் இனங்காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் உரிய கம்பனியால் ரூபா 79.12 மில்லியன் ஆக வருமானம் இனங்காணப்பட்ட போதும் நியமத்தின் பிரகாரம் ஆற்றப்பட்ட வேலை மட்டத்தின் அடிப்படையில் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் படி 2023 ஆம் ஆண்டுக்குரிய வருமானம் அண்ணளவாக ரூபா 54.91 மில்லியன் ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் அந்த மீதிகளுக்கு இடையே ரூபா 24.21 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமதியால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) நியமத்தின் 27 ஆம் பிரிவு

நியமத்தின் 27.9 (உ) பந்தியின் பிரகாரம் கடல் மணல் அகழும் செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்ட ரூபா 55.42 மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் இழப்பீட்டிற்கு உட்பட்டிருந்த போதிலும் எந்த ஒரு இழப்பீட்டு நட்டமும் கம்பனியால் மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(எ) நியமத்தின் 28 ஆம் பிரிவு

(i) கம்பனியால் நியமத்தின் பிரகாரம் குறித்துரைத்த பங்களிப்புத் திட்டம் ஒன்று தயாரித்தல், குறித்த நலன் பொறுப்புக்களை அளவிடல், கையளித்தல் மற்றும் கையளிக்கப்படாத பொறுப்புக்களை உள்ளடக்குதல், கழிவு, ஆயுட்கால மதிப்பீடு போன்ற பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் ரூபா 1.45 மில்லியன் ஊழியர் பணிக்கொடை செலவினம் ஒன்று மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டிருந்தது. அதனால் இந்தக் கம்பனி தொடர்பாகவும், அதற்குரியதாக இனங்காணப்பட்ட ரூபா 18.74 மில்லியன் ஆன நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் சரியான தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ii) கம்பனியால் அதன் தாய் கம்பனிக்கு விடுவிக்கப்பட்ட (Man Power Basis) 181 ஊழியர்களுக்காக 2010 ஆம் ஆண்டில் இருந்து ஊழியர் பணிக்கொடை செலவினம் மற்றும் பொறுப்புக்கள் கணிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நியமத்தின் 29 ஆம் பிரிவு

(i) நியமத்தின் 29.8 ஆம் பந்தியின் பிரகாரம் பிற்போட்ட வரிகளுக்காக இனங்காணப்பட்டிருந்த 2019/20 மற்றும் 2020/21 ஆண்டுகளுக்கு உரிய நட்டமான ரூபா 99.39 மில்லியன் ஆன பிற்போட்ட வரி சொத்துக்கள் ரூபா 29.82 மில்லியன் எதிர்வரும் 03 ஆண்டுகளில் அறவிட முடியுமாக இருந்தததா என கணக்காய்வின் போது பிரச்சனைக்கு உரியதாக இருந்தது. மேலும் எதிர்வரும் 03 வருட அளவில் வரி இலாபம் அறிக்கையிடுவதற்கு தவறியிருக்குமாயின் பிற்போட்ட வரிச் சொத்துக்கள் குறைப்பதற்கும் அதனுடன் ஒப்பிடும் போது வரி செலவினம் பொருண்மையான அளவில் உயர்வடைந்து செல்வதன் மூலம் எதிர்வரும் நிதிக்கூற்றுக்களில் வரிக்குப் பின் இலாபத்தின் மூலம் கம்பனியின் உள்ளபடியான நிலைமையை காண்பிக்காமைக்கு இடமளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) நியமத்தின் 29.16 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் பிற்போட்ட வரிச் சொத்துக்களுக்காக கவனத்தில் கொள்ள வேண்டிய ஐயக்கடன் ரூபா 4.44 மில்லியனுக்குப் பதிலாக ஆண்டின் ஐயக்கடன் ஒதுக்கீடான ரூபா 53,168 கவனத்தில் கொள்ளப்பட்டதன் காரணமாக பிற்போட்ட வரி சொத்துக்கள் ரூபா 1.31 மில்லியனால் குறை கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணி மதிப்பீட்டு இலாபம் ரூபா 34.17 மில்லியன் ஆக இருந்த போதும் பிற்போட்ட வரிகளுக்கான கவனத்தில் கொள்ளப்பட்ட காணி மதிப்பீட்டு இலாபம் ரூபா 34.50 மில்லியன் ஆனமையால் பிற்போட்ட வரி பொறுப்புக்கள் ரூபா 99,692 இனால் மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஐ) கம்பனிக்கு சொந்தமான ரூபா 301.28 மில்லியன் பெறுமதியான கடல் மணல் உலர்த்தும் கட்டிடம் ரூபா 326.30 மில்லியன் தொகையில் அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு தாய் கூட்டுத்தாபனத்தின் மூலம் 2021 ஆம் ஆண்டின் போது கையேற்கப்பட்டிருந்தது. எனினும் கட்டிடத்தின் கிரயம் நீர் தேங்கி நிற்கும் தடாகத்தை உள்ளடக்கி ரூபா 331.02 மில்லியன் ஆக கம்பனி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதுடன் கட்டிடத்தின் பெறுமதி மாத்திரம் மதிப்பீட்டுப் பெறுமதியில் கழிக்கப்பட வேண்டி இருந்த போதும் மேற்குறிப்பிடப்பட்ட முழு மொத்தப் பெறுமதியும் மதிப்பீட்டுப் பெறுமதிக்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 25.03 மில்லியனால் கம்பனியின் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் குறைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

**1.2.3 இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்**

(அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01- நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்.

(i) நியமத்தின் 60 ஆம் பந்தியின் பிரகாரம் பொறுப்புக்கள், சொத்துக்கள் மற்றும் நடைமுறையல்லாததாக பிரிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும் காணி கைப்பற்றுவதற்காக செலுத்த வேண்டிய இழப்பீடாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 256.48 மில்லியன் நடைமுறையல்லாப் பொறுப்புக்களின் மாத்திரம் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நியமத்தின் 29 ஆம் பந்திக்கு முரணாக காணி இழப்பீட்டின் அடிப்படையில் செலுத்த வேண்டிய வட்டி ரூபா 123.69 மில்லியனும், நிதிக்கூற்றுக்களில் ஏனைய விடயம் அல்லது விடயம் ஆக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் கைப்பற்றப்பட்ட காணிக்காக செலுத்த வேண்டிய இழப்பீட்டின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 33 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர எந்தவொரு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் ஒப்பந்தக் கடன்கொடுத்தோருக்கும், வியாபாரக் கடன்கொடுத்தோருக்கும் மேலதிகமாக செலுத்தப்பட்ட மற்றும் முற்கொடுப்பனவுகள் முறையே ரூபா 15.18 மில்லியன் மற்றும் ரூபா 149.92 மில்லியன் மீதி ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக கடன்கொடுத்தோர் மீதி ரூபா 165.1 மில்லியனால் குறைக்கணிப்பீட்டிற்கு உட்டிட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 10 – அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பிந்திய விடயங்கள்

நியமத்தின் 8 ஆவது பந்தியின் பிரகாரம் அறிக்கையிடல் காலப்பகுதிக்குரியதாக இனங்காணப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் 2024 பெப்ரவரி 28 ஆந் திகதி கிடைத்த மதிப்பீட்டு அறிக்கையின் படி 2022 ஆம் ஆண்டின் ஒக்தோபர் 18 ஆந் திகதி தேறியிருந்த ரூபா 96 மில்லியன் பெறுமதியான காணி தொடர்பாக உள்நாட்டு இறைவரி சட்டத்தின் பிரகாரம் 2017 செப்தெம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு பெறுமதி ரூபா 66 மில்லியன் ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் செலுத்த வேண்டிய 30 சதவீதமான மூலதன இலாப வரி செலவினம் மற்றும் செலுத்த வேண்டிய வரி பெறுமதிகளுக்காக ரூபா 9.07 மில்லியன் ஒதுக்கீடு ஒன்றும் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 14 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 12 - வருமான வரி

நியமத்தின் 24 ஆம் பந்தியின் பிரகாரம் கழிக்கப்பட வேண்டிய தற்காலிக மாற்றங்களுக்குரிய பிற்போட்ட வரி சொத்துக்கள் இனங்காணப்படல் வேண்டும். அதன் பிரகாரம் வருமான வரி சட்டத்தின் பிரகாரம் இடமளிக்கப்படாத செலவினமான ஐயக்கடன் ஒதுக்கீடுகள் நிருவாக அசைவுறுகின்ற இருப்புக்களுக்கான ஒதுக்கீடுகள் போன்ற செலவினத்திற்காக இடமளிக்கின்ற செலவினமாக முறையே உள்ளபடியான அறவிட முடியாக் கடன், உள்ளபடியான இருப்பு பதிவழித்தல் காணப்படுகின்றமையால் கழிக்கக் கூடிய தற்காலிக மாற்றங்கள் உருவாகியிருந்ததுடன் அதற்குரிய பிற்போட்ட வரி சொத்துக்கள் இனங்காண வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 – ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

(i) நியமத்தின் 36 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்குரிய ஏதாவது விடயம் ஒன்று மீள்மதிப்பீடு செய்யப்படுமாயின் அந்த விடயத்திற்குரிய சொத்து வகுப்பும் மீள்மதிப்பீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் ரூபா 301.39 மில்லியன் பெறுமதியான வாகனங்கள் மாத்திரம் 2020 சனவரி மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாகக் காணப்பட்ட முறையே ரூபா 24.74 மில்லியன் மற்றும் ரூபா 26.47 மில்லியன் கிரயமான 160 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஜீப் வண்டி என்பன மீளாய்வாண்டின் போதும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பயன்தரு ஆயுட்காலம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக கிரயம் ரூபா 764 மில்லியன் ஆன 5675 சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்

தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றமையால் அந்த சொத்துக்களில் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 8 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 40 – முதலீட்டு சொத்துக்கள்

(i) நியமத்தின் 5 ஆவது பந்தியின் பிரகாரம் முதலீட்டு சொத்து ஒன்றில் இருந்து வாடகை உழைத்தல் அல்லது மூலதன பெறுமதியை அதிகரித்தல் அல்லது அந்த நோக்கங்கள் இரண்டிற்காகவும் வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் ஆகும். தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட 02 காணிகள் முதலீட்டுச் சொத்தாக இனங்காணப்படாமல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 79 (உ) பந்திக்கு முரணாக கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கிரயம் ரூபா 622.7 மில்லியன் ஆன 02 காணிகள் மற்றும் 04 கட்டிடங்கள் என்பவற்றின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 2017 யூலை 21 ஆந் திகதிய மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் பெறுமதி ரூபா 70 மில்லியன் ஆன சசக்காவா நம்பிக்கைப் பொறுப்பின் கட்டிடம் கூட்டுத்தாபனத்தால் முதலீட்டு சொத்தாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படாதிருந்தமையால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் அப்பெறுமதியால் குறை கணப்பீட்டுக்கு உட்பட்டிருந்ததுடன் அந்த கட்டிடத்திற்குரிய பெறுமானத் தேய்வு செலவினமும் இனங்காணப்படாமையின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் இலாபமும் மிகைக் கணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.

(ஊ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 08 – செயற்பாட்டு பொருட்கள்

நியமத்தின் 11 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தால் நிதிக்கூற்றுக்கள் பயனர்களுக்கு தாம் ஈடுபடுகின்ற வியாபார செயற்பாடுகளின் தன்மை மற்றும் நிதி தாக்கங்கள், அதனை அமுல்படுத்துகின்ற பொருளாதார சூழல் என்பவற்றை மதிப்பீடு செய்யக்கூடிய பிரகாரம் தமது ஒவ்வொரு செயற்பாட்டு பிரிவுகள் தொடர்பான தகவல்களும் தனித்தனியாக அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் பேணிச் செல்லப்படுகின்ற செயற்பாடுகளுக்கு இடையே பிரதான பிரிவை இனங்கண்டு நியமத்தின் பிரகாரம் தனித்தனியாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

(எ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 13 – நியாயமான பெறுமதியை அளவிடல்

நியமத்தின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி அறிக்கையிடல் நோக்கத்திற்காக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் முதலீட்டுச் சொத்துக்கள் மற்றும் பயன்தரு உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள் பெறுமதி இடல் தகைமை பெற்ற மதிப்பீட்டாளரினால் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் முதலீட்டுச் சொத்துக்கள் மீள் மதிப்பீடு செய்யும் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 12,571.7 மில்லியன் பெறுமதியும் சரியான தன்மை கணக்காய்வில் பிரச்சனைக்குரியதாக இருந்தது.

(ஏ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 15 – வாடிக்கையாளர்களுடன் உடன்படிக்கை செய்கின்ற முறை

(i) கூட்டத்தாபனம் ஒன்றினால் அமுல்படுத்தப்படுகின்ற செயற்திட்டங்களுக்குரிய (Own Project) உரிய பட்டியல்களை உறுதிப்படுத்தும் போது கூட்டுத்தாபனத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டமையால் ரூபா 98.74 மில்லியன் ஆற்றப்பட்ட வேலை சான்றிதழ்களின் சரியான தன்மை மற்றும் பக்கச் சார்பற்ற தன்மையை கணக்காய்வின் போது பிரச்சனைக்குரியதாக இருந்தது.

(ii) நியமத்தின் (ஆ) அத்தியாயத்தின் - 16 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனம் ஒன்றுக்கு பட்டியல் இடுவதற்கு விடயம் ஒன்றில் உள்ள பெறுமதி நிறுவனத்தின் வருமானமாக இனங்காண முடியும். எனினும் கூட்டுத்தாபனதால் ஒப்பந்த வருமானத்தை இனங்காண்பதற்காக செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல் (Interning Payment Certificate) வாடிக்கையாளர்களினால் உறுதிப்படுகின்ற சந்தர்ப்பம் வரையில் வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட 45 செயற்திட்டங்களுக்குரிய பட்டியல்களைப் பரீட்சித்த போது ரூபா 140.0 மில்லியன் குறைவாகவும், ரூபா 351.72 மில்லியன் அதிகரித்தும் வருமானத்தில் இனங்காணப்பட்டமையால் அதனிடையே வேறுபாடான ரூபா 211.71 மில்லியனால் ஒப்பந்த வருமானம் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(iii) நியமத்தின் 107 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 9 இன் பிரகாரம் உடன்படிக்கை சொத்து ஒன்றின் உடன்படிக்கை ஒன்றிற்காக அளவிடல், சமர்ப்பித்தல் மற்றும் வெளிப்படுத்துதல் நிதிச்

சொத்துக்கள் மற்றும் சமமான அடிப்படையில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் சேவைப் பங்களிப்பு நிறுவனத்தால் உறுதிப்படுத்தப்பட்ட பட்டியல் பெறுமதியில் 90 சதவீதம் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி 10 சதவீதம் தொடர்பான வெளிப்படுத்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிச் சொத்துக்கள் இழப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நியமத்தின் 16 ஆம் பந்தியின் பிரகாரம் பட்டியல் இடுவதற்கு விடயமொன்று கூட்டுத்தாபனத்திற்கு இன்றி 2022 ஆம் ஆண்டில் பாதீட்டு நிதியேற்பாட்டின் வரையறை விஞ்சி மேற்கொள்ளப்பட்ட ரூபா 457.08 மில்லியன் பெறுமதியான வேலைகளின் பெறுமதி மீளாய்வாண்டில் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அப்பெறுமதியால் மீளாய்வாண்டின் வருமானம் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(ஐ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 16 – குத்தகை

பெரும்பாக கொழும்பு வெள்ள நீர் கட்டுப்படுத்துதல் மற்றும் சுற்றாடலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கையினால் நிர்கதிக்கு உட்பட்டமைக்காக 2001 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட கொலன்னாவையில் அமைந்துள்ள சுதுநெலும்புர இல் 144 வீடுகள், கையளித்தல் பத்திரத்தின் மூலம் நிர்கதியானவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட கிரயம் ரூபா 86.1 மில்லியன் ஆக இருந்ததுடன் இந்தப் பெறுமதியை கணக்கு வைத்தல் நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மொத்த கடன் பட்டோர் பெறுமதி மற்றும் அதற்குரிய வட்டி வருமானம் தனிதனியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதிலும் வீட்டு நலனாளிகளிடம் இருந்து அறிவிட வேண்டிய ரூபா 35.83 மில்லியன் பெறுமதி கடன் பட்டோர் மற்றும் ஏனைய வருமானமாக நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்தது.

(ஒ) கூட்டுத்தாபனத்திற்கு விடுவித்தல் நிறுத்தி வைக்கும் அடிப்படையில் (Free Hold Basis) அரசாங்கத்தினால் வழங்கப்பட்டிருந்த முத்துராஜவலையில் அமைந்துள்ள 02 ஏக்கர் அளவான காணிக்காக அமப/19/2832/16/11 ஆம் இலக்க மற்றும் 2019 ஒக்தோபர் 29 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அதற்காக செலவிடப்பட்ட அபிவிருத்தி செலவினத்தை அறவிட்டு மிகுதி தொகை அரசாங்கத்தின் திறந்த நிதியத்தில் செலவு வைக்குமாறு அறிவித்திருந்த போதிலும் 2019 திசெம்பர் 17 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்ட ரூபா 272.62 மில்லியன் பெறப்பட்டிருந்த போதும் செலவிடப்பட்ட அபிவிருத்தி செலவினம் ரூபா 21.02 மில்லியன் குறைக்கப்பட்டு திரண்ட நிதியத்தில் செலவு வைக்க வேண்டிய ரூபா 251.60 மில்லியன் தொகை 2024 மே வரையும் செலவு வைக்கப்படாதிருந்ததுடன் அந்த பொறுப்புக்களை இனங்கண்டு அதற்காக கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் ஒதுக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ரூபா 6.23 மில்லியன் பெறுமதியான Electronic Document Management System (EDMS) முறைமை கற்பனைச் சொத்தாக இனங்காணப்படாமல் நடைமுறை மூலதன வேலையின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) காணிப் பிரிவினால் கடந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலையின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணி மற்றும் முதலீட்டுச் சொத்துக்களில் 1075 ஏக்கர் 29.21 பேர்ச் ஆக இருந்ததுடன் மீளாவாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட காணி மற்றும் முதலீட்டுச் சொத்துக்கள் 66 ஏக்கர் 03 றூட் 5.13 பேர்ச் ஆனமையால் 1008 ஏக்கர் 01 றூட் மற்றும் 24.8 பேர்ச் காணி நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(க) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான முத்துராஜவலையில் அமைந்துள்ள 22 ஏக்கர் 02 றூட் 37.14 பேர்ச் அளவான நிலப்பகுதி மற்றும் 55900 சதுர அடி அளவான கட்டிடம் ரூபா 2,195.79 மில்லியன் வாடகை தொகையில் தனியார் கம்பனிக்கு 50 வருட நீண்ட கால வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு 2021 யூன் 02 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் அதற்காக தனியார் கம்பனியால் ரூபா 500 மில்லியன் முற்பணத் தொகை ஒன்று 2021 யூன் 03 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. காணி தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்ட திகதியில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையும் எந்த ஒரு வருமானமும் நிதிக்கூற்றுக்களில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பேரளவு வாடகையான ரூபா 0.33 மில்லியனையும் உள்ளடக்கி மீளாய்வாண்டின் வாடகை வருமானம் ரூபா 44.24 மில்லியனும் நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக் கணக்கு ரூபா 69.94 மில்லியனாலும் குறைவாக இருந்தது.

(கா) கூட்டுத்தாபனத்தின் வாடகை வருமானம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் குறுங்கால வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட காணிகளில் இருந்து மீளாய்வாண்டிற்கு உரிய 4 காணிகளில் ரூபா 9.56 மில்லியன் குறைவாக வாடகை வருமானம் இனங்காணப்பட்டதன் காரணமாக வாடகை வருமானம் ரூபா 9.56 மில்லியனால் குறை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு மீளாய்வாண்டின் இறுதி வரையில் ஒரு குத்தகை வாடிக்கையாளரிடம் இருந்து ரூபா 12.41 மில்லியன் வாடகைத் தொகை கிடைக்க வேண்டியதாகக் காணப்பட்ட போதும் கூட்டுத்தாபனம் அப்பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் இனங்காணாமையின் காரணமாக கடன்பட்டோர் அப்பெறுமதியால் குறை கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது.

(கி) கூட்டுத்தாபனத்திற்கு 2023 செப்தெம்பர் 13 ஆந் திகதி நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியகொள்கைகள் அமைச்சில் இருந்து கிடைத்த இலக்கம் PED/A/Rev-L/1/15(ii) என்ற கடிதத்தின் பிரகாரம் ரூபா 750 மில்லியன் பெறுமதி ஒன்று திரண்ட நிதியத்தில் செலுத்த வேண்டியதாக தீர்மானிக்கப்பட்டதுடன் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தால் ரூபா 500 மில்லியன் மாத்திரம் செலுத்தப்பட்டதுடன் மிகுதி ரூபா 250 மில்லியன் நடைமுறைப் பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாமையின் காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமதியால் குறைகணிப்பீட்டுக்கு உட்பட்டிருந்தது.

(கீ) கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டிற்குரிய மூலதன படிகள் கணிப்பிடும் போது அதற்குரியதாக தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் ஆண்டுக்குரிய மூலதன படிகளை ஒன்று சேர்க்கும் போது எதிர்காலத்தில் அறவிடக்கூடிய மீதிகள் சேர்க்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் மூலதனப் படிகள் ரூபா 134.02 மில்லியனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டமையால் அதன் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட 30 சதவீத வரி செலவினம் ரூபா 40.26 மில்லியனால் குறைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(கு) கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது சமூகப் பொறுப்புக்களுக்கான செயற்பாடுகள் (CSR) இற்காக செலவிடப்பட்ட ரூபா 2.49 மில்லியன் வருமான செலவினம் ஒன்று இருப்புக் கணக்கில் நடைமுறை வேலையாக இனங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமதியால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க நான் கணக்காய்வை மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

**1.3 கூட்டுத்தாபனத்தின் 2023 இன் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏனைய தகவல்கள்**

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்குப் பின்னர் எனக்கு கிடைக்க பெறும் என எதிர்பார்க்கின்ற கூட்டுத்தாபனத்தின் 2023 இன் வருடாந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள போதும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பாக எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என கருதப்படும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்கியிருக்காததுடன் நான் அவை மீது எவ்வகையிலும் சான்றுப்படுத்தும் முடிவுரையினை வெளிப்படுத்தவில்லை.

நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பானது மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்களை நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது ஏனைய வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட எனது அறிவின் பிரகாரம் பொருண்மையாக பொருத்தமற்றுள்ளதா என்பதனை கவனித்துப் பார்ப்பதாகும்.

இந்த கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்ட செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஏனைய தகவல்கள் பொருண்மையாக பிழையாகக் காட்டப்பட்டுள்ளது என நான் முடிவு காண்பதானது அந்த விடயங்களை என்னால் அறிக்கையிடுவது அத்தியவாசியமானது என்பதனாலாகும். இது தொடர்பில் எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவும் இல்லை.

**1.4 நிதிக்கூற்றுக்கள் மீது முகாமைத்துவத்தினதும் நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தும் சரியாகவும் நியாயமாவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தலும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனம் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான இயலுமையினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமாக வெளிப்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளதுடன் கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாதுவிட்டால் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்து செயற்படும் கணக்கீட்டு அடிப்படையினை பயன்படுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான மேற்பார்வை நிருவகிக்கின்ற தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அனைத்து வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறைப்படியாக ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக தாக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது தொழில்சார் தீர்ப்புக்களை மேற்கொண்டு தொழில்சார் ஐயப்பாட்டினை பேணுகிறேன். மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளல். தவறாகக் காட்டுவது காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஏற்படும் ஆபத்தின் விளைவானது அதிகமாகும்.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புபட்ட வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீது பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது சம்பந்தமாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மீதான அடிப்படையினை பயன்படுத்துதலின் பொருத்ததன் தன்மை தீர்மானிக்கப்பட்டது. போதியளவான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் முடிவு செய்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையல்லாததாக எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. அபிப்பிராயம் திருத்தப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகள் நிலைமைகள் மன்றத்தின் தொடர்ச்சியாக நிலைத்திருத்தலை முடிவுறுத்த நேரிடலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கல்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

- ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றைத் தெரிவிப்பதற்காக தொகுதியில் உள்ள நிறுவனம் அல்லது வியாபார செயற்பாடுகளின் நிதித் தகவல்கள் தொடர்பாக போதியளவான பொருத்தமான கணக்காய்வு சான்றுகள் பெறப்பட்டிருந்தது. தொகுதியின் கணக்காய்வு செயற்பாடுகள், மேற்பார்வை மற்றும் செயலாற்றலுக்காக நான் பொறுப்பாக இருத்தல் வேண்டும். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக முழுப் பொறுப்பும் எனக்குரியதாகும்.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு காண்புகள், மற்றும் உள்ளடக்கப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது பலவீனங்கள் தொடர்பாக நிருவகிக்கப்படுகின்ற தரப்பினர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன்.

**2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் வெளிப்படுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எனது பரிசோதனையிலிருந்து தோன்றும் வகையில் முறையான நிதி அறிக்கைகளை கூட்டுத்தாபனம் பேணி வந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் 1.2.2 (அ) (i), (ஈ) (i), (ii), (உ) (i), (ii), (ஊ), (எ), (ஏ) (i), (ஐ), (ஒ), (ஓ), (ஔ) பந்திகளில் காண்பிக்கப்பட்ட அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2 பின்பற்றப்பட்ட நடைமுறைகள் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகள் பொருண்மையான விடயங்களுக்கான மட்டுப்பாடுகளுக்குள் காணப்பட்டன. எனினும் வேறு, எதுவும் எனது கவனத்திற்கு உட்பட்டிருக்கவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் நிர்வாக சபையின் ஏதேனுமொரு அங்கத்தவருக்கு கூட்டுத்தாபனம் சம்பந்தப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ வழமையான வணிக செயற்பாடுகளுக்குப் புறம்பாக தொடர்புகள் உள்ளது என.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க ஏதாவது தொடர்புபட்ட எழுத்திலான சட்டங்களுக்கு அல்லது கூட்டுத்தாபனத்தின் நிருவாக சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகாதிருந்தது என.

| சட்டங்கள், விதிகள் / ஏற்பாடுகளுடனான தொடர்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 94 | வருடாந்த மதிப்பீடுகளின் நிதியேற்பாடு இருக்குமாயின் எந்த ஒரு வேலை அல்லது சேவை வழங்கல்களுக்காக செலவினம் ஒன்று அல்லது கடப்பாடு ஒன்றோ ஏற்படுத்த முடியாதிருந்ததுடன் ஆண்டின் நிதியேற்பாடு எல்லையை விஞ்சாதிருத்தல் வேண்டும். அவ்வாறே குறித்துரைத்த ரீதியில் நிதி செலுத்தப்படுகின்ற காலம் வரையில் தேவையான அதிகார பலம் இல்லாதிருக்குமாயின் மேலதிக நிதியேற்பாடு பெறும் எதிர்பார்ப்பில் செலவினம் அல்லது பொறுப்புக்களில் ஈடுபடமுடியாதிருந்த போதும் கடந்த ஆண்டில் 03 செலவின விடயங்களில் ரூபா 457.08 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டில் 04 செலவின விடயங்களில் ரூபா 196 மில்லியன் வருடாந்த நிதி ஏற்பாட்டு எல்லையை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப்பிரமானம் 103, 104 மற்றும் 110 | 2021 யூலை 22 அந் திகதி PH – 4457 ஆம் இலக்க மோட்டார் வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்துத் தொடர்பாக உரிய அதிகாரத் தரப்பினருக்கு அறிக்கையிடப்படாதிருந்ததுடன் குறித்துரைத்த பிரகாரம் பரிசோதனைகள் நடாத்தி ஆரம்ப மற்றும் முழுமையான அறிக்கை வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அரசாங்கத்தின் ஆதனங்களுக்கு நட்ட இழப்புக்கள் ஏற்பட்டமை பதிவேடுகளில் உள்ளடக்க வேண்டிய போதிலும் இந்த விபத்துத் தொடர்பாக அவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 | |
| (i) | வழிகாட்டிக் கோவையின் 7.5 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்தால் மாதாந்த, மும்மாத மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை உரிய படிவத்தின் பிரகாரம் வரிசை அமைச்சு மற்றும் பொதுத் திறைசேரிக்கு அனுப்ப வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | கைநூலின் 3.2 ஆம் பந்தி | சகல நிறுவனங்களினாலும் படிகளுக்கான கோரிக்கைகள் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியுடன் உரிய நிறுவனத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் கூட்டுத்தாபனத்தால் 03 காலப்பகுதியின் கீழ் அந்த ஒவ்வொரு காலப்பகுதியின் போதும் 50 சதவீத படி அதிகரிக்கின்ற வகையில் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் தொழிற்தகைமைப் படி செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட தொழிற்தகைமைப் படிகளின் கூட்டுமொத்தம் ரூபா 7.91 மில்லியன் ஆகும். |
| (iii) | கைநூலின் 7.7 ஆம் பந்தி | தாய் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அதன் துணை கம்பனிகளின் செயலாற்றலை மேற்பார்வை செய்வதற்காக வசதியான திட்டம் இடப்பட்ட கட்டமைப்பு ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அது 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியிருத்தல் வேண்டும். பணிப்பாளர் சபை துணை நிறுவனங்களின் செயலாற்றல் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று ஆகக் குறைந்தது காலாண்டுக்கு ஒரு தடைவ மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் போதியளவான முதலீட்டின் அடிப்படையில் நலன்கள் உரித்தாகின்றமையை உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதும் கூட்டுத்தாபனத்தால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 04/2022 | |
| (i) | 2.7 ஆம் பந்தி | சமுதாயப் பொறுப்புக்களுக்கான செயற்பாடுகள் (CSR) விழா நடவடிக்கைகள் போன்ற செலவினங்களைக் கைவிடுவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாயின் உரி அமைச்சரின் அங்கீகாரம் மற்றும் இணக்கப்பாடு மாத்திரம் பெற வேண்டி இருந்த போதும் அதற்கு |

| | | |
|---|---|---|
| | | முரணாக கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் போது சமூக பொறுப்புக்களுக்கான செயற்பாடுகள் (CSR) நோக்காகக் கொண்டு ரூபா 3.32 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. |
| (ii) | 2.9 ஆம் பந்தி | உள்நாட்டு நிதியத்தை செலவிட்டு மேற்கொள்ளப்படுகின்ற வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா செலவினங்கள் கைவிட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது வெளிநாட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்காக உள்நாட்டு நிதியத்தில் இருந்து ரூபா 1.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய இலக்கம் 01/2018 என்ற வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை சுற்றறிக்கையின் 9.6 ஆம் பிரிவு | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு தாம் பதவி வகிக்கின்ற பதவிகளின் பிரகாரம் வரிச் சலுகை வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழங்க வேண்டிய விசேட வரப்பிரசாதத்தின் அடிப்படையில் மோட்டார் வாகனங்களைப் பெற்ற கூட்டுத்தாபனத்தின் 12 உத்தியோத்தர்களுக்கு அந்த மோட்டார் வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வழங்கப்பட்ட வங்கிக் கடன் தொகையில் உரிய வட்டியில் 2/3 பகுதி அதாவது மீளாய்வாண்டின் இறுதி வரையில் 2.41 மில்லியன் திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் மாத்திரம் மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (உ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட இலக்கம் 01/2021 என்ற சுற்றறிக்கையின் 2.3 ஆம் பந்தியின் படிவம் 1 | ஐந்து வருட காலப் பகுதிக்காக கூட்டிணைந்த திட்டம் ஒன்று கூட்டுத்தாபனத்தால் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 - 2024 காலப்பகுதிக்காக மாத்திரமாக கூட்டுத்தாபனத்தால் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த திட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்ட சட்டத்தின் மூலம் கையளிக்கப்பட்ட பணிப்பொறுப்புக்களான நாடு முழுவதும் அமைந்துள்ள புரனண்நிலங்கள், சதுப்பு அல்லது சேற்றுநிலக் காணிகள் இனங்கண்டு அனுமதியற்ற நிலமீட்டல்களை கட்டுப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்யக்கூடிய வகையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்துதல் மற்றும் வாய்க்கால் ஓரங்கள் போன்ற காணிப் பிரதேசங்கள், வாய்கால் ஒதுக்கப் பிரதேசமாக இனங்கண்டு அந்த ஒதுக்கப் பிரதேசத்தில் தற்காலிக அல்லது ஏனைய நிர்மாணங்களைத் தடுக்கும் வகையில் வர்த்தமாணி அறிவித்தலின் மூலம் பகிரங்கப்படுத்தல் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் கூட்டிணைந்த திட்டத்தில் இனங்காணப்பட்ட உபாய வழிகளை அடைந்து கொள்வதற்கு கூட்டுத்தாபனம் போதியளவான நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் இனங்காணப்பட்ட பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள் (KPI) இன் பிரகாரம் அடைந்து கொள்ளப்பட்ட செயல் முன்னேற்றத்தை மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உரிய காலப்பகுதிக்குரிய எதிர்வு கூறப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடங்கியிருக்கவில்லை. |
| (ஊ) | 2007 மார்ச் மாதம் விநியோகிக்கப்பட்ட தேசிய பெறுகைகள் நிறுவனத்தினால் ஆலோசனையாளர்களை தெரிவு செய்தல் மற்றும் சேவையில் | கூறுவிலை கோரப்படாமல் “கரையோர கடற்பரப்பில் மணல் அகழ்தல் மற்றும் உந்தித் திட்டம்” இற்காக கேள்வி ஆவணங்கள் தயாரிப்பதற்கு ரூபா 7.5 மில்லியன் தொகையில் ஆலோசனையாளர் ஒருவரை நியமிப்பதற்காக பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | ஈடுபடுத்துதல் தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 04 ஆம் அத்தியாயம் | கூட்டுத்தாபனம் மற்றும் ஆலோசனையாளருக்கு இடையே எழுத்துமூல உடன்படிக்கை கையொப்பம் இடப்படாதிருந்ததுடன் ஆலோசனையாளருக்கு விநியோகிக்கப்பட்ட ஏற்றுக் கொள்ளல் கடிதம் (Letter of Acceptance) இரு தரப்பினருக்கு இடையே உடன்படிக்கையாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2023 நவம்பர் 10 ஆந் திகதி வரையில் ரூபா 4.75 மில்லியன் ஆலோசனையாளருக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| (எ) | 2023 ஏப்ரல் 06 ஆந் திகதிய இலக்கம் SEC/2023/E/02 என்ற உள்நாட்டு இறைவரி ஆணையாளரால் விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கையின் 3(அ) பிரிவு | சேவைப் பங்களிப்பாளரால் மோட்டார் வாகனம் வழங்கப்படும் இடத்து வாகனம், சாரதி, எரிபொருளுக்காக முறையே ரூபா 20,000 தொகை, ரூபா 10,000 மற்றும் ரூபா 20,000 ஆக நலன்கள் மதிப்பீடு செய்யப்பட்டு முற்பணம் தனியார் வருமான வரி (APIT) ஆக ஊழியரின் சம்பளத்தில் இருந்து கழிக்க வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் தலைவரை உள்ளடக்கிய பிரதி பொது முகாமையாளர் உத்தியோகத்தர்களுக்காக கூட்டுத்தாபனத்தால், சாரதி மற்றும் எரிபொருள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தனிநபர் வரி (APIT) கழிக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. |
| (ஏ) | 2022 திசெம்பர் 28 ஆந் திகதிய இலக்கம் 2312/16 என்ற அதிவிசேட வர்த்தமானி | தனிநபர் முற்பண வரி 2023 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டிருந்த போதும் பணிப்பாளர் சபை அங்கவத்தர்களுக்காக தனிநபர் முற்பண வருமான வரி அறவிடுதல் 2023 செப்தெம்பர் மாதம் முதலே அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு 2023 ஆம் ஆண்டின் சனவரி, பெப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களுக்காக (APIT) கழிக்கப்படாமல் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஐ) | 2015 மே 25 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED 1/2015 இன் 3.5 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகனம் ஒன்று ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் மற்றும் போக்குவரத்துப் படி பெறுகின்ற உத்தியோகத்தர்கள் குழாம் வாகனம் அல்லது ஏனைய அலுவலக வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு உரித்தில்லாதிருந்த போதிலும் முன்னால் இருந்த கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு வாகனம் ஒன்று ஒதுக்கப்பட்டிருக்கும் போது அதற்கு மேலதிகமாக PH-4457 என்ற இலக்க வாகனம் விபத்திற்கு உட்பட்ட வாகனம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே நிதிப்பிரமாணம் 1641 இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் கவனமின்மையால் அல்லது முறையற்ற பயன்பாட்டினால் அல்லது வாகனங்களுக்கு நட்டம் ஏற்படுமாயின் வாகனங்களின் பெறுமதி குறையுமாயின் அரசாங்கத்திற்கு அந்த நட்டத்தை செலுத்துமாறு அவர்களுக்கு பணிக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் இந்த வாகனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை தீர்த்துக் கொள்வதற்கு கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

தேசிய அரச சபையின் 1976 இன் 27 ஆம் இலக்க கொழும்பு மாவட்டத்தின் (தாழ் நில பிரதேசங்கள்) நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் சபை (திருத்த) சட்டத்தின் 4 (ஆ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்திற்குச் சொந்தமாகக் கிடைத்த ஏதாவது காணி ஒன்றை விற்பனை செய்கின்ற சந்தர்ப்பத்தில் நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் விசாரணை

செய்து அமைச்சரால் தீர்மானிக்கப்படுகின்ற நில மீட்டுவதற்கு முன்னர் அந்தக் காணியின் பெறுமதி கூட்டுத்தாபனத்தால் அந்த சந்தர்ப்ப சூழ்நிலையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் அல்லது காணி ஆணையாளருக்கு செலுத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்பட்ட காணி 321 ஏக்கர் 3.03 பேர்ச் இற்குரிய ரூபா 58.25 மில்லியன் தொகை உரிய தரப்பினருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்கள் தவிர கூட்டுத்தாபனத்தின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் உரிய சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

(அ) வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாடு ஒதுக்கிக் கொள்ளாமல் 2020 திசெம்பர் 15 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட அத்துருகிரிய கொத்தலாவ அதிவேக வீதியில் உள்ளக இடமாறல் சார்ந்த வரிசை பூங்கா ஒன்றை நிர்மாணித்தல் மற்றும் நீர் வடிகாலமைப்பினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்திற்காக நிதி ரூபா 195.03 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக திறைசேரி நிதியேற்பாடு அங்கீகரித்துக் கொள்ளும் நோக்கில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பிற்காக அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரையின் படி செயற்திட்ட முன்மொழிவிற்காக விரிவான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டு வரை ரூபா 3.06 மில்லியன் மாத்திரம் பராமரிப்புச் செலவினம் ஒன்றை செலவிடுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உயர் முகாமைத்துவத்தின் விருப்பத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான செயற்திட்டத்தின் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்த செலவினம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அந்த நட்டத்தை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1981 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தால் கையேற்கப்பட்ட காணிகளுக்குரிய இழப்பீட்டுப் பணம் செலுத்தும் நடவடிக்கைகள் தாமதமடைந்ததன் காரணமாக அந்தக் காணிக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூபா 73.02 மில்லியன் ஆக இருந்ததுடன் அதற்குரிய செலுத்த வேண்டிய வட்டி ரூபா 123.69 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி வரையில் செலுத்த வேண்டிய வட்டி கடந்த ஆண்டினை விட ரூபா 5.16 மில்லியனால் அதிகரித்திருந்தது. அவ்வாறு காணி கையேற்பதற்காக 14 வருடங்கள் முதல் 40 வருடங்கள் வரையிலான கால வீச்சு எடுத்ததன் காரணமாக இந்தக் காணிகளில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களில் இருக்கின்றமை மேலதிகமாக அதிகரித்திருந்தமை மேலும் வெளிப்படுத்தப்பட்டது.

(இ) கணனி, பியகம, வத்தளை மற்றும் பேலியகொட பிரதேச செயலக பிரிவுகளில் மேற்கொள்ளப்படுகின்ற நீர் வழிந்தோடல்களின் போது அந்த பிரதேசத்தில் குடியிருக்கின்ற 155,000 அளவிலான மக்களுக்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கும் ஏற்படுகின்ற பாதுகாப்பு, சுற்றாடல், சமூக இழப்புக்களை குறைக்கும் நோக்கில் செயற்திட்டக் கிரயம் ரூபா 3,000 மில்லியன் ஆன முதுன் எல அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் திறைசேரி நிதியேற்பாட்டின் கீழ் 2016 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்பில் கூட்டுத்தாபனத்தால் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு வேலை பூர்த்தி செய்வதற்கு தவறியதன் அடிப்படையில் இந்த செயற்திட்டம் 2025 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகளுக்காக காணி கையேற்றலின் காரணமாக வீட்டு உரிமையாளர்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபை நிர்மாணித்த 164 வீடுகளை வழங்குவதற்கு ரூபா 600 மில்லியன் தொகை 2017 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் 138 வீடுகள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் மிகுதியாக இருந்த 26 குடும்பங்களுக்காக 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் புதிய வீடுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2020 ஆம் ஆண்டின் இறுதி வரையில் பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்பில் கட்டம் I மற்றும் II ஆக ஒளியமுல்லையில் 02 நீர் பம்பிக்கூடங்களை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் கட்டம் II பம்பிக் கூடத்தை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் 2018 மார்ச் 26 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்த நிர்மாண நடவடிக்கைகளில் நிதி மற்றும் பௌதீக செயல் முன்னேற்றம் முறையே 78.9 சதவீதம் மற்றும் 74 சதவீதம் மாத்திரம் ஆக இருந்தது.

(iii) எனினும் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்திற்காக தேவையான பம்பிகள் மற்றும் எஞ்சின் பம்பிக் கூடத்தில் வேலை பூர்த்தி செய்வதற்கான இறுதிக் கட்டத்தின் போது அதற்குரிய மற்றும் அதற்கு ஈடு கொடுக்கும் வகையில் கொள்வனவு செய்ய

வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் பம்பிக் கூடம் நிர்மாணிப்பதற்கு முன் பம்பிக்கூடம் நிர்மாணிக்கப்பதற்குள்ள தொகையில் 2018 மார்ச் 12 ஆந் திகதி ரூபா 95.48 மில்லியன் பெறுமதி உடைய நீரில் பயன்படுத்தும் 02 பம்பிகள் (Floating pump 16 VL), 02 நடமாடும் பம்பிகள் (Mobil Pump) மற்றும் இறப்பர் ஹோர்ஸ் (20 Ruber Flex Hose) கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அந்த இயந்திர உபகரணங்கள் ஒளியமுள்ள நீர் பம்பிக் கூடத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2018 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ரூபா 82.90 மில்லியன் பெறுமதியான 02 நீர்ப் பம்பிகள் மற்றும் 2020 சனவரி 08 ஆந் திகதி ரூபா 24.1 மில்லியன் பெறுமதியான 02 எஞ்சின்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(iv) 2018 ஆகஸ்ட் 20 ஆந் திகதி ரூபா 82.90 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட 5M/3/S நீர்ப்பம்பிக் கூடம் இரண்டும் கணக்காய்வுத் திகதி வரையிலும் 06 வருடங்கள் முழுவதும் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கான உற்பத்தி நிறுவனம் வழங்கிய 02 உத்தரவாத காலமும் கணக்காய்வுத் திகதி வரையில் விஞ்சியிருந்ததுடன் வழங்குளர் நிறுவனத்தால் கணக்காய்வுத் திகதி வரையில் பம்பிகளுக்குரிய நிலுவை செலுத்துதல் தொடர்பாக ரூபா 153.03 மில்லியன் மேலதிக கட்டணம் ஒன்று கோரி பிணக்குகள் தீர்க்கும் வழக்கு ஒன்று தொடரப்பட்டிருந்தது. இதன் காரணமாக பம்பிக் கூடத்தின் நடவடிக்கைள் மேலும் தாமதமடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(v) ரூபா 24.1 மில்லியன் பெறுமதி உடைய 02 எஞ்சின்களை கொள்வனவு செய்வதற்கு 2019 யூன் 28 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை செய்து 06 மாத காலத்தில் உரிய வழங்குனரால் எஞ்சின்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இதுவரையில் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் குறைவாகக் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 1968 இன் 15 ஆம் இலக்க இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபன சட்டத்தின் 2(ஆ) 1 ஆம் பிரகாரம் நாடு முழுவதும் மாகாண மட்டத்தில் அமைந்துள்ள புரன்நிலங்கள் சதுப்பு மற்றும் சேற்றுக் காணிகளை இனங்கண்டு அனுமதியற்ற நில மீட்டல்களை கட்டுப்படுத்துதல் மேற்பார்வை செய்யக்கூடிய வகையில் அவற்றை வர்த்தமானி அறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரம் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்தால் அவ்வாறு வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்ட மாகாணங்களின் எண்ணிக்கை 07 இற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. எல்லைகளை வர்த்தமாணியில் இட்டு அந்த காணி பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அனுமதியற்ற நிலமீட்டல் மற்றும் அனுமதியற்ற குடியிருப்புக்களை தடுப்பதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. அவ்வாறே 8(அ) ஆம் பிரிவின் பிரகாரம் நிலம் ஈட்டல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு கையளிக்கப்படுகின்ற காணி , கூட்டுத்தாபனத்தால் கட்டங்களை நிர்மாணிப்பதற்கு , கைத்தொழில் வணிகம் மற்றும் தொழில் நுட்ப விவசாய நடவடிக்கைகளுக்கா அபிவிருத்தி செய்ய வேண்டி இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் அவ்வாறே 1995 ஆம் ஆண்டின் போது அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கையேற்கப்பட்ட முத்துராஜவல மற்றும் முதுன்எல பிரதேசங்களில் காணிகள் 800 ஏக்கர் அளவில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 28 வருடகாலம் வரை கடந்திருந்த போதிலும் அதில் அபிவிருத்தி செய்யப்பட்ட அளவு 400 ஏக்கர் அதாவது 50 சதவீதமான கீழ் மட்டத்தில் காணப்பட்டது.

(உ) கூட்டுத்தாபனம் 2010 யூலை 14 ஆம் திகதி விநியோகித்த இலக்கம் 1662/17 என்ற வர்த்தமாணி அறிவித்தலின் பிரகாரம் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள வாய்க்கால் வழிகளில் பாதுகாப்பு பிரதேசக் காணி (Reservation) பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மேற்கூறப்பட்ட வர்த்தமாணி அறிவித்தல் விநியோகிக்கப்பட்டு 13 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அந்த ஒதுக்கப் பிரதேச காணிகளை இனங்காண்பதற்கு ஒதுக்கப் பிரதேச காணிகளில் குடியிருக்கின்ற அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நியாயமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) உடன்படிக்கை செய்யப்படாமல் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய கிம்புலாவல இல் அமைந்துள்ள காணி கூட்டுத்தாபனத்தால் நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச்சாலை வாடகை அடிப்படையில் தனியார் கம்பனிக்கு 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. எனினும் அந்த சிற்றுண்டிச் சாலை அமைந்துள்ள காணிப் பிரதேசம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குரிய காணியாக இருந்தமையால் கூட்டுத்தாபனத்திற்கு சிற்றுண்டிச்சாலையில் உரித்து இருந்த போதும் காணியின் உரித்து காணப்படாமையினால் ரூபா 24.58 மில்லியன் ஆன வாடகைத் தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.

(எ) நிர்மாணக் கைத்தொழிலுக்காக மணல் வழங்குவதற்காக கரையோர பிரதேசத்தில் அமைந்துள்ள கடல் மணல் கியூப் மீற்றர் 4 மில்லியன் அகழ்தல் மற்றும் பம்பி இடுவதற்காக கூட்டுத்தாபனம் 2018 ஆம் ஆண்டின் போது வெளிநாட்டுத் தனியார் கம்பனியுடன் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. எனினும் உடன்படிக்கை செய்யப்பட்ட விடயப்பரப்பு பூர்த்தி செய்வதற்கு முன்னர் நியாயமான காரணம் இன்றி உயர் முகாமைத்துவத்தால் தமது விருப்பத்தின் பிரகாரம் 2020 ஏப்ரல் 10 ஆம் திகதி செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. அதன் போது உடன்படிக்கை மீறியதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு செலவிட வேண்டி ஏற்பட்டிருந்த நிதி ரீதியான நட்டம் தொடர்பாக கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்திற்காக செலவாகின்ற மேலதிக கிரயம், ஒப்பந்தகாரால் நிறைவேற்ற வேண்டிய

பணிகள் தொடர்பாக உடன்படிக்கை நிபந்தனையின் போது ஒப்பந்தகாரருக்கு உரிய பிரகாரம் ஆலோசனை வழங்காமை, ஒப்பந்தகாரருடன் நடைபெற்ற எழுத்து மூல உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர் இன்னுமொரு செயற்திட்டத்திற்கு விடுவித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் கவனம் செலுத்தாதிருந்தமை கணக்காய்வின் போது பிரச்சனைக்கு உரியதாக இருந்தது. இது தொடர்பாக பாதிப்பு உட்பட்ட தரப்பினரால் பிணக்குகள் தீர்க்கும் சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் இந்தத் தீர்ப்பின் மூலம் உரிய வெளிநாட்டு தனியார் கம்பனிக்கு ஐ.அ.டொலர் 2,073,976 (ரூபா 753.08 மில்லியன் -அத்திகதியில் காணப்பட்ட நாணயமாற்று விகிகதத்தின் பிரகாரம்) இழப்பீடாக செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் 2022 இன் நிதிக்கூற்றுக்களில் முழுத் தொகையும் செலுத்த இழப்பீடாக இனங்காணப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தால் ஒப்பந்தகாரருக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட்ட வருமான வரி தொகை ஐ.அ.டொலர் 181,484.21 (ரூபா 60.2 மில்லியன்) குறைக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தகாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை மற்றும் இறுதி பட்டியல்களுக்குரிய ஐ.அ.டொலர் 4,035,777.18 (ரூபா 1,338.87 மில்லியன்) 2023 நவம்பர் மாதத்தின் போது ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு கணிசமான இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டமை கூட்டுத்தாபனத்திற்கு திரவத்தன்மையில் பாதகமாக தாக்கமளித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களின் கவனமின்றி நடவடிக்கை எடுத்தமையினால் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம் இந்த இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்த போதிலும் இதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு நிதிப் பிரமானத்தின் பிரகாரம் இழப்பு மற்றும் நட்டம் தொடர்பாக உரிய அதிகாரத் தரப்பினருக்கு அறிவிக்கப்படாதிருந்ததுடன் உரிய நட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட் வேண்டிய ஆரம்ப மற்றும் இரண்டாம் கட்டப் பரிசோதனைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சசகாவா ஞாபகார்த்த இலங்கை மற்றும் ஜப்பான் கலாசார நிலையத்திற்கு வாடகை வழங்கப்பட்டிருந்த கொள்ளுப்பிட்டி, 22 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள காணிப் பகுதி 30 வருட கால எல்லைக்காக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த வாடகைக் காலம் 2017 யூன் 30 ஆந் திகதி முடிவடைந்து இருந்தது. அந்த வாடகை உடன்படிக்கையை நீடிப்பதற்காக கூட்டுத்தாபனத்தால் 2017 யூலை 21 ஆந் திகதி அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் மூலம் பெறப்பட்ட புதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 30 வருட வாடகையின் அடிப்படையில் அந்த காணி வழங்கும் போது காணிக்காக மாத்திரம் வருடாந்த வாடகைத் தொகை ரூபா 12.68 மில்லியனாக காணப்பட்டது. எனினும் சசக்காவா நம்பிக்கைப் பொறுப்பினால் அந்த வாடகைத் தொகை செலுத்துவதற்கு வசதியீனமாக இருந்ததாகக் காண்பித்து மேன்முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ரூபா 1.59 மில்லியன் வரை குறைத்ததன் காரணமாக கணிசமான வாடகை வருமானம் ஒன்று கூட்டுத்தாபனத்திற்கு இழக்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும் இந்தக் காணி மற்றும் கட்டிடம் தொடர்பாக வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்கள் ஏனைய தரப்பினருக்கு வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தின் போது அதன் வாடகைக் காலம் முடிவடைந்து மீண்டும் அந்த தரப்பினருக்கே உரிய காணி மற்றும் கட்டிடம் வாடகை அடிப்படையில் வழங்கும் போது புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் அந்த ஆதனங்களை பயன்படுத்துவதற்கு வாடகையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கி உரிய நிலுவைப் பணம் பெற்றுக் கொண்டதன் பின்னர் முன்னைய காலப் பகுதியின் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஒ) காணி கைப்பற்றல் சட்டத்தின் 460 ஆவது அத்தியாயத்தின் 38 ஆம் பிரிவு (அ) உப ஏற்பாடுகளின் கீழ் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கிரிமண்டல மாவத்தையில் ஆதனவரி இலக்கம் 95 என்ற காணியில் 4.67 பேர்ச் கொழும்பு மாநகர சபையால் அதற்குரிய நாராயன்பிட்டயில் அமைந்துள்ள கிரிமண்ட மாவத்தை விரிவுபடுத்தும் அபிவிருத்திக்காக 2014 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த காணிப் பகுதிக்காக கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) முத்துராஜவலயில் அமைந்துள்ள 13 ஏக்கர் 01 றூட் 0.95 பேர்ச் அளவான காணி தனியார் கம்பனி ஒன்றுக்கு ரூபா 848.38 மில்லியனுக்கு வாடகைக்கு வழங்குவதற்காக 2019 யூன் 26 ஆந் திகதி தீர்மான இலக்கம் 8013 இன் மூலம் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் அதற்காக 2019 செப்தெம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் அமப/19/2154/116/079 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் படி முதலாவது தவணைப் பணம் ரூபா 259.39 மில்லியன் செலுத்துமாறு தனியார் கம்பனிக்கு 2019 செப்தெம்பர் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் கம்பனியின் மூலம் முதலாவது தவணைப் பணம் 2019 நவம்பர் இறுதியில் செலுத்துவதற்கு காலம் கேட்டு 2019 நவம்பர் 07 ஆந் திகதி ரூபா 25 மில்லியன் முற்பண தொகை (Commitment Fee) செலுத்தப்பட்டிருந்தது.

2019 ஒக்தோபர் 30 ஆந் திகதி இலக்கம் 8166 என்ற பணிப்பாளர் சபை தீர்மானத்தின் மூலம் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படுகின்ற சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய முதலாவது தவணைப் பண பெறுமதியில் அந்த முற்பணத் தொகையை கழித்து செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(i) அதன் பிரகாரம் கம்பனியுடன் 2019 நவம்பர் முதல் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டியிருந்த போதிலும் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு உடன்படிக்கை 04 வருடங்களுக்கு பின்னர் அதாவது 2023 நவம்பர் 27 ஆந் திகதியே கைச்சாத்திடப்பட்டிருந்தது.

i) 2023 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய உரிய கம்பனியால் அனுப்பப்பட்ட கடிதத்தின் மூலம் தமது நிறுவனத்தின் செயற்பாடுகளுக்காக 10 ஏக்கர் அளவாக இருந்தமை அறிவிக்கப்பட்டிருந்ததுடன் காணியின் புதிய மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக்கொள்ளாமல் காணப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் வாடகை பெறுமதி ரூபா 640 மில்லியன் ஆக திருத்தப்பட்டு 2023 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய இலக்கம் 8923 என்ற பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

ii) 2023 யூலை 17 ஆந் திகதிய இலக்கம் PFD/LAND/2023/CM/251 என்ற நிதி அமைச்சரின் அவதானிப்பின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தால் மேற்கூறப்பட்ட கம்பனியுடன் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடும் போது ''எதிர்காலத்தில் செலுத்துவதற்கு குறித்துரைத்த தவணைப் பணம் உரிய காலத்தில் செலுத்துவதற்கு தவறுமாயின் எந்த ஒரு சலுகைக் காலமும் வழங்கப்படாமல் உரிய வாடகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்படும்'' என்ற நிபந்தனை அந்த வாடகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் கம்பனியுடன் 2023 நவம்பர் 27 ஆந் திகதி கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை அந்த நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக வாடகை உடன்படிக்கையில் 2(q)(ii) இன் பிரகாரம் ''குத்தகையாளரினால் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட ஏதாவது நிபந்தனை ஒன்று மீறப்படுமாயின் அல்லது தவிர்க்கப்படுமாயின் அதற்காக தீர்வினை வழங்குவதற்காக 06 மாத காலம் வாடகைக்கு வழங்கியவரால் வாடகையாளருக்கு வழங்க வேண்டி இருந்ததுடன் அந்த காலத்தில் அதனை மீறியதற்கு தீர்வாக கொள்ளப்படாமல் 06 மாதங்கள் கடப்பதற்கு முன் குத்தகை வாடகைக்கு வழங்கியவருக்கு உடன்படிக்கையை இரத்துச் செய்ய முடியும்'' என்பது உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஔ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 1 ஏக்கர் 02 றூட் பரப்பளவுடைய கோட்டையில் 9 ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ள காணி அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனத்திற்கு 2020 ஒக்தேபர் 01 ஆம் திகதி முதல் 2022 செப்தெம்பர் 30 வரை ரூபா 6.48 மில்லியனுக்கு வருடாந்த வாடகை அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் வாடகைக் காலம் 2022 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. எனினும் அத்திகதியில் இருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரிய நிறுவனம் வாடகை செலுத்தாமல் வாடகை உடன்படிக்கை இன்றி காணியில் இருந்து வருவதுடன் காணியை கூட்டுத்தாபனத்திற்கு விடுவித்துக் கொள்வதற்கு தவறியிருந்தது. அவ்வாறே கூட்டுத்தாபனத்திற்று 2024 மே வரையில் ரூபா 15.11 மில்லியன் இந்த குத்தகையாளரிடம் இருந்து கிடைக்க வேண்டியிருந்தது.

(க) கூட்டுத்தாபனத்தால் கடல் மணல் குவிக்கும் செயற்திட்டத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் ஐக்கிய அமெரிக்க டொலர் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 729.67 மில்லியன் மற்றும் யூரோ கணக்கில் மீதி ரூபா 206.28 மில்லியன் ஆக இருந்ததுடன் முறையே மிளாய்வாண்டின் போது ஏற்பட்ட நாணயமாற்று நட்டம் ரூபா 87.33 மில்லியன் மற்றும் நாணய மாற்று இலாபம் ரூபா 16.21 மில்லியன் ஆக இருந்ததுடன் அதன் பிரகாரம் தேறிய நட்டம் ரூபா 71.12 மில்லியன் ஆகும்.

(கா) மெதமூலன ஞாபகார்த்த நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக மேலும் கூட்டுத்தாபனத்திற்கு அறவிட வேண்டியிருந்ததாக நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட மற்றும் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளில் காணப்படுகின்ற பெறுமதிகளுக்கு இடையிலான வேறுபாடான ரூபா 47.37 மில்லியன் தொகை அந்த செயற்திட்டத்திற்காக ஏற்படாத செலவினமாக காண்பிக்கப்பட்டதன் காரணமாக அந்த மேலதிகமான செலவிடப்பட்ட செலவினம் தொடர்பாக மேலதிகமாகப் பரீட்சித்து அதற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடப்படாமல் மற்றும் நிதிப்பிரமாணம் 113 இன் பிரகாரம் பொதுத் திறைசேரியில் இருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் புத்தகங்களில் இருந்து பதிவளிப்பதற்காக 2021 யூன் 28 ஆம் திகதிய இலக்கம் MRW/5404 என்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி கூட்டுத்தாபனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 8,700 மில்லியன் உலக வங்கி உதவியின் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட கொலன்னாவை மழை நீர் அகற்றுதல் மற்றும் சுற்றாடலை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் பின்னர் அமைச்சரவைத் தீர்மானத்தின் படி திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டு முதல் 05 வருடங்களில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் இந்த செயற்திட்டத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 7.6 சதவீதம் ஆன மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(கீ) மாதின்னாகொட வீடமைப்பு திட்டத்திற்காக கைப்பற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட காணியை கைப்பற்றுவதற்கு முன் அதாவது 2018 ஆம் ஆண்டு வரையில் அந்தக் காணிக்காக ரூபா 112 மில்லியன் செலவில் உப நுழைவு வீதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் 2024 யூன் வரை காணி கைப்பற்றாமையின் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது.

(கு) இலங்கை அணு சக்தி அதிகார சபையின் ஆய்வு கூட பிரிவு A கட்டிடம் நிர்மாணிப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு 2014 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய ரூபா 61.58 மில்லியன் பெறுமதி கூட்டுத்தாபனத்தால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. கட்டிடம் திட்டமிடும் போது ஏற்பட்ட குறைபாடான நிலைமையின் காரணமாக Micro piling கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்ட ரூபா 46.40 மில்லியன் செலவினத்தை மீளளிப்புச் செய்வதற்கு இலங்கை அணுசக்தி அதிகார சபை தமது இணக்கப்பட்டை தெரிவித்திருக்கவில்லை. இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக கூட்டுத்தாபனத்தால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) காணி அபிவிருத்தி செய்தல் கம்பனியால் 30 வருட காலம் முதல் கிங்குராக்கொட, திருகோணமலை, அம்பாறை போன்ற பிரதேசங்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற சீமெந்து சார்ந்த உற்பத்தி நிலையம் அமைந்துளள காணிகளில் கூட்டுமொத்தமாக 2.1979 ஹெக்ரேயர் அளவாக இருந்ததுடன் அதனை அரசாங்கத்திற்கு அல்லது அரசாங்கத்தின் வேறொரு நிறுவனத்திற்குரிய காணிகளில் வாடகை உரித்து அல்லது உரித்து உறுதியை கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தவறியிருந்தது.

(கெ) கூட்டுத்தாபனத்தால் Waste to Wealth (Pvt) Ltd என்ற பெயரில் துணைக் கம்பனி ஒன்று ஆரம்பிப்பதற்கு 2019 நவம்பர் 04 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 5 மில்லியன் முதலீட்டுத் தொகையில் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள் கைவிட வேண்டி ஏற்பட்டிருந்த ரூபா 2.46 மில்லியனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கே) ஹொரண பேருந்து நிலையம் - இரண்டாவது கட்ட நிர்மாண செயற்திட்டத்திற்குரிய கூட்டுத்தாபனத்திற்கு 2015 பெப்ரவரி 17 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய ரூபா 5.53 மில்லியன் பெறுமதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்ததுடன் செயற்திட்டத்தை இடைநடுவில் நிறுத்தியதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 12.35 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

(கை) கூட்டுத்தாபனத்தால் 2020 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்பட்ட கிரிமண்ட மாவத்தை விவசாய அபிவிருத்தி செயற்திட்டத்தில் 2022 ஆம் ஆண்டு மற்றும் மீளாய்வாண்டில் கூட்டுத்தாபத்திற்கு ஏற்பட்ட நட்டம் முறையே ரூபா 8.5 மில்லியன் மற்றும் 5.1 மில்லியன் ஆக இருந்ததுடன் செயற்திட்டத்திற்காக கூட்டுத்தானத்திற்கு ஏற்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 6.01 மில்லியன் ஆகும். 2022 ஆம் ஆண்டில் அதில் ரூபா 9.18 மில்லியன் அதாவது 81.02 சதவீதம் ஊழியர் கிரயமாக இருந்ததுடன் மீளாய்வாண்டில் ஊழியர் கிரயம் ரூபா 3.87 மில்லியன் அதாவது 64.29 சதவீதமாக இருந்தது.

(கொ) 1995 ஆம் ஆண்டின் போது 50 வருட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் 0.25 மில்லியன் சேர்க்கப்பட்டு 99 வருடங்களுக்கு களனி வெதமுல்லையில் அமைந்துள்ள காணி கூட்டுத்தாபனத்தால் 99 வருட வாடகைக் காலத்திற்காக ரூபா 35.5 மில்லியன் பெறுமதியில் தனியார் கம்பனிக்கு 1998 மே 31 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணி வாடகைக்கு வழங்கியதால் கூட்டுத்தாபனத்திற்கு எதிரியான பாதகம் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்க்ப்பட்டதுடன் 50 வருடங்களுக்கு மதிப்பீட செய்யப்பட்ட பெறுமதி 99 வருடங்களுக்கு உரித்தாக்கிக் கொள்ளல் தொடர்பாக கணக்காய்வில் பிரச்சனைக்குரியதாக இருந்தது.

(கோ) கூட்டுத்தாபனத்தில் இயந்திர பிரிவு இலங்கை காணி அபிவிருத்தி மற்றும் நிலமீட்டல் கம்பனி ஸ்தாபிப்பதற்காக கூட்டுத்தாபனத்தால் தமது செலவினத்தில் 2018 ஆம் ஆண்டின் போது முத்துராஜவல கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக ரூபா 174.91 மில்லியன் செலவினம் கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்டிருந்தது. எனினும் மேற்கூறப்பட்ட கட்டிடம் 2021 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 03 வருடங்கள் குறைவான பயன்பாடுடன் பயனற்றுக் காணப்பட்டது.

(கௌ) வெரஸ்கங்க செயற்திட்ட நிதியத்தில் பெல்லன்வில ஓய்வு பெறும் நடைபாதை சார்ந்த உணவு விற்பனைச் சாலைகள் 12 Block - A மற்றும் Block - B ஆக இரண்டு பகுதிகளாக வகைப்படுத்தப்பட்டு 06 வியாபாரக் கொட்டகைகள் உள்ளடங்கும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன்.

(i) 2014 செப்தெம்பர் மாதம் முதல் இந்த Block - A பகுதியில் வியாபாரக் கொட்டகை 01 மற்றும் Block-B பகுதியில் வியாபாரக் கொட்டகைகள் 06 ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடுத்த முடியாமல் 08 வருடங்களை விட அதிக காலம் பராமரிப்புச் செலவினங்களை மேற்கொண்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. இந்த வியாபார கொட்டகைகள் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் ஒரு பகுதியில் மேல் மாடி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது பல்லின செயல்பாடுகளுக்காக வாடகைக்கு வழங்குவதற்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் வருமானம் உழைக்கும்

பணிகளுக்காக வெளித் தரப்பினர்களுக்கு அறிவித்து அதற்காக கோரிக்கைகளை ஏற்படுத்துவதற்கு நிறுவனம் எந்த ஒரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(ii) சாத்தியவள ஆய்வு அல்லது தேவையினை இனங்காணாமல் 2014 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தால் வியாபார கொட்டகைகளுக்காக ரூபா 33.28 மில்லியன் பெறுமதியான சமையல் அறை உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கேள்வி மூலம் வியாபார கொட்டகைகள் பெறப்பெற்ற கொள்வனவாளருக்கு சமையலறை உபகரணங்கள் வழங்குவதற்கு கேள்வி ஆவணங்களில் எந்த ஒரு இணக்கப்பாடோ அல்லது நிபந்தனையோ உள்ளடக்கப்படாதிருந்ததுடன் வியாபார கொட்டகைகளுக்கு வழங்கப்பட்ட துணைப்பாகங்களின் பெறுமதி ரூபா 30.98 மில்லியன் ஆக இருந்ததுடன் 2024 மார்ச் மாதம் வரையில் காணப்படுகின்ற துணைப்பாகங்களின் பெறுமதி ரூபா 8.02 மில்லியன் ஆனமையால் அதற்கிடையே ரூபா 22.69 மில்லியன் வேறுபாட்டுக்கான காரண விடயங்கள் கணக்காய்விற்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) பெல்லன்வில வியாபார கொட்டகைகளில் மீளாய்வாண்டில் ஏற்பட்ட நட்டம் ரூபா 3.35 மில்லியன் ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 வரை நட்டம் ரூபா 14.27 மில்லியன் ஆனமையால் 04 வருடங்களுக்கான மொத்த நட்டம் ரூபா 17.62 மில்லியன் ஆகும்.

(ச) PH-4457 ஆம் இலக்க வாகனம் 2023 ஆகஸ்ட் 02 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 14 ஆந் திகதி வரை 4½ மாத குறுங்காலத்தில் கிலோமீற்றர் 3,647 அளவில் ஓடியிருந்த போதும் ரூபா 0.88 மில்லியனுக்கு 08 சேவைத் தடவைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை சம்பவத்திரட்டு புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு சேவைகளை மீண்டும் மீண்டும் மேற்கொள்வதற்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அந்த சேவைகளுக்காக உரிய அங்கீகாரம் மோட்டார் வாகன பரிசோதகரிடமிருந்து பெறப்பட்டிருக்கவில்லை.

(சா) தியசரு சதுப்புநில பூங்காவை பார்வையிடுவதற்காக பொது மக்களுக்கு டிக்கட் விற்பனை மற்றும் பூங்காவில் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கி மீளாய்வாண்டில் ரூபா 25.46 மில்லியன் வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் அந்த பூங்காவின் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 22.52 மில்லியன் பட்டியல் மீளளிப்புச் செய்வதற்கு திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. புரன் நிலங்கள் மற்றும் தாழ் நிலங்கள் அபிவிருத்தி செய்வதற்காக திறைசேரியின் மூலம் வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டுத் தொகை, கூட்டுத்தாபனம் வருமானம் உழைக்கின்ற வரிசை பூங்கா பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக செலவிட்டிருந்தமையும் அந்த செலவினத்தின் அடிப்படையில் 17 சதவீதம் ரூபா 3.83 மில்லியன் முகாமைத்துவ சேவைக் கட்டணம் ஒன்று கூட்டுத்தாபனம் அறவிட்டு பொதுத் திறைசேரிக்கு கணிசமான செலவினப் பொறுப்பை ஏற்படுத்தி இருந்தது.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) 2023 யூன் 20 ஆந் திகதிய பணிப்பாளர் சபை பத்திர இலக்கம் HSB/5783 இன் பிரகாரம் அத்துருகிரிய வரிசைப் பூங்கா செயற்திட்டத்திற்காக கூட்டுத்தாபனம் செலவிட்ட ரூபா 195.03 மில்லியன் பெறுமதி உரிய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் நிறுவனம் சமூகப் பொறுப்பு செலவினமாக மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்வதற்கு தீர்மானித்திருந்தது.

(ஆ) 2019 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய இலக்கம் PFD/INF/162/CM/608 என்ற நிதி அமைச்சரின் அவதானிப்புக் கடிதத்தில் இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் ‘‘கூட்டுத்தாபனத்தால் உரிய காணி வாடகைக்கு வழங்கியதால் உழைக்கப்படுகின்ற பணத்தில் உரிய காணி அபிவிருத்தி செய்வதற்கு ஏற்பட்ட செலவினம் கழிக்கப்பட்ட பின்னர் சேமிப்பு பொதுத் திறைசேரிக்கு அனுப்ப வேண்டும்’’ என குறிப்பிட்டிருந்த போதிலும் சீஏ கிறசிங்ஸ் இற்கு வழங்கப்பட்ட முத்துராஜவலயில் அமைந்துள்ள காணி தொடர்பாக அதன் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) முற்பணப் பெறுவனவின் கீழ் ரூபா 56.24 மில்லியன் தீர்த்து வைக்கப்படாத முற்பணத் தொகை ஒன்று காணப்பட்டதுடன் அது தொடர்பாக மேலதிகமாக பரிசோதனை செய்வதற்காக உரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,180.3 மில்லியன் கடன்பட்டோர் மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் காணப்பட்ட ரூபா 1,150.77 மில்லியன் வியாபாரக் கடன்பட்டோர் மீதியின் பெறுமதியில் 02 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையில் அறவிட வேண்டிக் காணப்பட்ட மீதி ரூபா 318.25 மில்லியன் ஆக இருந்ததுடன் 05 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதி ரூபா 387.25 மில்லியன் ஆகும். அதில் 05 வருடங்களை விஞ்சிய கடன்பட்டோர் மீதியில் ரூபா 282.39 மில்லியன் சேவை பங்களிப்பு செயற்திட்டத்தில் இருந்து கிடைக்க வேண்டிய மீதி ஆகும்.

(உ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,333.08 மில்லியன் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 527.51 மில்லியன் ஆன ஒப்பந்த கடன் கொடுத்தோர் மீதியில் ஒப்பந்த கடன் கொடுத்தோர் மீதி

ரூபா 428.36 மில்லியன் ஆக இருந்ததுடன் 03 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தில் இருந்து தீர்த்து வைக்கப்படாத ஒப்பந்த கடன் கொடுத்தோர் மீதி ரூபா 2.99 மில்லியன் ஆக இருந்ததுடன் 05 வருடங்களுக்கு மேற்பட்ட மீதி ரூபா 197.99 மில்லியன் ஆகும். மேலும் வியாபார கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 430.06 மில்லியன் தொகையில் ரூபா 45.7 மில்லியன் தொகை 2 – 3 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் இருந்தும், ரூபா 82.82 மில்லியன் தொகை 3 – 5 வருடங்களுக்கு இடையிலான காலத்தில் இருந்தும், ரூபா 48.1 மில்லியன் தொகை 05 வருட காலமாகவும் செலுத்த வேண்டிக் காணப்பட்டது.

(ஊ) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1,802 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளபடியான பதவியணியினர் 1,340 ஆனமையால் கூட்டுத்தாபனத்தின் பதவியணியில் 462 வெற்றிடங்கள் மற்றும் மிகை 31 ஆகும். மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்தின் பெயர் முகாமைத்துவ பதவிகளில் நிரந்தரப் பதவியணியினரில் 11 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது.

(எ) கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நிரந்த பாதுகாப்பு சேவை உத்தியோகத்தர்கள் 68 பேர்கள் இருக்கும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 81.82 மில்லியன் தொகை எல்ஆர்டீசீ சேவை தனியார் கம்பனிக்கு செலுத்தி கூட்டுத்தாபத்திற்காக பாதுகாப்பு சேவை வசதிகள் பெறப்பட்டிருந்தது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தில் PL-01 தொகுதியின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொழிலாளர் பதவிகள் 412 இல் 320 பேர் நிரந்தர பதவியணியினரில் இருக்கும் போது எல்ஆர்டீசீ சேவை தனியார் கம்பனியில் இருந்து மனித வலு சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 439.45 மில்லியன் கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக ரெடேகூ கம்பனியில் இருந்து பெறப்பட்ட பதவியணியினருக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 28.08 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்தால் செலவிடப்பட்டிருந்தது.

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

## முழுமையான வருமானக் கூற்று

| திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | குறிப்பு | குழு 2023 ரூ. 000 | குழு 2022 ரூ. 000 | கூட்டுத்தாபனம் 2023 ரூ. 000 | கூட்டுத்தாபனம் 2022 ரூ. 000 |
|---|---|---|---|---|---|
| வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தத்திலிருந்து வரும் வருமானம் | 1 | 8,638,830 | 6,725,264 | 5,431,081 | 4,289,956 |
| நேரடி செலவு | 2 | (6,087,067) | (4,519,055) | (3,237,072) | (2,396,713) |
| **முழு இலாபம்** | | **2.551.763** | **2.206.209** | **2.194.009** | **1.893.243** |
| ஏனைய இயக்கச்செயற்பாட்டு வருமானம் | 3 | 202,965 | 282,184 | 181,315 | 276,259 |
| **ஏனைய இயக்கச்செயற்பாட்டு வருமானத்துடன் இணைந்த முழு இலாபம்** | | **2,754,728** | **2,488,393** | **2,375,324** | **2,169,502** |
| நிருவாக செலவுகள் | | (1,603,245) | (1,443,069) | (1,333,295) | (1,225,841) |
| தேய்மானம் மற்றும் கழிவு | | (373,355) | (377,745) | (355,617) | (359,975) |
| விளம்பர செலவுகள் | | (199,435) | (7,250) | (198,660) | (6,853) |
| ஏனைய இயக்கச்செயற்பாட்டு செலவுகள் | | (617,624) | (233,949) | (617,623) | (233,949) |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் இலாபம்** | 4 | **(38,931)** | **426,380** | **(129,871)** | **342,884** |
| நடுத்தீர்ப்பிலிருந்து எழும் கோரல்கள் | | 4,149 | (753,081) | 4,149 | (753,081) |
| நிதிசார் செலவு | 5 | (401,723) | (227,176) | (394,771) | (219,972) |
| நிதிசார் வருமானம் | 6 | 1,664,405 | 1,207,643 | 1,636,819 | 1,190,633 |
| பிற்போடப்பட்டுள்ள வருமான கழிவு | 17 | 106,972 | 200,573 | 106,972 | 200,573 |
| **வரிக்கு முன்னருள்ள இலாபம்** | | **1.334.872** | **854.339** | **1.223.298** | **761.037** |
| வரிவிதிப்பு | 7 | (264,180) | (470,760) | (260,032) | (452,884) |
| **குறித்த ஆண்டிற்கான இலாபம்** | | **1,070,692** | **383,579** | **963,266** | **308,153** |
| **பின்வருவனவற்றுக்கு சேரும் இலாபம்:** | | | | | |
| தலைமை கம்பனி ஒப்புரவு பங்குகள் | | 1,049,207 | 368,494 | 963,266 | 308,153 |
| கட்டுப்பாடற்ற வட்டி | | 21,485 | 15,085 | - | - |
| **ஏனைய முழுமையான வருமானம்** | | | | | |
| திட்வட்டமான ஓய்வூதிய திட்டங்கள் மீதுள்ள உண்மையான இலாபம் / (நட்டம்) | 19 | (15,823) | 38,930 | (35,789) | 39,288 |
| திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்தின் மீதுள்ள உண்மையான இலாபத்திற்கு/(நட்டத்திற்கு) சேர வேண்டிய பிற்போடப்பட்டுள்ள வரி | 7.2 | 4,747 | (11,679) | 10,737 | (11,786) |
| PPE மீள்விலைமதிப்பீடு மீதுள்ள மிகை | | 34,168 | - | - | - |
| **குறித்த ஆண்டிற்கான மொத்த ஏனைய முழு வருமானம்** | | **23,092** | **27,251** | **(25,052)** | **27,502** |
| **குறித்த ஆண்டிற்கான மொத்த முழுமையான** | | **1.093.784** | **410.830** | **938.214** | **335.655** |
| **சேரக்கூடிய மொத்த முழுமையான வருமானம்:** | | | | | |
| தலைமை கம்பனி ஒப்புரவு பங்குகள் | | 1,062,670 | 395,794 | 938,214 | 335,655 |
| கட்டுப்பாடற்ற வட்டி | | 31,114 | 15,035 | - | - |

106 முதல் 127 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

## நிதி நிலைக் கூற்று

| திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | குறிப்பு | குழு 2023 ரூ. 000 | குழு 2022 ரூ. 000 | கூட்டுத்தாபனம் 2023 ரூ. 000 | கூட்டுத்தாபனம் 2022 ரூ. 000 |
|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் | 8 | 2,245,579 | 2,338,568 | 2,139,533 | 2,243,052 |
| கட்புலனாகா சொத்துக்கள் | 9 | 37,172 | 14,733 | 37,172 | 14,658 |
| முதலீட்டு சொத்துக்கள் | 10 | 2,725,931 | 2,925,998 | 2,725,931 | 2,925,998 |
| துணை கம்பனிகளிலுள்ள முதலீடுகள் | 11 | - | - | 2,000 | 2,000 |
| சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளுக்கான கடன்கள் | 14 | - | - | 126,667 | 141,233 |
| கழித்த செலவிலுள்ள முதலீடுகள் | 15 | 445,208 | - | 445,208 | - |
| பிற்போடப்பட்டுள்ள வரி சார் சொத்துக்கள் | | 89,256 | 58,205 | - | - |
| | | **5,543,146** | **5,337,504** | **5,476,511** | **5,326,941** |
| **நடைமுறை சொத்துக்கள்** | | | | | |
| பொருள் இருப்புக்கள் | 12 | 2,190,434 | 2,813,477 | 2,097,163 | 2,717,596 |
| வர்த்தக மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய தொகைகள் | 13 | 5,240,354 | 6,061,259 | 3,712,316 | 4,854,204 |
| கிடைக்க வேண்டிய வரி | | 88,326 | 5,362 | 82,156 | - |
| சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளுக்கான கடன்கள் | 14 | - | - | 38,566 | 24,000 |
| கழித்த செலவிலுள்ள முதலீடுகள்<br>முதிர்ச்சியடைந்த நிதிசார் சொத்துக்களுக்கு ஒதுக்கப்பட்டவை | 15 | 5,819,566 | 7,011,627 | 5,642,563 | 6,810,000 |
| காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் | 16 | 1,967,251 | 1,065,171 | 1,693,348 | 979,377 |
| | | **15,305,931** | **16,956,896** | **13,266,112** | **15,385,177** |
| **மொத்த சொத்துக்கள்** | | **20,849,077** | **22,294,400** | **18,742,623** | **20,712,118** |
| **ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | | | | |
| பங்களித்த மூலதனம் | | 1,000 | 1,000 | 1,000 | 1,000 |
| மூலதன ஒதுக்கம் | | 13,461 | 13,461 | 13,461 | 13,461 |
| சொத்துக்கள் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 286,024 | 258,690 | 212,430 | 212,430 |
| பிடித்துவைத்த சம்பாத்தியங்கள் | | 11,225,941 | 10,690,605 | 10,826,654 | 10,388,440 |
| கட்டுப்பாடற்ற வட்டி | | 118,722 | 87,608 | - | - |
| **மொத்த மூலதனமும் ஒதுக்கங்களும்** | | **11,645,148** | **11,051,364** | **11,053,545** | **10,615,331** |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | | | |
| ஊழியர் நலன்புரி நிதி | | 126,709 | 107,473 | 126,709 | 107,473 |
| சுவீகரித்த காணிகள் மீது செலுத்த வேண்டிய நஷ்டஈடுகள் | | 256,482 | 240,963 | 256,482 | 240,963 |
| பிற்போடப்பட்ட வரி சார் பொறுப்பு | | 149,131 | 182,660 | 149,131 | 182,660 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 17 | 417,677 | 429,301 | 417,677 | 429,301 |
| கடன்களுக்கும் பற்றுக்களுக்குமான வட்டி | 18 | 1,067,436 | 1,334,519 | 1,067,436 | 1,334,295 |
| ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு | 19 | 613,095 | 519,717 | 386,345 | 304,779 |
| | | **2,630,530** | **2,814,633** | **2,403,780** | **2,599,471** |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| கடன்களுக்கும் பற்றுக்களுக்குமான வட்டி | 18 | 267,082 | 268,199 | 266,859 | 266,859 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய தொகைகள் | 20 | 2,436,206 | 4,019,579 | 1,333,084 | 3,230,579 |
| செலுத்த வேண்டிய வரி | | 345,899 | 444,499 | 241,634 | 363,594 |
| செலுத்த வேண்டிய பங்குலாபம் | | 911 | 911 | - | - |
| கிடைத்த முற்பணங்கள் | 21 | 3,503,681 | 3,680,608 | 3,443,721 | 3,636,284 |
| வங்கி மேலதிகப் பற்றுக்கள் | 16 | 19,620 | 14,607 | - | - |
| | | **6,573,399** | **8,428,403** | **5,285,298** | **7,497,316** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **9,203,929** | **11,243,036** | **7,689,078** | **10,096,787** |
| **மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்** | | **20,849,077** | **22,294,400** | **18,742,623** | **20,712,118** |

106 முதல் 127 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

**ஜேஏபிகே ஜயசிங்க**
பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)

**பொறியிய. (திருமதி) ஸ்ரீமத்தி சேனாதீர**
பொது முகாமையாளர்

இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து வழங்கும் பொறுப்பு, பணிப்பாளர்கள் சபைக்குரியதாகும். பணிப்பாளர்கள் சபைக்காகவும் அதன் சார்பாகவும் கையொப்பிடப்பட்டது:

**பொறியியலாளர் ஹிரான் பாளசூரிய**
கட்டளை அதிகாரி
**தலைவர்**

**திரு காமினி ஹேவகே**
பணிப்பாளர்

2024 மார்ச் 07

## ஒப்புரவு மாற்றங்கள் பற்றிய கூற்று

**குழு**

| விவரம் | பங்களித்த மூலதனம் ரூ.000 | மூலதன ஒதுக்கம் ரூ.000 | சொத்துக்கள் மீள் விலை மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ.000 | பிடித்து வைத்த சம்பாத்தியங்கள் ரூ.000 | கட்டுப் பாடற்ற வட்டி ரூ.000 | மொத்தம் ரூ.000 |
|---|---|---|---|---|---|---|
| **2021.12.31 ஆம் திகதியில் உள்ள நிலுவை** | **1,000** | **13,461** | **258,690** | **10,319,810** | **72,573** | **10,665,534** |
| 2022 ஆம் ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | - | 368,494 | 15,085 | 383,579 |
| பிற்போடப்பட்டுள்ள நன்மைகள் ஓய்வூதிய திட்டங்களின் தேறிய வரி மீதுள்ள உண்மையான இலாபம்/(நட்டம்) | - | - | - | 27,301 | (50) | 27,251 |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு | - | - | - | (25,000) | - | (25,000) |
| **2022.12.31 ஆம் திகதியில் உள்ள நிலுவை** | **1,000** | **13,461** | **258,690** | **10,690,605** | **87,608** | **11,051,364** |
| 2023 ஆம் ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | - | 1,049,207 | 21,485 | 1,070,692 |
| பிற்போடப்பட்டுள்ள நன்மைகள் ஓய்வூதி திட்டங்களின் தேறிய வரி மீதுள்ள உண்மையான இலாபம்/(நட்டம்) | - | - | - | (13,871) | 2,795 | (11,076) |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு | - | - | - | (500,000) | - | (500,000) |
| PPE மீள்விலை மதிப்பீடு மீதான மிகை | - | - | 27,334 | - | 6,834 | 34,168 |
| **2023.12.31 ஆம் திகதியில் உள்ள நிலுவை** | **1,000** | **13,461** | **286,024** | **11,225,941** | **118,722** | **11,645,148** |

**கூட்டுத்தாபனம்**

| | பங்களித்த மூலதனம் ரூ.000 | மூலதன ஒதுக்கம் ரூ.000 | சொத்துக்கள் மீள் விலை மதிப்பீட்டு ஒதுக்கம் ரூ.000 | பிடித்து வைத்த சம்பாத்தியங்கள் ரூ.000 | கட்டுப் பாடற்ற வட்டி ரூ.000 |
|---|---|---|---|---|---|
| **2021.12.31 ஆம் திகதியில் உள்ள நிலுவை** | **1,000** | **13,461** | **212,430** | **10,077,785** | **10,304,676** |
| 2022 ஆம் ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | - | 308,153 | 308,153 |
| பிற்போடப்பட்டுள்ள நன்மைகள் ஓய்வூதிய திட்டங்களின் தேறிய வரி மீதுள்ள உண்மையான இலாபம்/(நட்டம்) | - | - | - | 27,502 | 27,502 |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு | - | - | - | (25,000) | (25,000) |
| **2022.12.31 ஆம் திகதியில் உள்ள நிலுவை** | **1,000** | **13,461** | **212,430** | **10,388,440** | **10,615,331** |
| 2023 ஆம் ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்) | - | - | - | 963,266 | 963,266 |
| பிற்போடப்பட்டுள்ள நன்மைகள் ஓய்வூதி திட்டங்களின் தேறிய வரி மீதுள்ள உண்மையான இலாபம்/(நட்டம்) | - | - | - | (25,052) | (25,052) |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு | - | - | - | (500,000) | (500,000) |
| **2023.12.31 ஆம் திகதியில் உள்ள நிலுவை** | **1,000** | **13,461** | **212,430** | **10,826,654** | **11,053,545** |

106 முதல் 127 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

## காசுப்பாய்ச்சல் கூற்று

| திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான | குழு | | கூட்டுத்தாபனம் | |
|---|---|---|---|---|
| | 2023 | 2022 | 2023 | 2022 |
| | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்** | | | | |
| வரிக்கு முன்னருள்ள தேறிய இலாபம்/(நட்டம்) | 1,334,872 | 854,339 | 1,223,298 | 761,037 |
| **பின்வருவனவற்றுக்கான சீராக்கல்கள்:** | | | | |
| தேய்மானம் மற்றும் கழிவு | 380,164 | 386,007 | 355,617 | 359,975 |
| நிதிசார் செலவுகள் | 401,723 | 227,176 | 394,771 | 219,972 |
| நிதிசார் வருமானம் | (1,664,405) | (1,207,643) | (1,636,819) | (1,190,633) |
| பிற்போடப்பட்ட வருமான கழிவு | (106,972) | (200,573) | (106,972) | (200,573) |
| சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான நிதியேற்பாடு | 4,013 | (38,638) | 5,807 | (38,564) |
| தீர்ப்பனவு செய்யாத பதிவழித்த பற்றுக்கள் | - | 3 | - | 3 |
| சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் மீதான விற்பனை | (447,318) | (95,361) | (447,301) | (95,281) |
| மந்தமாக நகர்கின்ற பொருட்களுக்கான நிதியேற்பாடு | 10,821 | 7,817 | 10,821 | 7,817 |
| திடமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடுகளுக்கான நிதியேற்பாடு | 131,237 | 113,503 | 72,406 | 56,852 |
| **தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னருள்ள இயக்கச்செயற்பாட்டு இலாபம்** | **44,135** | **46,630** | **(128,372)** | **(119,395)** |
| **தொழிற்படு மூலதன மாற்றங்கள்** | | | | |
| பொருள் இருப்புக்களிலுள்ள அதிகரிப்பு/(குறைவு) | 612,572 | (518,087) | 609,962 | (540,655) |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலுள்ள அதிகரிப்பு/(குறைவு) | 676,932 | (217,899) | 997,521 | 191,017 |
| செலுத்த வேண்டிய நஷ்டஈடுகளிலுள்ள அதிகரிப்பு/ (குறைவு) | (91) | 31,900 | (91) | 31,900 |
| ஊழியர் நலன்புரி நிதியத்திலுள்ள அதிகரிப்பு/ (குறைவு) | 19,236 | 12,330 | 19,236 | 12,330 |
| கிடைத்த முற்பணத்திலுள்ள அதிகரிப்பு/ (குறைவு) | (176,927) | (136,424) | (192,563) | (91,354) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலுள்ள அதிகரிப்பு/(குறைவு) | (1,563,880) | 1,809,327 | (1,879,002) | 1,521,945 |
| **இயக்கச்செயற்பாடுகளிலிருந்து ஈட்டிய காசு** | (388,023) | 1,027,777 | (573,309) | 1,005,788 |
| செலுத்திய வருமான வரி | (505,578) | (194,828) | (486,940) | (194,815) |
| செலுத்திய ஓய்வூதிய பணிக்கொடை | (53,682) | (64,376) | (26,629) | (49,856) |
| ***இயக்கச்செயற்பாடுகளிலிருந்து (பயன்பட்ட) வரும் தேறிய காசுப் பாய்ச்சல்*** | **(947,283)** | **768,573** | **(1,086,878)** | **761,117** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்கள்** | | | | |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் கொள்வனவு | (243,919) | (558,909) | (243,085) | (551,463) |
| நிலையான வைப்புக்களிலுள்ள தேறிய மீளப்பெறல்/ (முதலீடு) | 749,843 | (3,141,846) | 725,219 | (3,129,998) |
| கிடைத்த வட்டி வருமானம் | 1,801,375 | 621,028 | 1,772,389 | 601,257 |
| சொத்துக்கள், பொறித் தொகுதிகள், உபகரணங்கள் விற்பனையிலிருந்து வரும் வருமானம் | 721,305 | 99,386 | 721,288 | 96,018 |
| ***முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து (பயன்பட்ட) வரும் தேறிய காசுப் பாய்ச்சல்*** | **3,028,604** | **(2,980,341)** | **2,975,811** | **(2,984,186)** |
| **நிதியீட்டும் செயற்பாடுகளிலிருந்து வரும் காசுப் பாய்ச்சல்** | | | | |
| கடன் மீள்தவணைக் கட்டணங்கள் | (268,200) | (268,198) | (266,859) | (266,859) |
| கடன்கள் மீது செலுத்திய வட்டி | (416,055) | (184,821) | (408,103) | (177,861) |
| திரட்டு நிதியத்திற்கான பங்களிப்பு | (500,000) | (25,000) | (500,000) | (25,000) |
| செலுத்திய குத்தகை வாடகைகள் | - | (5,090) | - | - |
| **நிதியீட்டு செயற்பாடுகளிலிருந்து (பயன்பட்ட) வரும் தேறிய காசுப் பாய்ச்சல்** | **(1,184,255)** | **(483,109)** | **(1,174,962)** | **(469,720)** |
| காசும் மற்றும் காசு ஒப்புரவுகளிலுமுள்ள தேறிய அதிகரிப்பு/(குறைவு) | 897,067 | (2,694,877) | 713,971 | (2,692,789) |
| குறித்த ஆண்டு ஆரம்பத்திலிருந்த காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் | 1,050,564 | 3,745,441 | 979,377 | 3,672,166 |
| குறித்த ஆண்டு இறுதியிலிருந்த காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் (குறிப்பு 16) | **1,947,631** | **1,050,564** | **1,693,348** | **979,377** |

106 முதல் 127 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் இந்த நிதிக் கூற்றுக்களின் இன்றியமையாத ஒரு பாகமாகும்.

## முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1. கூட்டுத் தாபனம் பற்றிய தகவல்கள்

#### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

இலங்கை காணிகள் அபிவிருத்தி கூட்டுத் தாபனம் இலங்கையில் அமைந்துள்ள ஒரு அரச கூட்டுத் தாபனமாகும். இந்தக் கூட்டுத் தாபனம் 1968 இன் 15 ஆம் இலக்க சட்டத்தினால் 1968 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டது.

இந்தக் கூட்டுத் தாபனத்தின் பதிவு செய்யப்பட்டுள்ள அலுவலகமும் பிரதான அலுவலக நிலையமும் இலக்கம் 3, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, வெலிக்கட, ராஜகிரிய என்ற முகவரியில் அமைந்துள்ளது.

#### 1.2 திரண்ட நிதிக் கூற்றுக்கள்

இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனத்தின் 2023 திசம்பர் 31 ஆம் திகதியிலும் அந்தத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானதுமான திரண்ட நிதிக் கூற்றுக்களில் கூட்டுத் தாபனத்தினதும் அதன் இரண்டு துணை நிறுவனங்களினதும் (‘குழு’ என சேர்த்துக் குறிப்பீடு செய்யப்படும்) கணக்குகள் உள்ளடங்குகின்றன. குழுவிலுள்ள சகல நிறுவனங்களினதும் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக திசம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஒரு நிதியாண்டைக் கொண்டிருக்கும். இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் அதன் ஏதாவது இனங்காணக்கூடிய தலைமைக் கம்பனியைக் கொண்டதாகவில்லை. ஆகையால் கூட்டுத் தாபனமே குழுவின் அறுதி இறுதியான தலைமைக் கம்பனியாகும்.

#### 1.3 பிரதான செயற்பாடுகளும் செயற்பாடுகளின் தன்மையும்

குறித்த ஆண்டு காலப் பகுதியில் பின்வருவன கூட்டுத் தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் பிரதான செயற்பாடுகளாக இருந்தன.

| நிறுவனத்தின் பெயர் | வியாபார அலுவல்கள் தன்மை |
|---|---|
| இலங்கைக் காணி அபிவிருத்திக் கூட்டுத் தாபனம் | வடிகாலமைப்பு மேம்பாடுகள், காணி அபிவிருத்திகள், நகர நிலக் காட்சிப்படுத்தல்கள், சதுப்பு நிலங்களின் முகாமைத்துவம், சிவில் நிர்மானங்கள் மற்றும் சம்பந்தப்படும் பொறியியல் சேவைகள் வழங்கல். |
| காணி சீராக்கல் அபிவிருத்தி கம்பனி லிமிற்றட்டு | சீமெந்து குற்றிகளை உற்பத்தி செய்தல், கடற்கரை மணலை அகழ்ந்தெடுத்து பொதியிட்டு விற்பனை செய்தல், வார்த்தெடுத்த பொருட்களை உற்பத்தி செய்தல், சிவில் நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல் |
| LRDC சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு | பாதுகாப்பு சேவைகளையும் மனிதவலு சேவைகளையும் வழங்குதல் |

கூட்டுத் தாபனத்தினது இரண்டு துணை நிறுவனங்களும் கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டுள்ளன.

### 2. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய சுருக்கம்

#### 2.1 பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

##### 2.1.1 கணக்குகள் தயாரித்தல் அடிப்படை

குழுவினது கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் (CA - இலங்கை) வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

##### 2.1.2 அளவீட்டு அடிப்படை

இலாபத்தினூடாக அல்லது நட்டத்தினூடாக நியாய விலைப் பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ள நிதி சார்ந்த சொத்துக்களுக்கானவை தவிர, கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்கள் ஒரு வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)**

### 2.1.3 சமர்ப்பணமும் தொழிற்படு நாணயமும்

திரண்ட நிதிக் கூற்றுக்கள் குழுவினது தொழிற்படு மற்றும் சமர்ப்பண நாணயமாகிய இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 2.1.4 இணக்கப்பாடு பற்றிய கூற்று

கூட்டுத் தாபனத்தினதும் அதன் குழுவினதும் 2023 திசம்பர் 31 ஆம் திகதிற்கும் அந்தத் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்குமான கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புகளும் அடங்கிய நிதி நிலைக் கூற்று ('நிதிக் கூற்றுக்கள்'), முழுமையான வருமானக் கூற்று, ஒப்புரவு பற்றிய மாற்றங்கங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல்கள் பற்றிய கூற்று என்பன உள்ளிட்ட கணக்குகள் இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.1.5 நிகழ் விடய எண்ணக்கரு

பணிப்பாளர்கள் ஒரு நிகழும் விடயமாக கூட்டுத் தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் ஆற்றல் தொடர்பான மதிப்பீடொன்றை நடத்தியுள்ளனர். அதனைத் தொடர்ந்து இவர்கள் எந்த விதத்திலும் கூட்டுத் தாபனத்தினது செயல் நடவடிக்கைகளை ஒழித்துக்கட்டுவதற்கோ அல்லது மட்டுப்படுத்துவதற்கோ முடிவுசெய்யவில்லை.

### 2.1.6 ஒத்தீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக கூட்டுத் தாபனத்தினாலும் கூட்டுத் தாபனத்தினது குழுவினாலும் 'நிதிக் கூற்றுக்களின் சமர்ப்பணம்' என்ற இலங்கைக் கணக்கீட்டு நியமம் - இ.க.நி. 01 (LKAS) இற்கு இணங்க பிரயோகிக்கப்பட்டுள்ளன. தற்போதைய சமர்ப்பணத்தை உறுதிசெய்வதற்கு தேவையான போதெல்லாம் ஒத்தீட்டுத் தகவல்கள் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.1.7 பொருண்மையான திரட்டலும் சமப்படுத்தலும்

சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவினங்கள் என்பன இலங்கைக் கணக்கீட்டு நியமம் ஒன்றினால் தேவைப்படுத்தப்படாத அல்லது அனுமதிக்கப்படாத வரையில் அவை சமப்படுத்தப்படுவதில்லை.

பொருண்மையான ஒவ்வொரு விடய வகுதியும் நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக முன்வைக்கப்படுகின்றன. ஒரே மாதிரியான தன்மையுடைய அல்லது தொழிற்பாடுகளையுடைய விடயங்கள், அவை பொருண்மையானதாக மாறாத வரையில் கூட்டு மொத்தமாக முன்வைக்கப்படுவதில்லை.

### 2.1.8 முக்கியமான கணக்கீட்டுத் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள்

குழுவினது நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது வருமானம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் என்பவற்றின் அறிக்கையிடப்பட்டுள்ள தொகைகளில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய தீர்மானங்களையும், மதிப்பீடுகளையும் மற்றும் எடுகோள்களையும் மேற்கொள்வதற்கு முகாமைத்துவத்தைத் தேவைப்படுத்தும். இந்தத் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பவற்றின் காரணமாக சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் கொணரப்படும் தொகைகளுக்கு ஏற்படும் ஏதாவது பொருண்மையான சீராக்கல்கள் அடுத்த நிதியாண்டில் கருத்திற் கொள்ளப்படும்.

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)**

**2.2 திரட்டும் அடிப்படை**

கூட்டிணைந்த நிதிக் கூற்றுக்களில் கூட்டுத் தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் 2023 திசம்பர் 31 ஆம் திகதிற்கான நிதிக் கூற்றுக்கள் உள்ளடங்குகின்றன. துணை நிறுவனங்கள், குழு கட்டுப்பாட்டைப் பெறுகின்ற திகதியாகிய பெறுகைத் திகதியிலிருந்து அல்லது கூட்டிணைக்கப்படும் திகதியிலிருந்து அத்தகைய கட்டுப்பாடு முடிவடைகின்ற திகதி வரைக்கும் அவை தொடர்ந்து கூட்டிணைக்கப்படும்.

**a) துணை நிறுவனங்கள்**

குழு இரண்டில் மூன்றுக்கு அதிக வாக்களிக்கும் உரிமைகளின் பங்குடன் பொதுவாக நிதி மற்றும் இயக்கச் செயற்பாடுகள் சார்ந்த கொள்கைகளை நிருவகிப்பதற்கு நேரடியாக அதிகாரத்தைக் கொண்டுள்ள சகல நிறுவனங்களும் துணை நிறுவனங்களாகும். நடைமுறையில் பிரயோகிக்கக்கூடிய அல்லது மாற்றக்கூடிய சாத்தியமான வாக்களிக்கும் உரிமைகள் இருத்தலும் அதன் பயனும் குழு மற்றைய நிறுவனத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளதா என மதிப்பிடப்படுகின்ற போது கருத்திற்கொள்ளப்படும். துணை நிறுவனங்கள், குழுவுக்கு கட்டுப்பாடு கைமாற்றிக்கொடுக்கப்படும் திகதியிலிருந்து முழுமையாக கூட்டிணைக்கப்பட்டதாகக் காணப்படும். அவற்றின் கட்டுப்பாடு முடிவடைகின்ற திகதியிலிருந்து அவை கூட்டிணைக்கப்படாமல் விட்டுவிடப்படும்.

| நிறுவனத்தின் பெயர் | பயனுள்ள பங்கு |
|---|---|
| வ/ப காணி சீராக்கல் மற்றும் அபிவிருத்திக் கம்பனி (REDECO) | 80% |
| LRDC சேர்விஸெஸ் (ப்ரைவட்) லிமிற்றட்டு | 80% |

கூட்டுத் தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் மொத்த இலாபங்களும் நட்டங்களும் கூட்டிணைக்கப்பட்ட முழுமையான வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன. கூட்டுத் தாபனத்தினதும் அதன் துணை நிறுவனங்களினதும் சகல சொத்துக்களும் பொறுப்புக்களும் திரண்ட நிதி நிலைக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

**b) கட்டுப்பாடு சாராத அக்கறை விடயம்**

குழுவினது தேறிய சொத்துக்களில் வெளிப் பங்குதாரர்களுக்கு இருக்கின்ற அக்கறை விடயமும் வெளிப் பங்குதாரர்களுக்கு ஏற்புடைய வரிக்குப் பின்னருள்ள இலாப விகிதமும் 'கட்டுப்பாடற்ற வட்டி' என்ற விடயத்தின் கீழ், கூட்டிணைந்த முழுமையான வருமானக் கூற்றிலும் கூட்டிணைந்த நிதி நிலைக் கூற்றிலும் தனித்தனியாக எடுத்துரைக்கப்படுகின்றன.

**c) திரட்டலின் பேரில் நீக்கப்பட்டுள்ள கொடுக்கல்வாங்கல்**

குழுக்களுக்கு இடையிலான கொடுக்கல்வாங்கல்களின் பயனாக வரும் குழுக்களுக்கு இடையிலான சகல நிலுவைகளும், வருமான செலவினங்களும், மாறாத இலாபங்களும் நட்டங்களும் மற்றும் பங்குலாபங்களும் முழுமையாக நீக்கப்பட்டுள்ளன.

**2.3 சொத்துக்களும் அவற்றின் விலைமதிப்பீட்டு அடிப்படைகளும்**

**2.3.1 சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன குறைந்த திரண்ட தேய்மானத்தின் அடிப்படையில் கொள்னவு ஆகுசெலவில் அல்லது நிர்மான ஆகுசெலவில் எடுத்துரைக்கப்படுகின்றன. சொத்துக்களை அவற்றின் எதிர்பார்க்கப்பட்ட பாவனையின் நிமித்தம் தொழிற்படும் நிலைக்குக் கொண்டு வருவதற்காக ஏற்படக் கூடிய ஏதாவது செலவு கொள்வனவு செலவில் அல்லது நிர்மாண செலவில் உள்ளடங்கும்.

**தேய்மானம்**

கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றின் எதிர்பார்க்கப்பட்டுள்ள பயனுள்ள பாவனை காலத்தின் பேரிலான ஒரு நேர் நிரல் அடிப்படையில் அவற்றின் ஆகுசெலவைப் பதிவழிக்கும் பொருட்டு 5% வீதத்தில் தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)**

| | |
|---|---|
| குத்தகை ஆதனக் காணி | குத்தகை காலம் |
| முழுஉரித்து காணிகளில் உள்ள கட்டிடங்கள் | 10 முதல் 20 ஆண்டுகள் வரை |
| பாரிய பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திராதிகள் | 10 ஆண்டுகள் |
| சிறிய பொறித்தொகுதிகள் மற்றும் இயந்திராதிகள் | 10 ஆண்டுகள் |
| இலகு வாகனங்கள் | 5 ஆண்டுகள் |
| கனரக வாகனங்கள் | 5 ஆண்டுகள் |
| அலுவலக உபகரணங்கள் | 8 ஆண்டுகள் |
| சமையலறை மற்றும் நலன்புரி உபகரணங்கள் | 10 ஆண்டுகள் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 10 ஆண்டுகள் |
| ஆய்வுகூட மற்றும் அளவையியல் உபகரணங்கள் | 10 ஆண்டுகள் |
| படகு என்ஜின்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 10 ஆண்டுகள் |
| துவிச்சக்கர வண்டிகள் | 2 ஆண்டுகள் |
| கன்வேய்டெர்கள் | 10 ஆண்டுகள் |
| உடற்பயிற்சி உபகரணங்கள் | 10 ஆண்டுகள் |
| சூரிய சக்தி மின் உற்பத்தி முறைமைகள் | 10 ஆண்டுகள் |
| ஏனைய நிலையான சொத்துக்கள் | 10 ஆண்டுகள் |
| ஆண்டனுபவிக்கும் சொந்தக் காணிகளில் உள்ள கட்டிடங்கள் | 10 ஆண்டுகள் |

முழு உரித்துக் காணிகளின் ஆகுசெலவைப் பதிவழிக்கும் பொருட்டு தேய்மான ஏற்பாடு மேற்கொள்ளப்படுவதில்லை.
ஒரு சொத்தின் தேய்மானம் அது பாவனைக்காகக் கிடைக்கின்ற போது

### 2.3.2 கட்புலனாகா சொத்துக்கள்

சொத்துக்களுடன் தொடர்புடைய எதிர்காலப் பொருளாதாரப் பலன்கள் நிறுவனத்திற்கு கிடைக்கும் போது ஒரு கட்புலானாகா சொத்து

### 2.3.3 முதலீடு சார்ந்த சொத்துக்கள்

முதலீடு சார்ந்த ஒரு சொத்து என்பது வாடகை வருமானத்தை ஈட்டுவதற்காக கொள்ளப்படுகின்ற ஆனாலும் வழமையான அலுவல்களில் விற்பனைக்காக அல்லது பொருட்களின் உற்பத்திற்காக அல்லது விநியோகத்திற்காக அல்லது சேவைக்காக அல்லது நிருவாக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாத ஒரு சொத்தாகும். முதலீடு சார்ந்த சொத்துக்கள் கொள்வனவு

ஆரம்பமாகி அந்த சொத்து இனங்காணப்படாது விட்டுவிடப்படுகின்ற போது முடிவடையும்.

தனித்தனியாக கிடைத்த கட்புலனாகா சொத்தின் விலையில் இறக்குமதி வரிகள் மற்றும் திரும்பப்பெற முடியாத கொள்முதல் வரிகள் அடங்கலாக, வணிகத் தள்ளுபடிகள் மற்றும் கழிவுகள் அதேபோல் சொத்தை பயன்படுத்தும் நோக்கத்திற்காக ஆயத்தப்படுத்துவதற்கு செலவாகும் நேரடியான செலவு என்பவற்றை கழித்தபின் அதன் கொள்முதல் விலை அடங்குகின்றது.

ஒரு கட்புலனாகா சொத்து அதன் ஏதாவது திரண்ட கழிவு குறைந்த செலவையும் ஏதாவது திரண்ட நட்டத்தையும் கொண்டிருக்கும்.

**கழிவு**

திட்டவட்டமான ஒரு பாவனை காலத்தை உடைய கட்புலனாகா சொத்துக்களின் கழிவு அந்த சொத்துக்கள் எதிர்பார்த்த பாவனைக்கு கிடைக்கும் நாளில் இருந்து அந்த கட்புலனாகா சொத்துக்களின் மதிப்பிடப்பட்டுள்ள பயனுள்ள பாவனை காலத்தின் மீது ஒரு நேர்நிரல் அடிப்படையில், இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கட்புலனாகா சொத்துக்களின் மதிப்பிட்டபட்டுள்ள பயனுள்ள பாவனை காலம் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கணனிகளின் மென்பாகங்கள் | 10 ஆண்டுகள் |
| ஏனைய கட்புலனாகா சொத்துக்கள் | 10 ஆண்டுகள் |

ஆகுசெலவிலும் அதனையடுத்து அபிவிருத்தி ஆகுசெலவுகளிலும் எடுத்துரைக்கப்படுகின்றன.

### 2.3.4 பொருள் இருப்புக்கள்

பாவனையற்ற வழக்கொழிந்த மற்றும் மந்தமாக நகரும் பொருட்களுக்கான உரிய தள்ளுபடிகள் செய்யப்பட்டதன் பின்னர் பொருட்கள் குறைந்த செலவில் விலைமதிக்கப்பட்டு தேறிய மாறக் கூடிய பெறுமானத்தில் மதிப்பிடப்படுகின்றன. தேறிய மாறக் கூடிய பெறுமானம் என்பது மதிப்பிடப்பட்டுள்ள நிறைவு செலவையும் மற்றும் விற்பனைக்கு தயார்படுத்த தேவையான மதிப்பிடப்பட்டுள்ள செலவையும் பார்க்கிலும் குறைந்த பெறுமானத்தில் வழமையான வர்த்தக செயற்பாடுகளின் போது பொருட்கள் விற்பனை செய்யப்படக் கூடிய விலையாகும்.

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)**

பொருள் பதிவேட்டுப் பொருட்கள் நுகரப்படும் அல்லது விற்பனை செய்யப்படும் போது அளவிடப்பட்டுள்ள சராசரி செலவு சூத்திரத்தை பயன்படுத்தி பொருள் பதிவேட்டுப் பொருட்களின் செலவுகள் வருமானக் கூற்றுக்கு கணக்குக்காட்டப்படுகின்றன.

### 2.3.5 நிகழும் பணி

நிகழும் பணி நிதி நிலைக் கூற்று திகதியில் நிகழுகின்ற நீண்டகால நிர்மாண கருத் திட்டங்களுடன் சம்பந்தப்படுகின்றது. இது கருத் திட்டத்திற்கு சேரக் கூடிய நேரடி மேன்தலை செலவுகள், மூலப்பொருட்கள் மற்றும் தொழிலாளர் செலவு முதலியவற்றை உள்ளடக்குகின்ற நேரடி ஆகுசெலவில் மதிப்பிடப்படுகின்றது.

### 2.3.6 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

வர்த்தக வருமதிகள் நட்டத்திற்கான தேறிய ஏற்பாடுகளை உணர்த்தும் பொருட்டு மதிப்பிடப்படுகின்ற தொகைகளில் இனங்காணப்படுகின்றன. ஏனைய சம்பந்தப்பட்டுள்ள தரப்புகளிடமிருந்து வரவேண்டிய வருமதிகளும் மற்றும் கொடுமதிகளும் நட்டத்திற்கான குறைந்த நியாய விலைப் பெறுமானத்தில் இனங்காணப்படுகின்றன. தீராத மற்றும் சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கு மீளறவிடும் சாத்தியத்தை கருத்திற் கொண்டு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

### 2.3.7 காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும்

காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் கேள்வி வைப்புத்தொகை மற்றும் குறுகிய கால அதிக திரவ முதலீடுகள், அறிந்த காசுத் தொகைகளுக்கு உடனடியாக மாற்றக்கூடியது மற்றும் பெறுமானத்தில் ஏற்படும் மாற்றங்களின் சிறிய ஆபத்து என்பவற்றுக்கு அமைய கையிருப்பில் உள்ள காசாக வரைவிலக்கணப்படுத்தப்படுகின்றது.

காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும் கையிருப்பில் உள்ள காசு, வங்கிகளில் உள்ள REPO, திறைசேரி உண்டியல்கள் தேறிய வங்கி மேலதிகப் பற்றுக்கள் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

### 2.3.8 நிதி சாதனங்கள் - நிதி சார் சொத்துக்கள்

a) **ஆரம்ப இனங்காணல் மற்றும் அளவீடு**

SLFRS 9 நோக்கெல்லையினுள் வருகின்ற நிதி சார்ந்த சொத்துக்கள் ஏனைய முழுமையான வருமானத்தின் (OCI) ஊடாக நியாய விலைப்பெறுமானத்திலும் இலாபத்தின் அல்லது நட்டத்தின் ஊடான நியாய விலைப்பெறுமானத்திலும் கழிவு செலவாக வகைப்படுத்தப்படுகின்றன.

நிதி சார்ந்த சொத்துக்களின் வகைப்படுத்தல் அவற்றை முகாமை செய்யும் முகமாக நிறுவனத்தின் வணிக மாதிரியிலும் நிதி சார்ந்த சொத்துக்களின் இணைந்த காசுப் பாய்ச்சல் சிறப்பம்சங்களிலும் தங்கியிருக்கும். இந்த மதிப்பீடு SPPI என குறிப்பீடுசெய்யப்படுகின்றது. இது ஒரு சாதனளவில் மேற்கொள்ளப்படுகின்றது. வணிக மாதிரி காசுப் பாய்ச்சல்கள் இணைந்த காசுப் பாய்ச்சல்கள்களுக்கும், நிதி சார்ந்த சொத்துக்களின் விற்பனைகளுக்கும் அல்லது இரண்டிற்கும் பயனாக அமையுமா என்பதை நிர்ணயிக்கும். நிதியிடும் கணிசமான ஒரு ஆக்கக்கூறை அல்லது அதற்காக நிறுவனம் பிரயோகித்துள்ள ஒரு ஆக்கக்கூறை உள்ளடக்காத வணிக சார் வருமதிகளின் விலக்களிப்பினால் சொத்துக்கள் கொடுக்கல்வாங்கல் விலையில் அளவிடப்படுகின்றன.

ஆரம்ப இனங்காணலில், நிறுவனம் ஒரு நிதி சார்ந்த சொத்தை நிதி சார்ந்த சொத்துக்களின் கொள்வனவுக்கு நேரடியாக சேர வேண்டிய கொடுக்கல்வாங்கல் செலவுகளிலும் அதன் நியாய விலைப்பெறுமானத்திலும் அளவிடுகின்றது. FVPL இல் கொணரப்படும் நிதி சார்ந்த சொத்துக்களின் கொடுக்கல்வாங்கல் செலவுகள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் காட்டப்படுகின்றன.

காசும் மற்றும் குறுங்கால வைப்புக்களும், வர்த்தக வருமதிகளும் ஏனைய வருமதிகள் மற்றும் குறிக்கப்படாத நிதி சாதனங்களும் நிறுவனத்தின் நிதி சார்ந்த சொத்துக்களின் அடங்குகின்றன.

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)**

### b) அடுத்துவரும் அளவீடு

நிதி சார்ந்த சொத்துக்கள் அடுத்துவரும் அளவீட்டு நோக்கங்களின் நிமித்தம் மூன்று வகுதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

- கழித்த செலவிலான நிதி சார்ந்த சொத்துக்கள்
- OCI ஊடான நியாய விலைப்பெறுமானத்திலான நிதி சார்ந்த சொத்துக்கள்
- இலாபத்தின் அல்லது நட்டத்தின் ஊடான நியாய விலைப்பெறுமானத்திலான நிதி சார்ந்த சொத்துக்கள்

*i) கழித்த செலவிலான நிதி சார்ந்த சொத்துக்கள்*

ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காக ஒதுக்கிவைக்கப்படும் சொத்துக்கள், காசுப் பாய்ச்சல்கள் முழு ஆரம்ப கொடுப்பனவுகளையும் வட்டியையும் பிரதிபலிக்கும் போது கழித்த செலவில் அளவிப்படுகின்றன. பின்வரும் இரண்டு நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்பட்டால், நிறுவனம் நிதி சார்ந்த சொத்துக்களை கழித்த செலவில் அளவிடும்.

- ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிக்கும் பொருட்டு நிதி சார்ந்த சொத்துக்களை ஒதுக்கிவைக்கும் குறிக்கோளுடன் ஒரு வணிக மாதிரியினுள் நிதி சார்ந்த சொத்துக்கள் ஒதுக்கிவைக்கப்படுதல்

- ஆரம்ப நிலுவை தொகையின் மீது முழு ஆரம்ப கொடுப்பனவுகளாகவும் வட்டிகளாகவும் உள்ள காசுப் பாய்ச்சல்களுக்கான குறித்த திகதிகளில் எழும் நிதி சார்ந்த சொத்துக்களின் ஒப்பந்தம் சார்ந்த நிபந்தனைகள்

கழித்த செலவிலான நிதி சார்ந்த சொத்துக்கள் பயனுள்ள வட்டி வீத (EIR) முறையியலை பிரயோகித்து அளவிடப்படுவதோடு நட்டத்திற்கும் உட்படுத்தப்படுகின்றன.

சொத்துக்கள் இனங்காணாமல் விடப்படும், மாற்றியமைக்கப்படும் அல்லது சொத்துக்களுக்கு நட்டம் ஏற்படும் போது, இலாப நட்டங்கள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. திறைசேரியின் பிணைமுறிகளும் வங்கிகளிலுள்ள நிலையான வைப்பு முதலீடுகளும் நிறுவனத்தின் கழித்த செலவிலான நிதி சார்ந்த சொத்துக்களில் அடங்குகின்றன.

*ii) FVOCI ஊடான நியாய விலைப்பெறுமானத்திலான நிதி சார்ந்த சொத்துக்கள்*

ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவும் நிதி சார்ந்த சொத்துக்களை விற்பனை செய்வதற்காகவும் ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் அந்த சொத்துக்களின் காசுப் பாய்ச்சல்கள் முற்றிலும் ஆரம்ப கொடுப்பனவுகளையும் வட்டியையும் பிரதிபலிக்கின்ற போது FVOCI விலையில் அளவிடப்படுகின்றன. பின்வரும் இரண்டு நிபந்தனைகளும் பூர்த்திசெய்யப்பட்டால் நிறுவனம் பற்று சாதனங்களை OCI ஊடாக நியாய விலைப்பெறுமானத்தில் அளவிடுகின்றது.

- ஒப்பந்த காசுப் பாய்ச்சல்களை சேகரிப்பதற்காகவும் விற்பனை செய்வதற்காகவும் ஒதுக்கிவைக்கும் குறிக்கோளுடன் ஒரு வணிக மாதிரியினுள் நிதி சார்ந்த சொத்துக்கள் ஒதுக்கிவைக்கப்படுதல்.

- ஆரம்ப நிலுவை தொகையின் மீது முழு ஆரம்ப கொடுப்பனவுகளாகவும் வட்டிகளாகவும் உள்ள காசுப் பாய்ச்சல்களுக்கான குறித்த திகதிகளில் எழும் நிதி சார்ந்த சொத்துக்களின் ஒப்பந்தம் சார்ந்த நிபந்தனைகள்

பாதகமான இலாபங்களை அல்லது நட்டங்களை, வட்டி வருமானத்தை மற்றும் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும் நாணயமாற்று இலாபங்களை மற்றும் நட்டங்களை இனங்காணுவதற்காக தவிர, கொணரப்படும் தொகையிலுள்ள நகர்வுகள் OCI இன் ஊடாக கொள்ளப்படுகின்றன. நிதி சார்ந்த சொத்துக்கள் இனங்காணாமல் விட்டுவிடப்படும் போது OCI இல் முன்னர் இனங்காணப்பட்டுள்ள திரண்ட இலாபம் அல்லது நட்டம் நிறுவனத்திலிருந்து இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்தப்பட்டு ஏனைய இலாபங்களில் /(நட்டங்களில்) இனங்காணப்படுகின்றது. இந்த நிதி சார்ந்த சொத்துக்களிலிருந்து வரும் வட்டி பயனுள்ள வட்டி வீத முறையியலை பிரயோகித்து நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. வெளிநாட்டு நாணயமாற்று இலாபங்களும் நட்டங்களும் ஏனைய இலாபங்களில் /(நட்டங்களில்) எடுத்துரைக்கப்படுகின்றன. பாதகமான செலவுகள் வருமான கூற்றில் தனியான நிரல் விடயமாக எடுத்துரைக்கப்படுகின்றன.

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)**

அறிக்கையிடப்படும் திகதியில் OCI இன் ஊடான நியாய விலைப்பெறுமானத்தில் கொணரப்படும் சந்தேகத்திற்கிடமான சாதனங்கள் ஏதும் நிறுவனத்திடம் கிடையாது.

### 2.4 பொறுப்புக்களும் மற்றும் ஏற்பாடுகளும்

#### 2.4.1 பொறுப்புக்கள்

நிதி நிலை கூற்றின் தற்போதைய பொறுப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பொறுப்புகள், நிதி நிலை கூற்றிலிருந்து ஒரு வருடத்திற்குள் குறைவானவை என எதிர்பார்க்கப்படுகின்றன. நடைமுறை அல்லாத பொறுப்புகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளவை அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் குறிப்பிட்டவொரு நேரத்தில் வரவிருப்பவை என எதிர்பார்க்கப்படுகின்றன.

#### 2.4.2 ஓய்வூதிய நன்மைகள் கடப்பாடு

#### 2.4.2.1 திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் - பணிக்கொடை

திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் தொடர்பான நிதி நிலைக் கூற்றில் இனங்காணப்படும் பொறுப்பானது 'ஊழியர் நன்மைகள்' என்ற விடயத்துடன் தொடர்புடைய LKAS 19 என்ற கணக்கீட்டு நியமத்தினால் இனங்காணப்படுகின்றவாறு கருத்திட்டம் தொடர்பான அலகு கடன் (க.அ.க.) முறையியலை பிரயோகித்து வருடாந்தம் சுயாதீன மதிப்பீட்டு தரப்புகளினால் கணிப்பிடப்படுகின்ற திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் கடப்பாட்டின் தற்போதைய பெறுமானமாகும். திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டத்திற்கான உண்மையான இலாபங்களும் நட்டங்களும் ஏனைய முழுமையான வருமானத்தில் அந்த இலாபங்களும் நட்டங்களும் எழுகின்ற காலப் பகுதியில் முழுமையாக இனங்காணப்படுகின்றன.

எனினும், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு இணங்க, ஊழியர் ஒருவருக்கான பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான பொறுப்பு ஐந்து வருட தொடர் சேவை பூர்த்தியின் பின்னர் எழுகின்றது.

#### 2.4.2.2 திட்டவட்டமான ஓய்வூதிய பங்களிப்புத் திட்டங்கள்

ஊழியர்கள் அந்தந்த நியதிச்சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்வதற்கு தகுதியுடையவர்களாவர்.

**(a) ஊழியர் சேமலாப நிதி**

கூட்டுத் தாபனம் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 12% வீதத்தை பங்களிப்பு செய்யும் அதே வேளையில் ஊழியர்கள் 10% வீதத்தை பங்களிப்பு செய்ய வேண்டும்.

**(a) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி**

கூட்டுத் தாபனம் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ஊழியர்களின் சார்பாக 3% வீதத்தை பங்களிப்பு செய்யும்.

#### 2.4.3 வரி விதிப்பு

**a) வருமான வரி**

வருமான வரிக்கான ஏற்பாடு நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டது போல் வருமானத்தினதும் செலவினத்தினதும் அடிப்படையில் அமைந்திருக்கும். இந்த வருமான வரி 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் அதனையடுத்து அந்த சட்டத்திற்கான திருத்தங்களுக்கும் இணங்க கணிப்பிடப்படுகின்றது.

**b) பிற்போடப்பட்டுள்ள வரி**

பிற்போடப்பட்டுள்ள வரி அறிக்கையிடப்படும் திகதியில் நிதி சார்ந்த அறிக்கையிடல் நோக்கங்களின் நிமித்தம் சொத்துக்களின் வரி அடிப்படைகளுக்கும் மற்றும் பொறுப்புகளுக்கும் அதே நேரம் அவற்றின் கொணரப்படும் தொகைகளுக்கும் இடையிலான தற்காலிக வித்தியாசங்களின் அடிப்படையில் பொறுப்பு முறையியலை பிரயோகித்து ஏற்பாடு செய்யப்படுகின்றது.

பிற்போடப்பட்டுள்ள வரி குறித்த ஆண்டில் வரி வீதங்கள் ஏற்புடையதாகும் என எதிர்பார்க்கப்படும் அல்லது விதிக்கப்பட்டுள்ள வரி வீதங்களின் (மற்றும் வரிச் சட்டங்கள்) அல்லது அறிக்கையிடப்படும் திகதியில் பொருண்மையாக சட்டமாக்கப்பட்டுள்ள அத்தகைய வரிகளின் அடிப்படையில் தீர்ப்பனவு செய்யப்படும் என்ற அளவுக்கு நம்பத்தகுந்த விதத்தில் அளவிடப்படலாம்.

#### 2.4.4 அரசாங்க மானியங்கள்

நீண்டகால சொத்துக்கள் அமைப்பில் கிடைக்கும் அரசாங்க மானியம் பிற்போடப்பட்டுள்ள வருமானமாக இனங்காணப்பட்டுள்ளது. இது வருடாந்தம் மூலதன அணுகுமுறையின் அடிப்படையில் சொத்துக்களின் பாவனை

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)**

காலத்தின் மீது ஒரு வருமானமாகவும் இனங்காணப்படுகின்றது.

இயக்கச்செயற்பாடுகள் தொடர்பில் குறித்த ஆண்டு காலப் பகுதியில் கிடைத்த அரசாங்க மானியங்கள் (நீண்டகால சொத்துக்கள் தவிர) முழுமையான வருமானக் கூற்றில் முழுமையாக இனங்காணப்பட்டுள்ளன. தொடர்புடைய செலவுகள் அதே காலப் பகுதியில் முழுமையான நிதிக் கூற்றுக்களுக்கு கொண்டுவரப்படுகின்றன.

அரசாங்க மானியங்களுடன் இணைகின்ற நிபந்தனைகள் மற்றும் ஏனைய இடைநேர் விடயங்கள் என்பன கருத்திற் கொள்ளப்பட்டு வெளிப்படுத்தப்படும்.

### 2.5 முழுமையான வருமானக் கூற்று

#### 2.5.1 வருமானம்

கூட்டுத் தாபனம் செயலாற்றுகை சார்ந்த கடப்பாடுகள் திருப்தியடைகின்ற போது வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து வருமானத்தை இனங்கண்டுகொள்கின்றது. கீழ்காணும் விஷேட தகவுதிறன்கள் வருமானத்தை இனங்காணும் நோக்கத்திற்காக பிரயோகிக்கப்படுகின்றன.

**a) பொருட்களின் விற்பனை**

பொருட்களின் விற்பனையிலிருந்து வரும் வருமானம் வழமையாக பொருட்கள் விநியோகிக்கப்படுவதன் பேரில் கொள்வனவு செய்யும் தரப்புக்கு அந்த பொருட்களின் உடமை சென்றுள்ள மற்றும் கணிசமான பொறுப்புக்கள் இருக்கின்ற போது இனங்காணப்படுகின்றது.

**b) சேவைகள் வழங்கல்**

ஒரு வாடிக்கையாளர் தரப்பு சேவையை வழங்க வாக்குறுதியளித்து பொறுப்புச்சாட்டுவதன் மூலம் ஒரு செயலாற்றுகைக் கடப்பாட்டில் கூட்டுத் தாபனம் திருப்திகொள்கின்ற போது, சேவை வழங்கலிலிருந்து வருமானம் இனங்காணப்படுகின்றது.

**c) காணிகளின் விற்பனையிலிருந்து வரும் வருமானம்**

காணிகள் கேள்வி மனுக்களின் அல்லது ஏனைய முறை மூலம் விற்பனை செய்யப்படுகின்ற போது, விற்பனைப் பெறுமானம் பொதுவாக காணியின் உறுதி உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள அல்லது சகல கொடுப்பனவுகளும் கிடைத்துள்ள மற்றும் உறுதி உரிமை மாற்றலின் மூலம் அநேகமாக விற்பனை நிறைவேற்றப்படாத போது வருமானத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

**d) நிர்மாண ஒப்பந்தங்கள்**

நிர்மாணம் சார்ந்த வருமானம் ஒப்பந்தத்தில் உடன்பட்டுள்ள ஆரம்ப தொகையையும், ஒப்பந்தப் பணியையும், கோரல்களையும் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவுகளையும் அநேகமாக வருமானத்திற்கு பயனாக அமைந்த நம்பத்தகுந்த விதத்தில் அளவிடப்படலாம் என்ற அளவுக்கு அவற்றின் ஏதாவது வித்தியாசங்களையும் உள்ளடக்கியிருக்கும்.

SLRFS 15 நியமத்திற்கு இணங்க செயலாற்றுகை சார்ந்த கடப்பாட்டின் முழுமையான திருப்தியை நோக்கி வெளியீட்டு முறையியலைப் பிரயோகித்து ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்ற காலப் பகுதியில், கூட்டுத் தாபனம் நிர்மாண ஒப்பந்தங்களிலிருந்து வரும் வருமானத்தை இனங்காணுகின்றது. ஒப்பந்த செலவுகள் அவை தொடர்புபடுகின்ற பணி செயலாற்றப்படுகின்ற கணக்கீட்டுக் காலங்களின் போது வழமையாக இனங்காணப்படுகின்றன.

எனினும், வீடமைப்பு அமைச்சின் நிலையான தொழில்நுட்பக் குழுவின் (STC) அங்கீகாரம் தேவைப்படும் நிர்மாண ஒப்பந்தங்களின் மீதான வருமானம் STC மூலம் அத்தகைய அங்கீகாரம் வழங்கப்படும் வரை பொறியியலாளர் சான்றளித்த பணியின் பெறுமானத்தில் 90% வீதத்தில் மட்டுமே மட்டுப்படுத்தப்படுகின்றது.

**e) வட்டி வருமானம்**

வட்டி வருமானம் ஒரு அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

**f) பங்குலாப வருமானம்**

பங்குலாப வருமானம், பங்குலாபம் கிடைப்பதற்கான உரிமை உறுதிசெய்யப்படும் போது இனங்காணப்படுகின்றது.

**g) ஏனைய வருமானம்**

ஏனைய வருமானம் ஒரு அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுகின்றது.

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)**

### 2.5.2. பற்று சார்ந்த செலவு

**முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் (தொடர்ச்சி)**

எதிர்பார்க்கப்பட்டுள்ள பாவனைக்காக அல்லது விற்பனைக்காக தயாராகுவதற்கு கணிசமான காலத்தை எடுக்கின்ற ஒரு சொத்தின் உற்பத்திற்கு அல்லது நிர்மாணத்திற்கு அல்லது கொள்வனவுக்கு நேரடியாக சேரடிக் கூடிய பற்று செலவுகள் அந்த சொத்தினது செலவின் பாகமாக மூலதனமாக்கப்படுகின்றன. ஏனைய சகல பற்று சார்ந்த செலவுகளும் அவை ஏற்படும் காலப் பகுதியில் செலவுகளாக கணிக்கப்படுகின்றன. ஒரு நிறுவனம் நிதிகளை கடனாக பெறுவது தொடர்பாக செலவாகும் வட்டியும், ஏற்படும் ஏனைய செலவுகளும் பற்று சார்ந்த செலவுகளில் உள்ளடங்குகின்றன.

### 2.5.3 அதிவிஷேட விடயங்கள்

பொருத்தமான சகல விபரங்களும் கணக்குகளுக்கான குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.6 நிதி நிலைக் கூற்று திகதிற்கு பின்னர் நிகழும் சம்பவங்கள்

நிதி நிலைக் கூற்று திகதிற்கு பின்னர் நிகழுகின்ற சகல பொருண்மையான விடயங்களும் கருத்திற் கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களுக்கான அந்தந்தக் குறிப்புகளில் பொருத்தமான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | குழு | | கூட்டுத்தாபனம் | |
|---|---|---|---|---|---|
| | | 2023 | 2022 | 2023 | 2022 |
| | | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| 1 | **வருமானம்** | | | | |
| | திறைசேரி நிதியிட்டுள்ள கருத் திட்டங்களிலிருந்து கிடைத்த வருமானம் | 2,521,520 | 748,404 | 2,521,520 | 748,404 |
| | வாடிக்கையாளர் கருத்திட்டங்களிலிருந்து கிடைத்த வருமானம் | 781,744 | 1,104,352 | 719,585 | 1,082,429 |
| | கடல் மணல் விற்பனை | 916,918 | 1,896,316 | 915,237 | 1,896,290 |
| | காணிகள் விற்பனை | 720,000 | 96,000 | 720,000 | 96,000 |
| | காணிகள் குத்தகை | 150,172 | 151,154 | 150,172 | 151,154 |
| | உசாதுணை சேவைகள் | 33,383 | 22,203 | 33,383 | 22,203 |
| | காணி விடுவிப்பு அங்கீகாரம் அளித்தலுக்கான வருமானம் | 62,733 | 42,509 | 62,733 | 42,509 |
| | ஓய்வுப் பூங்காக்களிலிருந்தும் பொழுதுபோக்கு பிரிவுகளிலிருந்தும் கிடைத்த வருமானம் | 155,872 | 122,247 | 155,872 | 115,913 |
| | கழிவு முகாமைத்துவ பூங்கா வருமானம் | 98,234 | 113,070 | 98,234 | 113,070 |
| | EMT ஆய்வுகூட வருமானம் | 2,914 | 4,579 | 2,914 | 4,579 |
| | இயந்திராதிகள் வாடகை வருமானம் | 24,864 | 9,819 | 24,864 | 9,819 |
| | பாதுகாப்பு சேவைகளிலிருந்து கிடைத்த வருமானம் | 3,109,736 | 2,367,705 | - | - |
| | குற்றிகளினதும் ஹியூம் குழாய்களினதும் விற்பனை | 34,173 | 46,906 | - | - |
| | ஏனைய பொருட்கள் விற்பனை மற்றும் சேவைகள் வழங்கல் | 26,567 | - | 26,567 | 7,586 |
| | | **8,638,830** | **6,725,264** | **5,431,081** | **4,289,956** |
| 2 | **நேரடி செலவு** | | | | |
| | திறைசேரி நிதியிட்டுள்ள கருத்திட்டங்கள் மீதான செலவு | 1,488,329 | 459,736 | 1,931,225 | 688,077 |
| | வாடிக்கையாளர் கருத்திட்டங்கள் மீதான செலவு | 599,229 | 543,827 | 676,235 | 864,283 |
| | விற்பனை செய்த கடல் மணலுக்கான செலவு | 302,835 | 831,362 | 312,742 | 833,491 |
| | விற்பனை செய்த காணிகளுக்கான செலவு | 273,028 | 631 | 273,028 | 631 |
| | உசாதுணை சேவைகள் செலவு | 2,715 | 582 | 2,715 | 582 |
| | பாதுகாப்பு சேவைகள் வழங்கல் செலவு | 3,341,084 | 2,638,210 | - | - |
| | விற்பனை செய்த குற்றிகளுக்கும் ஹியூம் குழாய்களுக்கும் உரிய செலவு | 38,720 | 35,058 | - | - |
| | விற்பனை செய்த ஏனைய பொருட்களுக்கும் வழங்கிய சேவைகளுக்கும் உரிய செலவு | 41,127 | 9,649 | 41,127 | 9,649 |
| | | **6,087,067** | **4,519,055** | **3,237,072** | **2,396,713** |
| 3 | **ஏனைய இயக்கச் செயற்பாட்டு வருமானம்** | | | | |
| | வாடகை வருமானம் | 64,383 | 210,435 | 68,536 | 224,362 |
| | விளம்பரப் பலகை வருமானம் | 15,296 | 4,140 | 15,296 | 4,140 |
| | PPE விற்பனை மீதான இலாபம் | 346 | (8) | 329 | (88) |
| | சேகரித்த சட்டமுறையான கட்டணங்கள் | 3,909 | 2,877 | 3,909 | 2,877 |
| | சுற்றுலா பங்களாக்களிலிருந்து கிடைத்த வருமானம் | 6,376 | 5,035 | 6,376 | 5,035 |
| | முறிகளை பணமாக மாற்றுதல் | 6,629 | 9,662 | 6,629 | 9,662 |
| | பயன்பாட்டு சேவை செலவுகள் மீளறவீடு | 20,552 | 12,694 | 20,552 | 12,694 |
| | விவசாயப் பண்ணை வருமானம் | 918 | 1,006 | 918 | 1,006 |
| | ஆவணக் கட்டணம், விநியோகத் தரப்பு பதிவுக் கட்டணம் | 2,277 | 2,435 | 2,277 | 2,435 |
| | சுதுநெலும்புர கருத்திட்டத்தின் வருமானம் | 3,281 | 3,281 | 3,281 | 3,281 |
| | வாகனம் நிறுத்தும் நிலையத்தின் வருமானம் | 33,482 | 3,337 | 33,482 | 3,337 |
| | நானாவித வருமானம் | 45,516 | 27,290 | 19,730 | 7,518 |
| | | **202,965** | **282,184** | **181,315** | **276,259** |
| 4 | **இயக்கச் செயற்பாடுகளிலிருந்து வரும் இலாபம்/(நட்டம்)** | | | | |
| | *சகல செலவினங்களும் உள்ளடங்கலாக கணக்கீடு செய்யப்பட்டதன் பின்னர் எடுத்துரைக்கப்பட்டுள்ள:* | | | | |
| | பணிப்பாளர்களின் வேதனாதிகள் | 1,508 | 1,307 | 942 | 808 |
| | கணக்காய்வாளர்களின் கட்டணங்கள் | 2,593 | 3,423 | 1,264 | 1,960 |
| | திட்டவட்டமான ஓய்வூதியப் பங்களிப்புத் திட்ட செலவு - ஊ.சே.நி, ஊ.ந.நி. | 130,252 | 130,084 | 119,107 | 118,192 |
| | திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்ட செலவு - பணிக்கொடைக் கொடுப்பனவு | 131,237 | 113,503 | 72,406 | 56,852 |
| | நாணயமாற்று இலாபம்/(நட்டம்) | (71,121) | 263,103 | (71,121) | 263,103 |
| | பதிவழித்த தீராத பற்றுக்கள் | - | 3 | - | 3 |
| | நன்கொடையும் CSR செயற்பாடுகளும் | 201,605 | 378 | 195,687 | 282 |
| | தீராத சந்தேகத்திற்கிடமான பற்றுக்களுக்கான ஏற்பாடு/ (ஒதுக்கம்) | 4,013 | (38,638) | 5,807 | (38,564) |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

| | | குழு | | கூட்டுத்தாபனம் | |
|---|---|---|---|---|---|
| | | 2023 | 2022 | 2023 | 2022 |
| | | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| 5 | **நிதிசார் செலவுகள்** | | | | |
| | வங்கிக் கடன்கள் மீதான வட்டி | 394,748 | 218,532 | 389,610 | 213,107 |
| | சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளுக்காக செலுத்த வேண்டிய நஷ்டஈடு மீதான வட்டி | 5,161 | 5,900 | 5,161 | 5,900 |
| | மேலதிகப் பற்றுக்கள் மீதான வட்டி | 1,814 | 1,490 | - | - |
| | குத்தகைகள் மீதான நிதிசார் கட்டணங்கள் | - | 244 | - | - |
| | செலுத்திய ஏனைய வட்டிகள் | - | 1,010 | - | 965 |
| | | **401,723** | **227,176** | **394,771** | **219,972** |
| 6 | **நிதிசார் வருமானம்** | | | | |
| | REPO முதலீடுகள் மீதான வட்டி வருமானம் | 33,595 | 154,767 | 19,259 | 146,274 |
| | நிலையான வைப்பு முதலீடுகள் மீதான வருமானம் | 1,495,178 | 1,028,500 | 1,479,436 | 1,017,575 |
| | திறைசேரி பிணைமுறி முதலீடுகள் மீதான வட்டி | 104,654 | - | 104,654 | - |
| | வெளிநாட்டு நாணய வைப்பு மீதான வட்டி வருமானம் | 9,563 | 14,236 | 9,563 | 14,236 |
| | ஊழியர் கடன் மீதான வட்டி | 16,416 | 8,007 | 16,148 | 7,655 |
| | சம்பந்தப்பட்டுள்ள தரப்புக் கடன்கள் மீதான வட்டி | - | - | 2,760 | 2,760 |
| | ஏனைய மூலங்கள் மீதான வட்டி வருமானம் | 4,999 | 2,133 | 4,999 | 2,133 |
| | | **1,664,405** | **1,207,643** | **1,636,819** | **1,190,633** |
| 7 | **வரிவிதிப்பு** | | | | |
| | நடைமுறை ஆண்டிற்கான வருமான வரிக்கான ஏற்பாடு (7.1) | 111,069 | 307,802 | 66,725 | 273,295 |
| | முன்னைய ஆண்டுகளுக்கான குறைந்த /(மேலதிக ஏற்பாடு) | 78,853 | 145,754 | 82,007 | 145,754 |
| | பிற்போடப்பட்டுள்ள வரி ஏற்பாடு/ (ஒதுக்கம்) (7.2) | (59,834) | 17,204 | (22,792) | 33,835 |
| | மூலதன மானிய வரி | 134,092 | - | 134,092 | - |
| | | **264,180** | **470,760** | **260,032** | **452,884** |
| 7.1 | **வருமான வரி** | | | | |
| | வரிக்கு முன்னருள்ள இலாபம்/நட்டம் | **1,334,872** | **854,339** | **1,223,298** | **761,037** |
| | கழிக்குக: விலக்களிப்பு மற்றும் விலக்களித்த வருமானம் | (2,472,260) | (1,647,621) | (2,441,897) | (1,639,148) |
| | கூட்டுக: அனுமதிக்கத்தகாத செலவுகள் | 1,067,982 | 1,156,213 | 988,314 | 1,080,850 |
| | கழிக்குக: அனுமதிக்கத்தகு செலவுகள் | (775,094) | (405,839) | (730,397) | (366,932) |
| | வணிகத்திலிருந்து கிடைக்கும் இலாபம்/(நட்டம்) | (844,500) | (42,908) | (960,682) | (164,193) |
| | வட்டி வருமானம் | 1,723,839 | 1,176,396 | 1,708,097 | 1,176,396 |
| | வரிவிதிக்கத்தகு வருமானம் | **879,339** | **1,133,488** | **747,415** | **1,012,203** |
| | பயன்படுத்தாத வரி நட்டம் | 15,890 | 14,397 | - | - |
| | கழிக்குக: தகுதியான கொடுப்பனவு | (525,000) | - | (525,000) | - |
| | வரிவிதிக்கத்தகு வருமானம் | **370,229** | **1,147,885** | **222,415** | **1,012,203** |
| | ஏற்புடைய வரி வீதம் | 30% | 24%and30% | 30% | 24%and30% |
| | முன்னைய ஆண்டிற்கான வருமான வரி ஏற்பாடு | **111,069** | **307,802** | **66,725** | **273,295** |
| 7.2 | **பிற்போடப்பட்டுள்ள வரி ஏற்பாடு/ (ஒதுக்கம்)** | | | | |
| | *வருமான கூற்று* | | | | |
| | பிற்போடப்பட்டுள்ள வரி ஏற்பாடு/ (ஒதுக்கம்) | (59,834) | 17,204 | (22,792) | 33,835 |
| | *ஏனைய முழுமையான வருமான கூற்று* | | | | |
| | திட்டவட்டமான ஓய்வூதிய நன்மைகள் திட்டம் மீதான உண்மையான இலாபத்திற்கு/(நட்டத்திற்கு) சேர வேண்டிய பிற்போடப்பட்டுள்ள வரி ஏற்பாடு/(ஒதுக்கம்) | (4,747) | 11,679 | (10,737) | 11,786 |
| | | (64,581) | 28,883 | (33,529) | 45,621 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

## 8 A சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் (குழு)

| | செலவு /விலைமதிப்பீடு | | | | | தேய்மானங்கள் | | | | தேறிய புத்தகப் பெறுமானம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
